

ஞானச்சுடர்
மாசி
2010
ஓம்
முருகா
வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ



# குறள்வழி

**மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.**

பொருள் : இல்லத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகளையுடைய வளாகிக் கணவனின் வருவாய்க் கேற்றபடி செலவுசெய்து வாழ்கின்றவளே சிறந்த மனைவியாவாள். (51)

**மனைமாட்சி யில்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் [து] ஆயினும் இல்.**

பொருள் : இல்வாழ்க்கைக்கேற்ற சிறந்தகுணங்கள் மனைவியிடம் இல்லையாயின் அவ்வாழ்க்கைச் செல்வத்தால் எவ்வளவு சிறப்புப் பெற்றதாயினும் மேம்பட்டதாகாது. (52)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# நற்சிந்தனை




**மறப்பேனோ குருநாதன் தன்னை**

**திருத்தாண்டகம் – 4**

**பாரொடு விண்ணாய்ப் பரந்தான் கண்டாய்**
**பாவிப்பார் பாவம் அறுப்பான் கண்டாய்**
**நீரொடு மதிசூடி நின்றான் கண்டாய்**
**நேரிழையாள் ஒருபாகங் கொண்டான் கண்டாய்**
**காரொடு நேர்பொருவும் கண்டன் கண்டாய்**
**கருதுவார் கருத்தினி லிருப்பான் கண்டாய்**
**சீரொடுசேர் திரையிலங்கை வாழ்வான் கண்டாய்**
**சிவனென்னும் பெயருடைய செல்வன் றானே 1**

**பக்திசெய்யும் உத்தமர்தம் மனத்தான் கண்டாய்**
**பண்டுகடல் நஞ்சுண்ட கண்டன் கண்டாய்**
**நித்தியனாய் நின்மலனாய் நிற்பான் கண்டாய்**
**நினைந்துருகும் அடியவரை யாள்வான் கண்டாய்**
**தித்திக்கும் தேனொடுபா லானான் கண்டாய்**
**செழுவரையை வில்லாக வளைத்தான் கண்டாய்**
**எத்திசையும் புகழிலங்கை. வாழ்வான் கண்டாய்**
**என்னையென்றும் பிரியாத செல்வன் றானே 2**

# ஞானச்சுடர்



கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 146

## 2010 மாசி பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| நந்திக்கொடி சைவக்கொடி | த. துரைராசா | 01 |
| இந்து மதமும்... | நா. நல்லதம்பி | 02 - 05 |
| வேண்டுதல்கள் | திருமதி. சி. யோகேஸ்வரி | 06 - 08 |
| உண்மையே உனை.... | இராசையா ஸ்ரீதரன் | 09 - 10 |
| ஆசாரக்கோவை | - | 11 - 12 |
| தினம் தினம் ஆனந்தமே | சத்குரு ஜக்கி வாசுதேவ் | 13 - 14 |
| அகந்தை அகற்றும் ஆன்மீகம் | க. சிவசங்கரநாதன் | 15 - 17 |
| நித்திய அன்னப்பணி | - | 18 - 19 |
| தவமுனிவனின் தமிழ் மந்தி... | சிவ. மகாலிங்கம் | 20 - 24 |
| உயர்வான வாழ்வு | இ. சாந்தகுமார் | 25 - 26 |
| திருநீறு | வாரியார் சுவாமிகள் | 27 |
| சுந்தரர் பாடிய... | ச. லலீசன் | 28 - 30 |
| கந்தன் பிறந்தான் | கு. சிவபாலராஜா | 31 - 33 |
| பாம்பன் குமரகுருதாச.... | திருமதி சி. ஜனகா | 34 - 35 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 36 - 38 |
| கந்தரநுபூதிப் பெருவிழா | செல்வன் தி. மயூரகிரி | 39 - 40 |
| வாராந்த நிகழ்வின்... | - | 41 - 44 |
| மனிதப் பிறவியின் மாண்பு | செல்வி அ. கந்தையா | 45 - 46 |
| நவீன சீர்திருத்தவாதி... | செல்வி த. அம்பாலிகா | 47 - 49 |
| சிறுவர் கதைகள் | - | 50 - 51 |
| சிவபுராணம் | சு. அருளம்பலவனார் | 52 - 53 |
| நால்வரும் அருணகிரியும் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 54 - 56 |
| விஞ்ஞானமும்... | பொ. சோமசுந்தரம் | 57 - 60 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 61 - 64 |
| செய்திச் சிதறல்கள் | - | 65 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 66 - 70 |


அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா


**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 - 2263406, 021 3219599

Web Site : WWW. Sannithiyan.org

பதிவு இல. Q.D/46/NEWS/2010

அச்சகம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

# ஞானச்சுடர் 2010 மாசி மலர்



உ

# ஞானச்சுடர்

# தை மாத வெளியீடு

**வெளியீட்டுரை -**

2010ஆம் ஆண்டு தை மாத ஞானச்சுடர் மருக்கான வெளியீட்டுரையினை ஸ்கந்த வரோதயக் கல்லூரி அதிபரும், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவருமான ஆறு. திருமுருகன் அவர்கள் நிகழ்த்தினார்.

அவர் தம் உரையின் போது இன்றைய சமூகத்தின் தேவைகளை அறிந்து அதற் கேற்றவாறு செயற்பட்டு சிறப்பானதொரு உயர்ந்த இடத்தை வகித்துக் கொண்டிருக்கும் சந்நிதியான் ஆச்சிரமம் அன்னதானப் பணி மாத்திரமல்லாது பல்வேறு பட்ட பணிகளையும் ஆற்றி வருவது போற்றுதற்குரிய ஒரு விடயமாகும். இவ்வாறான செயற்பாட்டின் மூலம் சமூகம் உயர் நிலையை அடைவதற்கு சந்நிதியான் ஆச்சிரமம் காரணகர்த்தாவாக விளங்கு கின்றது. அத்துடன் சைவ மக்களது ஆன்மீக வளர்ச்சிக்கும் தன்னாலான பங்களிப்பை இம்மலர் வெளியிடுவதனூடாகவும் வாராந்த நிகழ்வுகள், விசேட நிகழ்வுகள் போன்றவற்றை நிகழ்த்துவதனூடாகவும் சைவ சமயம் மேம்படுத்துகின்றது என்றால் அது மிகையாகாது என்பதை எடுத்துக் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை-**

தை மாத 145ஆவது மலருக்கு வல்வை. சிவகுரு வித்தியாசாலை அதிபரும், பல்வேறு பட்ட வகையில் ஆச்சிரமத்துடன் தனது நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளவருமான திரு. ஆ. சிவநாதன் அவர்கள் மதிப்பீட்டுரையினை நிகழ்த்தினார்கள்.

அவரது மதிப்பீட்டுரையின்போது, இம்மலரானதுபல்வேறு இடர்கள் மத்தியிலும் மாதந் தவறாது வெளியிடப்பட்டு வருவதும் சந்நிதி வேற்பெருமானது அருளுடன் கூடிய சிறப்பு அம்சமாகும். சந்நிதி முருகனது திருவருளும் ஆச்சிரம சுவாமிகளின் குருவருளும் நிறைந்த இவ்வேளையில் மலரை மதிப்பீடு செய்யும் சிறந்தபேறு வருடாவருடம் எனக்கு கிடைப் பதையிட்டு பூரிப்படைகின்றேன் என்றும் இம்மலரில் இடம்பெறும் ஆக்கங்கள் ஒவ்வொரு மனிதனது சிந்தனைகளையும் தூண்டக்கூடியவாறும் அமைந்துள்ளது. அத்துடன் மாண வர்கட்கு ஏற்றவாறும், சிறுவர்கட்கேற்றவாறும் ஆராய்ச்சிகளுடன் கூடிய ஆக்கங்கள் அமைந் திருப்பது இம்மலரின் தரத்தை மிகவும் உயர்த்துகின்றது.

இவ்வகையான பல்வேறுபட்ட வளர்ச்சிகளுடன் கூடிய ஆக்கங்கள், கவிதைகள், சிறு செய்திகள், சுடர்தரும் தகவல்கள் ஆகியவற்றின் சிறப்புக்களை சபையில் கூடியிருந்த முருகனடியார்களுக்கு விளக்கிக் கூறி தனது உரையை நிறைவு செய்தார்.

# ஞானச்சுடர் 2010 மாசி மலர்



ஒவ்வொரு மனிதனும் தான் இவ்வுலகில் வாழும் காலத்திலேயே பல் வேறு பட்டங்களையும், கௌரவங்களை யும் தான் வாழும் சமூகம் அவனுக்கு வழங்கும் போது முழுமையடைகிறான் என்பதில் எவ்வித சந்தேகங்களு மில்லை.

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கு மாங்கே பொசியுமாம்... என்ற மூது மொழிக்கமைவாக சமூகத்தில் நன்மை செய்யக்கூடிய மனப்பான்மையுடன் ஒரு வர் இருப்பாரேயானால் அச்சமூகத்தி லுள்ள நல்லவர்கள் மேம்படுவதோடு அவரைச் சார்ந்தவர்களும் ஏதோவொரு வகையில் மேம்பாடடைவார்கள் என்பது திண்ணம்.

இவ்வாறான அறிஞர்களை, நல்லவர்களை எமது சமூகம் பல்வேறு தரத்திலும் கௌரவிக்கவேண்டும் என்ற சிந்தனைகளை அறவே மறந்து விடுகின்றது.

ஆகவே, தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயம் இவ்வகையான நல்ல செயற்பாடுகளுக்கு இளையசந்ததிக்கு தோள் தட்டிக் கொடுத்து அறிவுரைகள் புகட்ட வேண்டிய கட்டாயம் இன்றைய சமுதாயத்தின் தேவையாகவுள்ளது.


இவ்வாறான அசமந்த போக்குகள் காணப்பட்டாலும் சிற்சில இடங்களில் தமது சமுதாயத்தின் கடமைகளை முற்போக்கான சிந்தனைகளை உடையவர்கள் மறக்கவில்லை என்பதையும் காணமுடிகின்றது. அவ்வாறன முற்போக்கான சிந்தனைகளை தற்காலத்தில் சந்நிதியான் ஆச்சிரமத்திலும் காணமுடிந்தது.

சந்நிதியான் ஆச்சிரமத்தினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலருக்கான ஆக்கங் களை வழங்கியவர்களை கௌரவித்தது யாவரும் அறிந்ததே. அதுபோல ஆச்சிரமத்தில் இடம்பெறும் வாராந்த நிகழ்வுகளை வழங்கியோரையும் அண்மையில் கௌரவித்து தனது சமூகத்தை முன்னேற்றுகின்ற பணி சிறப்பானதாகும்.

ஆகவே இளஞ்சந்ததியினரின் நல்ல நல்ல செயற்பாடுகளுக்கு ஊக்கம் கொடுத்து அவனை நல்லவனாக, பண்பாளனாக வளர்க்க வேண்டியது சமுதாயத்தின் தலையாய பணி யாகும்.

ஞானச்சுடர் 2010 மாசி மலர்

# அன்னமிட்டு அடியோரை வாழ்த்தினால்
# மன்னனாக வாழலாம்



செந்நெல் வயல்சூழும் தொன்மை வரலாற்றுத்
தொண்டைமா னாற்றில் உறைவோனே
தேவ ருடன்முனிவர் சிறந்த தலமிதென்று
தேடி வந்து வணங்குஞ் சேயோனே

அன்னை யென்று மெமது அப்பனென்று முனது
ஆலயத்தில் வந்து அடைந்து நாம்
ஆறு முகனேவடி வேலனே யென்று
அரற்றுஞ் சத்தம் உனக்குக் கேளாதோ

வண்ண மயில்மீ தேறி இன்றும் உலகில் சென்று
வசிக்குந் தொண்டரிடர் களைவோனே
வான மகளை யன்றி கான வள்ளியையும்
மகிழ்ந்து மணம்புரியும் பெருமானே

இன்னும் பொறுத்திருக்கும் எம்மைச் சோதியாதெம்
இடரெலாம் களைய உடன் வாராய்
ஈடிலாத உனை நாடுமக்களைக் காப்பாய்
இணையில் குமார சுவாமிப் பெருமானே

அன்னையென்று வந்தவரை
என்னவென்று கேட்டருளும்
ஆற்றங்கரை வீற்றிருக்கும் ஐயா! முருகா!
ஆறுமுகம் பன்னிருகை

அரியவடி வேலை யேந்தும்
அற்புதனே சிற்பரனே அன்புக் குமரனே
இன்னல்பட்டு வந்தவரை
கன்னலினை அமுதை யூட்டி

கலங்காமல் கைகொடுக்கும் கார்த்திகேயனே
காலைமாலை வேலை செய்துன்
ஆலயத்தில் எங்களுக்கு
காட்சிதரும் மாட்சியான கருணைக் கடலே

பொன் மறந்து பொருள் மறந்து
உன்னைத்தொழ எம்மை வைத்தாய்
பேரருளை மாரியெனப் பொழிவோனே
பூத நாதா சோதிநாதா

வேத நாதா சந்நிதியில்
புண்ணியனே இன்று எம்மை ஏனோ மறந்தாய்
சின்னஞ்சிறு பாலகரும்
பென்னம் பெரு முதியவரும்

செய்வ தொன்று மறியாமல் திகைக்கின்றார்
சீராக வாழ்வுனை
நேராகக் கால்பிடித் தோம்
சீக்கிரம்வா சந்நிதியிற் பெருமானே

புலவர்மணி கலாபூஷணம்,
ஆசிரியர் வை. க. சிற்றம்பலம்.

# ஞானச்சுடர் 2010 மாசி மலர்

## மாசி மாத சிறப்புப் பிரதி பெறுவோர் விபரம்

**M. இந்துசேகரம்**
(அவுஸ்திரேலியா)
**செ. சம்பந்தநாதன்**
(லண்டன்)
**சிவபாலன் சுந்தரமூர்த்தி**
(சுவிஸ்லாந்து)
**N. கதிர்காமநாதன்**
(கொழும்பு)
**திருமதி. த. சுரேந்திரநாதன்**
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)
**செ. நவரெத்தினராசா J.P**
(கப்பூது, குப்பிளான்)
**ந. யோகேஸ்வரன்**
(பாடசாலைவீதி, கோண்டாவில்)
**அதிபர்**
(யா. தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)
**த. இராசேஸ்வரன்**
(இராஜ உதயம், அல்வாய்)
**V.R. கனகராசா**
(சண்றைஸ் ஸ்ருடியோ, சுண்ணாகம்)
**ம. இரங்கநாதன்**
(ஆசிரியர், நெல்லியோடை, அச்சுவேலி)
**தலைவர், செயலாளர்**
(வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்)
**சி. பத்மநாதன் J.P**
(கனன் போட்டோபிரதி நிலையம், பருத்தித்துறை)
**சி. சிவம்**
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)
**செ. சுப்பிரமணியம்**
(குடவத்தை, துன்னாலை)

# ஞானச்சுடர் 2010 மாசி மலர்

வ. நந்தகுமார்
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
உரிமையாளர்
(ஜெகா மோட்டோர்ஸ், நெல்லியடி)
சி. மகாலிங்கம் J.P
(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)
சு. சிவதாசன் G.S
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)
தலைவர், செயலாளர்
(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)
சு. செல்வரெத்தினம்
(K.K.S. வீதி, சுண்ணாகம்)
உரிமையாளர்
(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)
உரிமையாளர்
(புகழ் ஸ்ரோர்ஸ், K.K.S. வீதி, சுண்ணாகம்)
ஐ. லோகஞானம்
(பிரதி அஞ்சல் அதிபர் சுண்ணாகம்)
உரிமையாளர்
(உதயன் விற்பனை நிலையம் சங்கானை)
திருமதி. சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன்
(முருகமூர்த்தி வீதி, சங்கானை)
ஆ. விஸ்வலிங்கம்
(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)
V. அரியராசா
இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)
அ. அரியகுமார் அதிபர்
(யாழ். சித்திவிநாயகர் பாடசாலை, பருத்தித்துறை)
க. இரத்தினசிங்கம் J.P
(இளை. கிராமசேவையாளர், கரணவாய் மத்தி)
N. இரவீந்திரன்
(இளை. மக்கள் வங்கி உதவி முகாமையாளர், உரும்பராய்)
க. யோகேந்திரநாதன் G.S
(தும்பளை, பருத்தித்துறை)
உரிமையாளர்
(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)
செ. சந்திரமூர்த்தி
(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)

அ. த. க. கிருஷ்ணராஜா J.P
(உரும்பராய்)
சி. பஞ்சலிங்கம்
(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)
செல்வி ஷாலினி தேவேந்திரா
(ஒஸ்காவீதி, உரும்பராய்)
இராசரெட்ணம் வசந்தன்
(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)
இ. குமாரதாசன்
(இளை. பிராந்திய மருந்தாளர், யாழ்ப்பாணம்)
சி. குகதாசன்
(தேவாலயவீதி, சங்கானை)
உரிமையாளர்
(உதயா பேக்ஹவுஸ், வல்லைவீதி, சங்கானை)
N. K. தங்கராசா
(இளை. தபாலதிபர், புலோலி)
உரிமையாளர்
(நாதன் மெடிக்கல் சென்ரர்,நெல்லியடி)
உரிமையாளர்
(அம்பாள் தொலைத்தொடர்பு நிலையம், திருநெல்வேலி)
குமாரலிங்கம் செல்வரஞ்சன்
(சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி)
சோ. புவனதாஸ்
(சங்கானை)
த. விவேகானந்தன்
(சிவசக்தி பல்பொருள் வாணிபம், மந்திகை)
S. வசந்தகுமார் G. S
(உரும்பராய்)
ப. அருந்தவம்
(பேரியந்தோட்டம், சழிபுரம்)
இ. ஜெயபாலன்
(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)
மா. ந. பரமேஸ்வரன்
(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)
K. சிவம்
(காரைநகர் றோட், யாழ்ப்பாணம்)
இ. தேவராசா
(சிறுப்பிட்டி)


# ஞானச்சுடர் 2010 மாசி மலர்

**S. ஈஸ்வரன்**
(டச்சுவீதி, சித்தங்கேணி)
**சி. கணபதிப்பிள்ளை**
(வெங்கடேசன் வீதி, யாழ்ப்பாணம்)
**ச. மதனகுமார்**
(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)
**செ. சிவசுப்பிரமணியம்**
(மில் ஒழுங்கை, மல்லாகம்)
**கெ. தவராசா**
(விவேகானந்தர் வீதி, இணுவில்)
**வி. ந. ஸ்ரீதரன்**
(நீராவியடி, யாழ்ப்பாணம்))
**ப. பத்மகாந்தன்**
(ஆசிரியர், புலோலி)
**சி. பிரணவன்**
(பாரதிலேன், நல்லூர்)
**செ. செல்விகா**
(மிதிலை, நவாலி)
**சி. இராசரத்தினம்**
(இராஜஸ்தான்,சுதுமலை)
**சி. பாலச்சந்திரன்**
(கற்பகப்பிள்ளையார் கோவிலடி, இணுவில்)
**இ. சண்முகதாஸன்**
(ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்)
**வே. மதிபாலசிங்கம்**
(செட்டியதெரு, கரவெட்டி)
**வே.கணபதிப்பிள்ளை**
(குலானை, கரவெட்டி)
**நா.முருகையா**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)
**செல்வராசா பொன்னுத்துரை**
(கரந்தன், நீர்வேலி)
**விஸ்வலிங்கம் குகலிங்கம்**
(பண்ணாகம், சுழிபுரம்)
**மா.தேவகுரு**
(செட்டிவளவு லேன், இணுவில்)
**க.கனகசபாபதி**
(திகிரி, புலோலி)

உ



# நந்திக்கொடி சைவக்கொடி



- கலாபூஷணம் திரு. த. துரைராசா அவர்கள் -

காலத்தால் வரையறை செய்யமுடியாத மிகத் தொன்மையான சமயம் சைவம். சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். அவனும் கால நியதிக்கு அப்பாற்பட்டவன். இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவன் இறைவன் என்று எழுதிக்காட்ட முடியாத தொல்லோன். முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புதுமைக்கும் புதியோனான பெற்றியன். அவனைத் தாங்கி நிற்கும் வாகனம் அறத்தின் வடிவமான இடபம். அவன் உயர்த்தி நிற்கும் கொடி தரும தேவதையான ஏற்றுயர் கொடி - நந்திக் கொடி.

எல்லாத் தெய்வங்களிற்கும் கொடிகள் உண்டு. வருணனுக்கு மகரக்கொடி, நான்முகனுக்கு அன்னக்கொடி, திருமாலுக்கு கருடக்கொடி, இந்திரனுக்கு ஐராவதக் கொடி என்று இருந்தாலும், காலத்தால் மூத்த சிவனாரின் நந்திக் கொடியே ஏற்றமும் சிறப்பும் மிக்கதாகும்.

சைவத்தைப் போற்றி நின்ற பல்லவர்களின் இலச்சினை நந்தியாகும். பல்லவ அரசர்கள் நந்திக்கொடியைத் தங்களது வெற்றிக்கு ஆதாரமாகக் கொண்டனர். தங்களது நாணயத்தில் நந்தியின் திருவுருவத்தைப் பொறித்து மகிழ்ந்தனர். பல்லவ அரசர்களின் பெயர்களிற்கூட முதலாம், இரண்டாம், மூன்றாம் நந்திவர்மன் எனப் போற்றப்பட்டார்கள். மூன்றாம் நந்திவர்மனே "தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்", "தமிழ் நந்தி" என்று புகழப்பட்டவன். அவனது வாழ்வின் நிறைவே "நந்திக் கலம்பகம்.

திருநந்தி தேவர் சிவபெருமானின் மெய்யடியவர். தீட்சை அருளப்பெற்றவர். திருக் கைலாயத்தின் தலைமைக் காவலன். சிவன் கோவில்களிலே நந்தியம்பெருமானின் உத்தரவைப் பெற்றே உள்ளே செல்ல வேண்டும். பிரதோஷ காலங்களில் நந்தி தேவருக்கே சிறப்பு. அவரது கொம்புகளுக்கு இடையேதான் சிவபெருமானை தரிசனம் செய்ய வேண்டும். நந்தி தேவர் வேறு - சிவன் வேறு அல்லர் நந்தியே சிவபெருமான் ஆவர்.

அரசியலிலும், ஆன்மீகத்திலும் மிக உயர்ந்த நிலையிலுள்ள "நந்திக் கொடியே - சைவக்கொடி என்று உலக மக்களின் மனங்களிலே சிறந்த கருத்தை வேருண்டச் செய்து, நந்திக்கொடியை சமய விழாக்களிலும், பாடசாலைகளிலும் ஏற்றவேண்டும் என்று பெருமுயற்சி செய்து, பெரும் பொருட் செலவில் நந்திக்கொடிகளை அச்சிட்டு இலவசமாக விநியோகித்து நந்தி புகழ் பரப்பும் விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை - தனபாலா அவர்களின் புகழ் ஓங்க, வாழ்வு சிறக்க அவரை வாழ்த்துவது சைவப்பெருமக்களின் கடமையாகும்.

**வாழ்க நந்தி நாமம்!**

# இந்து மதமும் — இன்றைய சூழலும்

- நா. நல்லதம்பி அவர்கள் -

இன்றைய சூழலில், தகவல் தொழில்நுட்பத்துறையின் வளரச்சி காரணமாக, கணனி வலையமைப்புகள், இணையத்தளங்கள், செய்மதி, தொலைக்காட்சி போன்றவை எல்லாம், உலகத்திலுள்ள அனைத்துச் செயற்பாடுகளையும் நமது வீட்டுவாசலுக்குக் கொண்டுவந்து சேர்த்துவிடுகின்றன.

இந்தப் பின்னணியில், தீயவற்றை வேறுபடுத்தி நல்லனவற்றைத் தெரிவுசெய்ய வேண்டிய கட்டாயம் நம் அனைவருக்கும் இருக்கிறது.

இந்தவகையில், நமது இந்து மதத்தின் தொன்மை, வளர்ச்சி, நடைமுறை என்பன பற்றித் தெரிந்துகொள்வதும் அவசியமாகிறது.

மதங்கள் எல்லாம் இறைவன் அருளால் தோன்றின என்பது பொதுவான நம்பிக்கை யாகும். இறைவனது மெய்ஞ்ஞானம் பெற்ற அருளாளர்களால் செய்யப்பெற்ற உபதேசங்களின் அடிப்படையில் மதங்கள் தோன்றின என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

எப்படியாயினும், எல்லா மதங்களினதும் குறிக்கோள் இறைவனை அடைதல் என்னும் ஒன்றே ஆகும். வழிமுறைகள் தாம் வெவ்வேறு நிற்க, உலகின் எல்லாப் பகுதிகளிலும் நிலையான மக்கள் குடியேற்றம் பெரும்பாலும் நதிக்கரைகளிலேயே ஆரம்பித்திருக்கின்றன என்பது வரலாறு கற்றுத்தந்த பாடமாகும்.

இதற்கமைய இந்தியாவிலே சிந்துநதிக்கரையோரங்களில் குடியேறி வாழ்ந்த மக்க ளாலே கடைப்பிடிக்கப்பெற்ற மதம்சிந்துமதம் என்று ஏனைய மக்களால் அழைக்கப்பெற்று வந்ததாகவும், பின்னர் அது இந்து மதம் என்று ஆனது எனவும் வரலாறு கூறுகின்றது.

இயற்கையின் விளைவுகளை உணர்ந்த அக்கால மக்கள். அவையெல்லாம் ஒரு ஒழுங்குமுறையில் சீரான வகையில் நடைபெற்று வருவதை உணர்ந்து கொண்டார்கள். இவற்றையெல்லாம் இயக்கும் ஒரு சக்தி இருக்கிறது என உணர்ந்தார்கள். அவ்வாறான நிலையில் இயற்கையின் சீற்றங்களுக்குப் பயந்து, இயற்கையை வணங்கத் தொடங் கினார்கள். இயற்கையின் இயக்கத்தின் மூலகாரணர்களான சூரிய சந்திரர்களை வணங்கத் தொடங்கினார்கள். தங்களுக்குள் ஒரு வாழ்க்கை முறையை வகுத்து வாழ்ந்தார்கள். அதனை ஜனாதனதர்மம் என்னும் பெயரால் அழைத்தார்கள்.

காலப்போக்கில் மக்களிடையே தோன்றிய மெய்ஞ்ஞானிகள் தமது ஆன்மபலத்தினால் கடவுள் ஒருவர் இருக்கிறார் எனக் கண்டார்கள். அவர்கள் வேதங்கள் என்ற சமயக்

கோட்பாடுகளை வகுத்தார்கள். மக்கள் தமது வாழ்க்கைமுறையை வேதங்கள் காட்டிய வழியில் அமைத்துக் கொண்டார்கள். இவ்வாறு இந்துமத நெறிமுறைகள் வாழ்க்கைநெறியாக அமைந்துவிட்டது எனலாம். இவ்வாறு புராதன அற ஒழுக்கம், ஜனாதனதர்மம் என்றே அழைக்கப்பெற்று வந்தது. ஆகவே எமது மதத்தின் பெயர் இந்துமதம் என்பதன்று; ஜனாதனதர்மம் என்பதே ஆகும்.

மேலும், ஒரு தனி மனிதனால் அல்லது குரவரால் தோற்றுவிக்கப்பெறாத, எப்போது தோற்றம் பெற்றது என்று அறியப்பெறாத தொன்மை வாய்ந்த மதம், இந்து மதம் என்று சொல்லப்பெறுகின்ற சனாதனதர்மம் ஆகும்.

"ஒன்றே குலம்; ஒருவனே தேவனும்" என்ற கொள்கையுடையது இந்துமதம். ஆனால் இந்துக்கள் பல கடவுளர்களை வணங்குகிறார் என்று வேற்றுமதத்தவர் சொல்லுவார்கள். உண்மையில், ஞானிகள் கடவுளிடத்திலே பக்தி செலுத்தும்போது, பல வடிவங்களிலே கடவுளைத் தரிசிக்கிறார்கள்; உணருகிறார்கள். திருநாவுக்கரசர், "அப்பன் நீ அம்மை நீ அன்புடைய மாமனும் மாமியும் நீ" என்று கடவுளை எல்லாமாகி நிற்கும் ஏறூர்ந்த ஒரு செல்வனாகவே பாடியிருக்கிறார். பாரதியார், கடவுளை நண்பனாக, குருவாக, காதலியாக, காதலனாக, எசமானனாக, குழந்தையாக தாயாக - எல்லா வடிவங்களிலும் பக்திகொண்டு பாடியிருக்கிறார். எப்படியும் இறைவனிடத்தில் நம்பிக்கை அல்லது பிடிப்பு ஏற்பட்டு பக்தி செய்தல்தான் முக்கியமானது. ஒரு பொருளில் அல்லது மனிதனிடத்தில் நம்பிக்கை வைக்கிறோம். இவை அழியுந் தன்மையுடையன. அழியாப் பொருளான இறைவனிடத்தில் பக்தி செலுத்தும் போதுதான் நமக்கு மன அமைதியும் ஆன்ம ஈடேற்றமும் திருவருளும் கைகூடும்.

இதனால் இந்து தர்மத்திலே பக்திமார்க்கம் கட்டாயமானது. ஆயினும், கர்மம் அல்லது நியதி என ஒன்று முக்கியமானது. அதன்படி,நாம் செய்யும் நல்வினை தீவினைகளுக்கேற்ப நன்மையை அல்லது தீமையை அனுபவித்தே தீர வேண்டும்; இதற்கு விதிவிலக்கு இல்லை. மேலும். ஒழுக்கத்தூய்மை இல்லாவிடத்து ஆன்மீக ஈடேற்றம் கிடைக்காது. இறைவனோடு அணுக்கத்தொண்டனாக இருந்த ஆலால சுந்தரர், சுந்தரமூர்த்தியாகத் திரும்பவும் பூமியில் பிறந்தாரெனக் கூறப்பெறும் புராணக் கதை இதற்கு உதாரணமாகக் கொள்ளத் தக்கது.

***ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்***
***உயிரினும் ஓம்பப் படும்*** என வள்ளுவரும்

***புண்ணியம் ஆம், பாவம் போம், போன நாட்செய்த அவை***
***மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள் - எண்ணுங்கால்***
***ஈதொழிய வேறில்லை; எச்சமயத்தோர் சொல்லும்***
***தீதொழிய நன்மை செயல்*** என ஔவையாரும் கூறியவற்றால் உணரலாம்.

எண்குணத்தான் என்று இறைவனைக் காட்டிய ஞானிகள், வெவ்வேறு பெயரையும் வைத்தார்கள். ஆன்மாக்களுக்கு அருள்புரியும் நோக்கில் வெவ்வேறு நிலையில் (வடிவில்) கடவுளைக் கண்டனர் ஞானிகள்.

*அகத்து அரும் அருளை ஆக்கும், வினை நீக்கும்*
*சகலர்க்கு வந்தருளும் தான். (திருவருட்பயன்)*

பெற்றோரும் ஆசிரியரும் பிள்ளைகளை வழிப்படுத்தும் முகமாக, தம் முகபாவங்களை மாற்றுவதுபோல, இந்து தர்மத்தில், இறைவன், அறுவகை நெறிகளில் (சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம்) தன்னைக் காட்டினாலும் இறைவன் ஒருவனே என்பது இந்துமதத்தின் சிறப்பாகும்.

இவ்வாறு தோற்றம்பெற்ற தொன்மையான வேதங்கள், ஆகமங்கள், பின்னர் பாடப் பெற்ற தேவார திருவாசகங்கள், புராணங்கள், பக்தி இலக்கியங்கள் முதலியவற்றால் நமது சனாதனதர்மம் வளர்ந்து வந்திருக்கின்றது.

சுவாமி விவேகானந்தரும், இராம கிருஷ்ண பரமஹம்சரும், சுவாமி விபுலானந்தர், ஆறுமுகநாவலர் போன்றோரும் இந்துமத வளர்ச்சிக்கும் மறுமலர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர். நல்லைநகர் தந்த ஆறுமுகநாவலர், கந்தபுராண கதாப்பிரசங்கம் மூலம் யாழ்ப்பாணத்தில் கந்தபுராண கலாச்சாரத்தை வேரூன்றச் செய்துள்ளார்.

இதனால் நமது இந்துமதம் மக்களிடையே வாழ்க்கை நெறியாகி ஊறிக் கிடக்கின்றது. இத்தகைய வரலாற்றுப் பின்னணியுடைய இந்து மதத்துக்கும் இதனைத் தழுவிய தமிழ் மக்களுக்கும் இன்றைய போர்க்காலச் சூழல் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

தற்கால யுத்தச் சூழலால் உள்ளூரில் இடம்பெயர்ந்தும், வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்தும் அல்லற்படுவதனால், உலகுதழுவிய தமிழர்கள் அனைவரையும் பாதிக்கும் நிலையில், இந்துமத கலாச்சாரமும் சீரழிகின்றது என்பது தெளிவாகிறது.

போரின் கொடுமை ஒரு புறம் இருக்க:

விஞ்ஞான தொழில்நுட்ப தொலைத்தொடர்பு வசதிகளும் பகிடிவதை போன்ற வேண்டாப் பழக்கங்களும் இளம்சமுதாயத்தைப் பாதிப்படையச் செய்கின்றன.

கலங்கி நிற்கும் மனநிலையில் மக்களை வசப்படுத்தி மதமாற்றம் செய்யும் வாய்ப்பும் உண்டாயிருக்கிறது.

ஒவ்வொரு நாட்டுக்கும் இனத்துக்கும் வெவ்வேறான தேசிய உடை, கலை கலாச்சாரமுறை என்பன இருக்கவும், கலப்பு வாழ்க்கை முறையால் நமது கலாச்சாரமுறைகள் கலப்படமாகி வருகின்றன.

கோவில்களில் இந்துமதப் பண்பாட்டுக்கமைந்த உடை, பாடசாலைகளில் சீருடைகள், பொது இடங்களில் தேசிய உடை (தமிழருக்கான) என்பன அவசியம் பேணப்படவேண்டும்.

இன்றைய இளைஞர்கள் வருங்கால எஜமானர்கள் என்பதை நாம் விட்டுவிடக்கூடாது. இதற்கு பெற்றோர் ஆசிரியர்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். அறநெறிப் பாடசாலைகள் மூலம் இந்துமத புணர்வாழ்வு நிலையங்கள் மூலம் சாதாரண பிள்ளைகளையும் ஆதரவற்ற பிள்ளைகளையும் நன்னெறிக்கு இட்டுச் செல்லும் பொறுப்பு நம்மிடையேதான் இருக்கிறது.

சுவாமி விவேகானந்தர் ஓரிடத்தில் சொன்னதுபோல, நமது மக்கள் மதம் மாறியிருப்பின், அவர்களை மீட்டு நமது சமயத்துக்குக் கொண்டுவர நாம் முயலவேண்டும். சமண

சமயத்துக்கு மாறிய திருநாவுக்கரசரைத் திலகவதியார் சைவத்துக்கு மீட்டு: எடுத்ததுவும் பாண்டிய மன்னனை மங்கையர்க்கரசியார் மீட்டதுவும் நமக்குக் கற்றுத் தந்த பாடமாகும்.

நமது பிள்ளைகள் கல்வி கற்று உயர்நிலை பெறும் அதேநேரம் ஒழுக்கமுறையிலும் உயரவேண்டும். இதற்காகவே மாணவர்களிடம் நற்சான்றிதழ் பெறப்படுகின்றது. இன்றைய மாணவர்கள் நுட்பமான அறிவைப் பெறுவதில் அதிஷ்டசாலிகள்; முன்னேற்றம் காண்பவர்கள்.

*தம்மிற் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து*
*மன்னுயிர்க் கெல்லாம் இனிது* (குறள்)


அப்படியான நிலையில், ஒழுக்கத்தையும், எமது பண்பாட்டையும் வளர்த்துக் கொள்வோமாக.

எமது வாழ்க்கைப் பருவத்திலே, பிரமச்சரிய பருவம் முக்கியமானது. கற்பவை கற்பதும் ஒழுக்கம் பேணுவதும் இப்பருவத்தினரின் பிரதான குறிக்கோள் ஆகும். இதனால் பிரமச்சரிய பருவத்தை மாணவப்பருவம் என்றும் சொல்லப்பெறுகின்றது. வாழ்க்கை முழுமையும் மாணவர்களாய் இருப்பவர்கள் பலர், சமுதாயத்தில் முன்னேற்றம் பெற்று, உதாரண புருஷர்களாக இருப்பதையும் அறிவோமாக.

சமய ஒழுக்கம் சமுதாய ஒழுக்கத்துக்கு அவசியம் என்பதால், எமது இந்துமதத்தை விஞ்ஞான முன்னேற்றமோ பிற காரணிகளோ சீரழிக்க விடாமல் பாதுகாப்போமாக.

தமிழினமும் தமிழ் மொழியும் இந்துமதமும் ஒன்றுக்கொன்று ஆதாரமானவை, தொடர்புடையவை என்பதனால் சனாதனதர்மம் என்னும் இந்து மதத்தைப் பேண வேண்டிய அவசியம் இன்று உள்ளது என்பதை உணர்வோமாக.

"நன்றுந் தீதும் பிறர்தர வாரா



*வன்னியிலிருந்து இடம்பெயர்ந்த குடும்பம் ஒன்றுக்கு அவரது சுயதொழிலை ஊக்குவிக்கும் முகமாக ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட ஒரு தொகைப் பணத்தை தென்னிந்தியாவில் இருந்து வருகை தந்த சுவாமி தேவானந்தா அவர்கள் வழங்கிய போது.*

ஆக்கவும் அருந்தவும் உதவுவதே மழைநீர்.

உ

(தொடர்ச்சி...

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

வேண்டுதல் செய்யும்போது பல்வேறு வகையில் வேண்டுதல்கள் செய்யப்படுவதை இதுவரை பார்த்து வந்துள்ளோம். அவை பெரும்பாலும் இறையடியார்களது வேண்டுதல்களா கவே இருந்தன. இம்முறை நாம் செய்யும் மற்றொருவகை வேண்டுதலையும் சற்றுத் தொட்டுச் செல்லலாம்.

நமது வேண்டுதல்கள் சிலசமயம் இலஞ்சம் கொடுப்பது அல்லது பேரம் பேசுவது போன்று நேர்த்திக்கடன் என்ற வடிவிலே அமைவதையும் கண்டுள்ளோம். எனது நோயை மாற்றினால் இதைத் தருவேன், அல்லது இதைச் செய்வேன் என்றெல்லாம் நேர்த்தி வைப் பார்கள்.

இத்தகைய வேண்டுதலில் மற்றொரு வகையுமிருக்கிறது. மல்லிகை ஆண்டு மலரிலே கொற்றை பி. கிருஷ்ணானந்தன் அவர்கள் எழுதிய கதையில் இந்த நேர்த்தி வருகிறது. அதை வாசித்தபோது எனது மனம் இதுவும் ஒருவகை வேண்டுதல் எனக் குறித்துக் கொண்டது.

அக்கதையில் ஓர் அக்கா தன் தம்பியின் மனைவிக்கு வந்த நோய் குணமடைந்தால் தன் தம்பி சந்நிதியானுக்கு முள் மிதியடியில் காவடி எடுப்பானென்று வேண்டிக் கொள்கிறாள். இதையொத்த மற்றொரு நேர்த்தியும் கதையாகச் செல்கிறது. தான் செய்யும் நேர்த்தியைத் தான் நிறைவேற்றாது மற்றொருவரைக் கொண்டு செய்விக்கும் ஒரு யுக்தி இவ்வேண்டுதலுள் அடங்கிக் கிடக்கிறது. இதுபற்றி கிருஷ்ணானந்தன் அவர்கள் தன் கதாபாத்திரம் மூலம் பின்வருமாறு கூறுகிறார்.

"அவையள் உன்னிலை பாசத்திலை நேர்த்தி வைக்கிறதெண்டால் தங்களை வருத்தித் தாங்கள் செய்யிறதாகவல்லவோ ஏதும் நேர்த்தி வைக்கவேணும், .... இப்பிடியெண்டால் எல்லோரும் ஓசியிலை லேசாக நேர்த்தி வைச்சிட்டு இருக்கலாம்.

அவர் கூறுவது போன்ற ஓசி நேர்த்திவைக்கும் வேண்டுதல்கள் கூட எம்மிடையே உள்ளன. எனினும் அதனூடே கனியும் பிறர் நலனில் அக்கறை காட்டும் பண்பை நாம் மெச்சவே வேண்டும்.

ஆனால் இவ்வகை வேண்டுதல்களும் பெரும்பாலும் நம் உறவினரின் நன்மைகருதியே செய்யப்படுகின்றன. சமய குரவர்கள் போன்ற இறையடியார்களுக்கு அனைவருமே அன்பிற் குரிய உறவுகளாகவே தெரிவர், அதனால் தம்முன்னே வருந்தி நின்றவர்களின் துன்பம் நீங்க வேண்டுமென வேண்டி, அவர்கள் தேவாரங்களைப் பாடியுள்ளனர். இவை பற்றிப் பல கதைகளுள்ளன. ஆனால் இவர்களது வேண்டுதல்கள் நமது நேர்த்திக்கடன் போன்றவையல்ல, அத்துடன் அவர்களது வேண்டுதல்களை ஊன்றி நோக்கின் அவர்களது பக்தி மார்க்கத்தையும் அவை புலப்படுத்தி நிற்பதையும் காணலாம்.

முதலிலே ஆளுடைய பிள்ளையை எடுத்துக்கொள்வோமானால் அவர் உமை

ஒரு முட்டாள் தன்னை முட்டாள் என்று அறிந்திருந்தால் அவனை ஓரளவிற்கு அறிவாளி என்று ஏற்றுக்கொள்ளலாம்.

அம்மையின் ஞானப்பாலுண்டு ஞானம் பெற்றவர். முருகனுக்கு நிகரானவரென நாம் மதிக்கும் இறைமகனாகத் திகழ்ந்தவர். அவரது பக்திவழி சற்புத்திரமார்க்கமாகும். ஒரு மகன் தன் பெற்றோரிடம் காட்டும் அன்பும் உரிமையும் அவரது தேவாரங்களிலே தொனிக்கும்.

திருஞானசம்பந்தர் உலகநலன் வேண்டி நின்றவர். அவரது பல தேவாரப் பதிகங்கள் பிறர் நலன் வேண்டியே பாடப்பட்டவை. அவற்றுள் சில சந்தர்ப்பங்களைப் பார்ப்போம். கொல்லி மழவனின் மகளைப் பீடித்த முயலகன் நோய் தீரவும், செங்குன்றூரில் மக்களது குளிர்சுரத்தை நீக்கவும், திருமருகலைச் சேர்ந்த பெண்ணின் கணவன் பாம்பு தீண்டி இறந்தவேளையில் அவனை உயிர் பெற்றெழச் செய்யவும், பூம்பாவையின் எரிந்து சாம்பரான எலும்பிலிருந்து அவளை மீண்டும் உயிர்ப்பிக்கவும், பாண்டிய மன்னனின் வெப்புநோயைப் போக்கவும் இறைவனை வேண்டி அவர் தேவாரங்களைப் பாடியுள்ளார்.

திருவீழிமிழலையிலே அப்பரும் சம்பந்தரும் இருந்த வேளையில் அவ்வூரிலே மிகப் பெரும் பஞ்சமேற்பட்டது. இதைக் கண்டு இருவருமே வருத்தமடைந்தனர். இந்தக் கவலையுடன் அவர்கள் உறங்கியபோது இறைவன் கனவிலே தோன்றி "பஞ்சந்தீரும் வரையும் படிக்காசு அருள்வோம். அதன் மூலம் அனைவருக்கும் அன்னம் அளியுங்கள்" எனக் கூறியருளினார். தினமும் சம்பந்தருக்குக் கிடைத்த காசு மாற்றுக் குறைந்ததாக இருந்ததால் அவரது மடத்திலே காலந்தாழ்த்தியே உணவு வழங்கவேண்டியதாயிற்று. இதனால் மாற்றுக் குறையாத காசு தருமாறு வேண்டி,

*வாசிதீரவே காசு நல்குவீர்*
*மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே*

எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி நல்ல படிக்காசு பெற்று அன்னம்படைத்தார். இதன் போது அவர் தனது தேவையை நேரிடையாகக் கூறி அதை நிறைவேற்றுமாறு கேட்கின்றார். இதே போன்றே சமணருடன் வாது செய்யச் சென்றபோதும் திருவாலவாயில் வீற்றிருக்கும் சொக்கநாதப் பெருமானிடம் தாம் வாதில் வெல்வதன் மூலம் உலகில் சிவபிரானின் புகழ் மேலோங்க வேண்டும் என்பதை,

*"ஞாலம் நின் புகழேமிக வேண்டுந் தென்*
*ஆலவாயில் உறையும் எம் ஆதியே"*

என ஒவ்வொரு தேவாரத்தின் இறுதியிலும் பாடி நேரிடையாகவே வேண்டுகின்றார்.

இவ்வாறன்றி வேறு வகையிலும் அவரது வேண்டுதல்கள் அமைந்துள்ளன. திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் தலத்திற்கு ஞானசம்பந்தர் வந்தபோது, அந்த நாட்டு அரசனாகிய கொல்லிமழவனின் மகளை முயலகன் என்னும் நோய் பீடித்திருந்தது. "துணிவளர் திங்கள்" எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி அவர் இறைவனை வேண்ட அந்த நோய் அகன்றது.

இந்தப் பதிகத்திலுள்ள தேவாரங்களில் அவர் பாச்சிலாச்சிரமத்தான் பெருமையைக் கூறி இந்தப் பெண்வாடச் செய்வதோ உனது பெருமை! என்று இறைவனிடம் கேட்கின்றார்.

*"மணிவளர் கண்டரோ மங்கையை வாட*
*மயல் செய்வதோ இவர் மாண்பே"*

*'செஞ்சுடர் வண்ணரோ பைத்தொடி வாடச்*
*சிதை செய்வதோ இவர் சீரே"*

என்பன போன்ற இறுதி வரிகளே அப்பதிகத் தேவாரங்கள் அனைத்திலும் உள்ளன.

பாம்பு தீண்டி இறந்தவனை உயிர் பெற்றெழச் செய்யுமாறு இறைவனை வேண்டியபோதும் இவற்றையொத்த தேவாரங்களையே சம்பந்தப் பெருமான் பாடியுள்ளார். "சடையாய் எனுமால்" எனத் தொடங்கும் அப்பதிகத்திலே

*"உடையாய் தகுமோ இவள் உள்மெலிவே"*
*"எந்தாய் தகுமோ இவள் ஏசறவே"*
*"தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே"*

என்பன போன்ற இறுதி வரிகளே எல்லாத் தேவாரங்களிலும் அமைந்திருப்பதைக் காணலாம்.

இவை வேண்டுதலை நேராகக் கேட்கவில்லை. "இத்தகைய பண்புகளும் பெருமையும் கொண்ட உனது பெருமை அவளைத் துயருற வைப்பதா?" "இவள் இப்படிக் கவலைப்படலாமா? இது உனக்குத் தகுமா?' என உரிமையுடன் கேட்டு அவர்களது வேதனையைத் தீர்க்கச் செய்கிறார். அப்பனிடமும் அம்மையிடமும் மகன் காட்டும் உரிமை இது என்றே தோன்றுகிறது.

இத்தகைய ஞானசம்பந்தப் பெருமானின் வேண்டுதல்கள் பல. அனைத்தையும் இங்கு எழுதவியலாது, பிறரின் நலன் கருதி வேண்டிய அவர் தனக்காக வேண்டிய தேவாரங்களுள் ஒன்றினையும் பார்ப்போம்.

*ஒல்லையாறி உள்ளம் ஒன்றிக்*
*கள்ளம் ஒழிந் துவெய்ய*
*சொல்லையாறித் தூய்மை செய்து*
*காமவினை அகற்றி*
*நல்லவாறே உன்றன்நாம*
*நாவில் நவின்று ஏத்த*
*வல்லவாறே வந்து நல்காய்*
*வலிவலம் மேயவனே*

"வலிவலத்தில் வீற்றிருப்பவனே, ஓடி அலையும் பரபரப்பு ஆறி உன்னிடம் இந்த உள்ளம் ஒன்றி, கள்ளம் ஒழிந்து வன்சொற்களைத் தவிர்த்துத் தூய்மையாக்கி காமவினையை அகற்றி உனது நாமத்தை நல்லவகையில் கூறி வழிபட அருள்புரி" எனத் திருஞானசம்பந்தப் பெருமான் வேண்டிநிற்கின்றார். இத்தேவாரங்களைப் பாடி நாமும் உய்தி பெறலாம்.

இறையருள் பெற்றவர்கள் அருளிய பாடல்கள் எந்த மொழியிலிருந்தாலும் மிகுந்த சக்தி வாய்ந்தவை. அவற்றை நமக்கு விளங்கும் தமிழ்மொழியில் ஓதும்போது எமக்குப் பொருள் புரிவதால் மனமொன்றி வழிபடக்கூடியதாக இருக்கும். அவ்வாறு வழிபட்டு மிகுந்த பயன்பெற முடியும். உதாரணமாகக் காய்ச்சல் போன்ற நோயுற்றிருக்கும்போது "அவ்வினைக் கிவ்வினை யாம்" என ஆரம்பமாகும் பதிகத்தை ஓதலாம். கோளறு பதிகம், திருநீற்றுப் பதிகம் போன்ற பதிகங்களை இவ்வாறு நாம் ஓதிப்பயன் பெறலாம். **(தொடரும்...)**

எச்சரிக்கைக் குரல் எவ்வளவு கூர்மையாக இருந்தாலும், அது ஒருவருக்கும் தீங்கு செய்யாது.

உ

# உண்மையே உனை உயர்த்தும் ஏணி

- இராசையா ஸ்ரீதரன் அவர்கள் -

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கின்றார் ஔவையார். புனிதப் பிறவியாகிய மனிதப் பிறவி எடுத்த நாங்கள் ஒவ்வொருவரும் பூர்வ ஜென்மத்தில் புண்ணியஞ் செய்தவர்களாவோம். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் இறைவன் தந்தது எதற்காக? அவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

ஆகவே, இந்த அரிய மானிடப் பிறவியை எடுத்த நாங்கள் முதலில் மனிதனாக வாழ முயற்சித்தல் வேண்டும். மனித உருவிலிருந்து கொண்டு மிருகமாக வாழ்தல் கூடாது. மனித வாழ்க்கையில் நல்லதோர் இலட்சியம் இருத்தல் வேண்டும்; ஒரு நல்ல நோக்கம் இருக்க வேண்டும்; ஒருநல்ல இலக்கு இருக்க வேண்டும். சைவ சமயம் மிகவும் தொன்மை வாய்ந்த ஒரு சமயம். இதைப் பின்பற்றுபவர்கள் சிவபெருமானையே முழு முதற்கடவுளாகப் போற்றி வழிபாடியற்றுகின்றார்கள். இந்தச் சைவ சமயம் புலால் உண்பதைத் தவிர்க்க வேண்டும். கொலை செய்யக்கூடாது என்பதை வலியுறுத்துகின்றது.

எமது புனித சமயமாகிய சைவ சமயத்தைக் கடைப்பிடிக்கும் சைவர்களாகிய நாம் இப்பூமியில் எப்படி வாழ்க்கை நடத்துகின்றோம்? சிந்தித்துப் பாருங்கள்.

எமக்கென்று ஓர் இலட்சியம் இருக்கின்றதா? எமக்கென்று ஒரு கொள்கை இருக்கின்றதா? சும்மா வெறுமனே வாழ்ந்து மடிவதில் என்ன இருக்கின்றது?

முதலில் எமது வாழ்க்கையை நல்லமுறையில் அமைத்துக்கொள்ள வேண்டும். நீதி, நியாயம், உண்மை, நேர்மை, இன்சொல் இவை கட்டாயம் கவனத்தில் எடுக்கவேண்டும். மனச்சாட்சிக்கு மாறாக நாம் எதையுமே செய்யக்கூடாது. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்ற உணர்வு எந்நேரமும் மனதில் இருக்க வேண்டும். எப்படியும் வாழலாம் என்பதை அறவே நீக்கிவிட்டு இப்படித்தான் வாழவேண்டும் என்ற நியதிக்குள் கட்டுப்படவேண்டும். சிரித்து வாழவேண்டும்; ஆனால் பிறர் சிரிக்க வாழக்கூடாது. இதனை நாம் கட்டாயமாகக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். மனித வாழ்வு நிலையில்லாதது. இறைவன் தந்த இந்த உடம்பும் நிலையற்றது. நீர்க்குமிழிக்கு நிகரான இந்த உடம்பை நாம் நிலையானதென்று எண்ணலாகாது. சரிக்கப்படுவது சரீரம்; ஆகவே இது உயிருடன் இருக்கும்போதே நல்லனவற்றைச்

செய்துவிடவேண்டும். இதற்கு என்னவழி? நாம் எப்போதும் உண்மை பேசி வந்தால் அதுவே பெரிய புண்ணியமாகும். உண்மைக்கு என்றும் அழிவில்லை. உண்மையான வாழ்வில் ஓர் அர்த்தம் இருக்கும் "ஏ! மனிதா!! நீ என்றும் உண்மையே பேசு; நன்மையே பெறுவாய். உண்மையே உனை உயர்த்தும் ஏணி!" இஃது மகாத்மா காந்திஜியின் மணிவாக்கு.

அரிச்சந்திரன் உண்மையே பேசி வாழ்ந்தபடியால் வாழ்க்கையில் உயர் நிலையை அடைந்தான். நாங்களும் ஏன் அப்படி வாழக்கூடாது? இதைக் கொஞ்சம் சிந்தித்துப் பார்த் தால் என்ன? இவ்வளவு நாளும் போனது போகட்டும். இனியாவது நாம் உண்மைபேசி வாழ் வோம் என்ற பிரதிக்ஞை எடுத்துக்கொள்வோம். அதாவது உறுதி பூணுதலாகும். எத்தனை துன்பம் வந்தாலும் பொய் பேசவே கூடாது. எவ்வளவு இடர் வந்தாலும் உண்மைதான் பேச வேண்டும் என்று சபதம் செய்துகொள்ளவேண்டும்.

இப்படி வாழ்ந்து பாருங்கள். கைமேல் பலன் கிடைக்கும். மனிதன் விலங்குகளிடமும் பறவைகளிடமும் எறும்புகளிடமும் இருந்து கற்றுக்கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கின்றன. நாயிடமிருந்து நன்றியுணர்வையும் காகத்திடமும் புறாக்களிடமும் இருந்து ஒற்றுமைப் பண்பையும் எறும்புகளிடமிருந்து ஒரு வரிசைக் கிரமத்தையும் மனிதன் கற்றுக் கொள்கின்றான்.

காகம் ஒருபோதும் தனியே உண்ணாது. தனக்குக் கிடைத்த உணவைத் தனது இனத்துடன் சேர்ந்தே உண்ணும். புறாவிடம் ஒற்றுமையிருந்தபடியால்த்தான் ஒருமித்து வலை யுடன் சேர்ந்து பறந்து உயிர்தப்பின. எறும்புகளைப் பாருங்கள்! எவ்வளவு அழகாக வரிசை ஒழுங்கு தவறாமல் ஊர்ந்து செல்கின்றன. இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் அறிந்த மனிதன் மட்டும் திருந்துகிறானில்லையே!

மனிதன் மனிதனாக வாழவேண்டும். கோயிலில் பிரசாதம் வாங்கும்போது தட்டிக் கொட்டி நிலத்தில் சிந்தி வீணாக்குவதைப் பார்க்கும்போது மனிதனின் நிலையைப் பற் றிச் சிரிப்புத்தான் வருகிறது. இந்த நிலையை மாற்றவேண்டும். கட்டாயம் மாறவேண்டும். மற்றச் சமயத்தவர்கள் நம்மைப் பார்த்து ஏளனம் செய்வதற்கு நாங்கள் இடங்கொடுக்கலாமா? கூடவே கூடாது. ஒரு பிடி சோற்றுக்கு எத்தனையோ பேர் கஷ்டப்படும் வேளையில் நாம் உணவை வீணாக்குவது நியாயமா? இதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

கண்களிரண்டையும் விற்றுச் சித்திரம் வாங்கினால் கைகொட்டிச் சிரிப்பார்கள். ஆகவே, மனித இனம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். "உண்மை பேசி உத்தமனாக வாழ்; உன்னால் முடிந்தமட்டும் மற்றவர்களுக்கு உதவி செய்; எப்போதும் இன்சொல் பேசு; சிரித்த முகத்துடன் இரு; கோபத்தை அடியோடு விலக்கி விடு! மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்காதே!!

மனிதர்களாகிய நாம் இவற்றைக் கவனத்தில் எடுத்து வாழ்ந்து பார்க்கும் போது நமது வாழ்க்கையில் இன்பம் மலரும்; சுபிட்சம் வளரும்; மகிழ்ச்சி தாண்டவமாடும். செல்வம் தானாகவே வந்து சேரும்.

உ

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக் கோவை

***69. பிழைக்கு வழி***

முனியார் துனியார் முகத்து எதிர் நில்லார்
தனிமை இடத்துக்கண் தம் கருமம் சொல்லார்
இனியவை யாம் அறிதும் என்னார் கசிவின்று
காக்கை வெள்ளெனும் எனின்.

அரசன் முன் கோபப்படமாட்டார்கள். வெறுப்படையவும் மாட்டார்கள். அரசனுக்கு நேருக்கு நேர் நின்று பேச மாட்டார்கள். அவனைத் தனியாகக் கண்டு தன்னுடைய குறைகளைச் சொல்ல மாட்டார்கள். தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லிக் கொள்ள மாட்டார்கள். காக்கையின் நிறம் வெள்ளை என்று மன்னன் சொன்னால் கூட அது கேட்டு வருத்தப்படமாட்டார்கள்.

முனி - கோபம்; துனி - வருத்தம்; கசிவு - வருத்தம்.

***70. அகற்ற வேண்டியவை இவ்வைந்தும்***

உமியவும் உயர்ந்துழி ஏறலும் பாக்கும்
வகையில் உரையும் வளர்ச்சியும் ஐந்தும்
புணரார் பெரியார் அகத்து.

எச்சில் உமிழ்தல், உயரமான ஆசனத்தில் ஏறி உட்காருதல், வெற்றிலை பாக்குப் போடுதல், வீண் வெற்றுரை - வம்பளப்புகள் செய்தல், படுத்து உறங்குதல் ஆகிய ஐந்தும் பெரியோர்கள் முன்பாக செய்யக் கூடாதவை. நீக்கப்பட வேண்டியவை.

உமிதல் - உமிழ்தல்; பாக்கு - தாம்பூலம்

***71. சொல்லக் கூடாதவை***

இறைவர்முன் செல்வமும் கல்வியும் தேசும்
குணனும் குலமுடையார் கூறார் பகைவர்போல்
பாரித்துப் பல்கால் பயின்று

அரசருக்கு முன்னால் - தங்களுடைய செல்வச் சிறப்பையும், கற்ற கல்வியின் பெருமையையும், தமக்குள்ள புகழ்ப் பெருமைகளையும்; தங்களுடைய குண நலன்களையும்; உயர்ந்த குடிப் பிறந்தவர்கள்; வேற்றார் - அல்லது, மாற்றார்களிடம், அடிக்கடி எடுத்துக் கூறுவதுபோலக் கூறிக் கொண்டிருக்கமாட்டார்கள்.

இறைவர் - அரசர்; தேசு - புகழ்; பாரித்து - விரிவாக.

அதிகமான பழக்கம் அவமரியாதையையே தரும்.

**72. அரசனா ஆண்டவனா யாரை வணங்குவது?**

பெரியார் மனையகத்தும் தேவ குலத்தும்
வணங்கார் குரவரையும் கண்டால் அணங்கொடு
நேர்பெரியார் செல்லும் இடத்து.

அரசர் இருக்கும் அரண்மனைக்குள்ளும், கோவிலுக்குள்ளும், பெரியோரைக் கண்டால் வணங்கக் கூடாது. காரணம் அங்கே வணங்கத் தக்கவர்கள் அரசனும், ஆண்டவனுமே. அதேபோல் அத்தெய்வங்களைப் போன்ற மன்னர்கள் கடவுளோடு ஊர்வலமாக, வெளியே சென்றாலும்; தெய்வத்தையே வணங்குவர். மன்னரை வணங்க மாட்டார்கள்.

அணங்கொடு - தெய்வத்துடன்

**72. சிரிப்பதும் தவறு**

நகையொடு கொட்டாவி காறிப்பு தும்மல்
இவையும் பெரியார்முன் செய்யாரே செய்யின்
அசையாது நிற்கும் பழி

சிரிப்பது, கொட்டாவி விடுவது, காறித் துப்புவது, தும்முவது - இவைகளைக் கூடப் பெரியோர் முன்பாகச் செய்யக்கூடாது. செய்தால் துன்பம் வந்து சேரும்.
நகை - சிரிப்பு; காறிப்பு - உமிழ்தல்; பழி - குற்றம்.

**74. நல்ல பிள்ளைக்கு அடையாளம்**

நின்றக்கால் நிற்க அடக்கத்தால் என்றும்
இருந்தக்கால் ஏவாமை ஏகார் பெருந்தக்கார்
சொல்லின் செவிகொடுத்துக் கேட்க மீட்டும்
வினாவற்க சொல் ஒழிந்தக்கால்.

கற்பிக்கும் ஆசிரியர் முன்பாக பாடம் கேட்கும்போது அடங்கி அடக்கமுடன் இருக்க வேண்டும். பாடம் சொல்லித் தராத நேரத்திலும், பணிவுடன் இருக்க வேண்டும். ஆசிரியர் பார்த்துப் போ என்று சொன்ன பின்பே போக வேண்டும். அதற்கு முன் போகமாட்டார். பேரறிவுடைய ஆசிரியர் பாடம் சொல்லித் தரும்போது காது கொடுத்துக் கேட்க வேண்டும். அவர் பாடம் சொல்லி முடித்தவுடன் சந்தேகம் கேட்கக் கூடாது. சந்தேகங்களை முதலிலேயே கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும்.
ஏவல் - கட்டளை; ஏகுதல் - போதல்.

**75. பெரியோர் முன்....**

உடுக்கை இகவார் செவி சொறுண்டார் கைமேல்
எடுத்துரையார் பெண்டிர் மேல் நோக்கார் செவிச் சொல்லும்
கொள்ளார் பெரியார் அகத்து.

உடுத்தியிருக்கும் ஆடையை அவிழ்த்துக் கட்டமாட்டார். கையை மேல் உயர்த்தி - கை நீட்டிப் பேசமாட்டார். பெண்களை நிமிர்ந்தும் பார்க்க மாட்டார். மற்றவர்கள் சொல்வதைக் காதில் போட்டுக்கொள்ளவும் மாட்டார் - நல்லவர்கள், பெரியோர்கள் முன் இருக்கும் போது.

உடுக்கை - உடுத்தியிருக்கும் ஆடை; இகத்தல் - கடத்தல்; சொறுண்டார் - சுறண்டார்.

உ

# தினம் தினம் ஆனந்தமே....

02



– சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள் –

நீங்கள் ஆனந்தமாக இருந்தபோதெல்லாம் ஒன்றைக் கவனித்திருக்கலாம்' எப்போதுமே ஆனந்தம் உங்களுக்குள் இருந்துதான் மலர்கிறது. பின்னர்தான் உங்களிடமிருந்து வெளிப்படுகிறது. ஆனால் உங்களுக்கு ஆனந்தமாக இருக்க வெளிச்சூழ்நிலை கட் டாயமாகத் தேவைப்படுகிறது. ஆன்ந்தத்தின் திறவுகோலை வெளிச் சூழ்நிலையில் அடமானம் வைத்து விட்டீர்கள்.

சூரியன் உச்சியில் இருந்தால் உங்களால் ஆனந்தமாக இருக்க முடியாது. அது மறையும் நேரம்தான் நீங்கள் ஆனந்தப்படு வீர்கள். 12 மணி நேரம் சூரியன் வானில் உள்ளது. அது உங்களுக்குப் பெரிதல்ல. ஆனால், சூரியன் உதிக்கும்போதும், அஸ்த மனமாகும் போதும்தான் நீங்கள் ஆனந் தப்படுவீர்கள்.

*இது நடந்தால்தான்*
*ஆனந்தமாக இருப்பேன்,*
*அது நடந்தால்தான்*
*ஆனந்தப்படுவேன்; என்ற*
*நிலையில் இருந்து உங்கள்*
*ஆனந்தம் உங்கள்*
*கட்டுப்பாட்டிற்குள்*
*வர வேண்டும்.*

ஒரு நாளில் எத்தனை தடவை தான் சூரியன் உதிக்கும்? அல்லது அஸ்த மனமாகும்? ஒரேயொரு தடவைதான் சாத் தியம்.

நீங்கள் “சூரிய அஸ்தமனத்தைப் பார்க்கும்போதுதான் நான் மிகவும் ஆனந்தமாக உணர்வேன்” என்று கூறினால், ஒன்று தெளி வாகத் தெரிகிறது. ஒரு நாளில் சில நிமிடங்கள் மட்டுமே ஆனந்தமாக இருக்க முடிவெடுத்து விட்டீர்கள் என்று. நாளைக்கு மேகமூட்டமாக இருந்தால் அவ்வளவுதான், அந்த சில நிமிட ஆனந்தமும் இல்லாமல் போய்விடும்.

நீங்கள் ஆனந்தமாக இருக்க இதுபோன்று வெளிச் சூழ்நிலைகள் அவசியமே இல்லை. ஆனால் நீங்களே இப்படி ஒரு கட்டாயத்திற்கு அல்லது நிர்ப்பந்தத்திற்கு உங்களை ஆட் படுத்தி விட்டீர்கள்.

இது நடந்தால்த்தான் ஆனந்தமாக இருப்பேன், அது நடந்தால்த்தான் ஆனந்தப்படுவேன் என்ற நிலையில் இருந்து உங்கள் ஆனந்தம் உங்கள் கட்டுப்பாட்டிற்குள் வரவேண்டும். அதற்கான நேரம் வந்து விட்டது. இல்லையா?

உங்களுக்கு இது தெரிந்திருக்க வாய்ப்பில்லை, 1940களில் நீங்கள் ஒரு கார் வாங்கியிருந்தால் கூடவே இரண்டு வேலையாட்கள் தேவைப்படுவார்கள். ஏனென்றால்

காலையில் காரை ஸ்டார்ட் செய்யும்போது அதை இரண்டு பேர் தள்ளினால்த்தான் ஸ்டார்ட் ஆகும். பிறகு 1950களில் கிராங்க் ஸ்டார்ட் வந்தது. ஒருவர் தள்ளினாலே போதும், வண்டி ஸ்டார்ட் ஆகிவிடும். இன்று உங்கள் கார்கள் தன்னாலேயே ஸ்டார்ட் ஆகின்றன. யாரும் தள்ளிவிட வேண்டியதில்லை. இல்லையா?

உங்கள் ஆனந்தத்தையும் இதுபோல செல்ப் ஸ்டார்ட்டில் வைத்துக் கொள்ள நேரம் வந்துவிட்டதுதானே? இன்னும் அதற்கான நேரம் வரவில்லையா, என்ன? விஞ்ஞான வளர்ச்சிக்கு ஈடாக நாமும் வளர வேண்டும் இல்லையா?

**ஆனந்தத்தின் ஆபத்து**

எதற்காக மக்கள் மது அருந்துகிறார்கள்? ஏன் உடலுறவில் இவ்வளவு ஈடுபாடு காட்டுகிறார்கள், போதைப் பொருட்களை ஏன் தேடுகிறார்கள்? சிலர் விளையாட்டு என்று மலை உச்சியில் கயிறு கட்டி ஏறி, ஏன் கீழே விழுகிறார்கள், எதற்காக இத்தகைய அபாய கரமான செயல்களில் ஈடுபட வேண்டும்?

வயிற்றுக்குள் சில வண்ணத்துப் பூச்சிகள் பறப்பது போன்ற ஒரு உணர்வைப் பெறவா இவ்வளவு 'ரிஸ்க்' எடுக்க வேண்டும்?

இதற்கெல்லாம் என்ன காரணம் என்றால், வாழ்வை இன்னும் ஆழமாக அனுபவிக்க வேண்டும் என்ற உந்துதல் தான். இது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உள்ளது. இந்த ஆழமான அனுபவத்திற்கான தேடல் அனைவரிடமும் உள்ளது. அதை அடைய அவர்கள் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் யோக மையத்திற்கு வந்தாலும் சரி, அல்லது மதுக்கூடத்தை நோக்கிச் சென்றாலும் சரி வேறு எங்கே சென்றாலுமே இன்னும் ஆழமான ஒரு அனுபவத்தைத் தேடித் தானே செல்கிறார்கள். இல்லையா?

ஆனால் எங்கு சென்றாலுமே ஒரு ஆபத்து இருக்கிறது. மதுக்கடைக்குச் செல்லும் போதெல்லாம் வாழ்வில் எதையோ பணயம் வைக்கிறீர்கள். நீங்கள் போக மையத்திற்கு வந்தால்கூட வாழ்வில் ஏதோ ஒன்றை பணயம் வைத்துத்தானே வருகிறீர்கள்?

துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான மக்களுக்கு வலிதான் ஆழமான அனுபவமாக இருக்கிறது. வாழ்வில் ஆனந்தம் என்பதை மேலோட்டமானதாகவே அவர்கள் உணர்ந்திருக் கிறார்கள். ஆனால் வேதனையோ அவர்களின் ஆழமான அனுபவமாக உள்ளது.

இதனால்த்தான் கலைஞர்கள் பலர் துயரத்தை மையமாக வைத்தே தம் படைப்புகளை உருவாக்குகிறார்கள். இசைக்கலைஞர்கள், ஓவியர்கள், நடனக்கலைஞர்கள் எப்போதுமே துயரத்தையே தங்கள் படைப்பின் கருவாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இது ஏன் என்றால் அவர்களின் ஆழமான அனுபவமாக வலி மட்டும்தான் உள்ளது. ஆனந்தத்தை அதன் ஆழத் தில் அவர்கள் உணரவே இல்லை. துயரத்தினால் அவர்கள் படைப்பு இனிமையற்று இருந் தாலும்கூட அதில் ஆழமான அனுபவம் உள்ளது.

அந்த, ஆழமான அனுபவம் தேடி, எங்கு சென்றாலுமே வாழ்க்கையை பல வழிகளில் பணயம் வைத்துத்தானே செல்கிறீர்கள், இல்லையா?

**(ஆனந்தம் இன்னும் வரும்....)**

# அகந்தை உற்றும் ஆன்மீகம்

- க. சிவசங்கரநாதன் J.P.அவர்கள் -

நான் என்னும் அகந்தை உள்ளவரை இறைவனோடு இரண்டறக் கலக்கும் நிலை மனிதனுக்கு சித்திக்கவே செய்யாது என்று கூறுவர். இந்த நான் என்ற அகந்தை விவகாரத்தைத் தமக்கு ஒட்டாத ஒவ்வாத விடயம் என்று சாமானிய மக்கள் தள்ளிவிடுவது வழக்கம். இது ஏதோ விளங்கிக்கொள்ள இயலாத வேதாந்ததத்துவம் என்ற பிரமிப்பு அவர்களுக்கு. உண்மை யில் இந்த நான் விவகாரம் மனித வாழ்க்கையில் ஊடாடிக் கலந்திருக்கும் மனோதத்துவப் பிரச்சினையாகும். நான் என்ற சொல்லின் பொருள் என்ன? ஒரு மனிதன் தன்னைப் பற்றிக் குறிப்பிடும்போது நான் என்கிறான். நான் போனேன் நான் வந்தேன், நான் சாப்பிட்டேன் என்பன சான்றுகள். ஆனால் நான் என்ற சொல் ஒரு மனிதனைப் பற்றிச் சுட்டிக் காண்பிக் கக்கூடிய சரியான சொல்லா?

நான் சாப்பிட்டேன் என்று சொல்லும் அது சரியான அமைப்புப் போலத் தோன்றுகிறது. நான் என்பது வேறு எந்தச் சொல்லிலும் ஒட்டாமல் வேறுவகையாக தன்னை மாற்றிக்கொள்ளா மல் தனித்து நிற்கும் இயல்புடையது என்று விளங்குகிறது. அதாவது ஒருவித ஆணவம் அல்லது அகந்தை இந்த நான் என்ற சொல்லின் இயல்பாக இருப்பது விளங்குகிறது. தனித்த நிலை - அல்லது தனிமை என்பது மனிதனுடைய இயல்பே அல்ல. உடலியல் வழியில் ஆராய்ந்து பார்த்தாலும் தனித்த ஒரே பொருளால் நமது உடல் அமைக்கப்பட்டி ருக்கவில்லை. நிலம் நீர் நெருப்பு காற்று ஆகாயம் என்ற ஐம்பூதக் கூறுகளின் சேர்க்கை யாகவே நமது உடல் விளங்குகிறது. இந்த ஐம்பூதங்கள் சேர்க்கையாக அமைந்திருக்கும் மனிதன் ஏதோ தான்மட்டும் தனித்த ஒரு சிறப்புப் படைப்பாக இறைவனால் ஆக்கப்பட்டி ருப்பதாக எண்ணி அகந்தை கொள்கிறான் உண்மையில் இந்த அகந்தைக்கு அர்த்தமே இல்லை. உலகத்தில் வாழும் மனிதன் அல்லாத எந்த உயிரினமும் கூட ஐம்பூதங்களின் ஏதோ ஒருவகைப்பட்ட கூட்டமைப்புத்தான் ஆக உடலமைப்பை பெற்ற மனிதன் தற்பெருமை கொள்வதற்கு வகையே இல்லை. ஆகவே நான் என்ற அகந்தைக்கு அர்த்தமே இல்லை. நான் என்ற அகந்தை மனிதனைத் தனிமைப்படுத்திவிடும் என்று இக்கருத்தை வைத்துத்தான் சொல்லப்படுகிறது. நான் என்ற அகந்தையுடன் மனிதன் தன்னைப்பற்றிப் பெரிதாக எண்ணிக் கொள்ளும்போது இதே நானுக்கு மற்ற உலகத்து உயிர்ப்பொருள்களுக்குமிடையே வேறுபாடே இல்லை என்ற உணர்வு அறவே அற்றுப் போகிறது. இதன் காரணமாக உலகத்தில் நான் என்ற அகந்தை கொண்ட மனிதன் பிற உயிர்கள் சக்திகள் பொருள்கள் ஆகியவற்றினின்றும் தனிமைப்படுத்தப்பட்டு விடுகிறான்.

நான் என்று தனியாக ஒன்றுமே இல்லை. எல்லாமே நான்தான் என்று உணரும்போது மனிதன் இறைவனை அல்லது இறைமையை சேர்த்து உணருகிறான். ஏனெனில் இறைவன் உலகில் எல்லாப் பொருள்களிலும் உயிர்களிலும் ஊடாடிக்கிடக்கிறான். நான் என்று நம்மைத் தனிமைப்படுத்திக் கொள்ளும்போது நாம் இறைமையையும் புறக்கணிக்கின்றோம். இறைவன் வகுத்தளித்திருக்கின்ற வாழ்க்கை நியதியை மீறுகிறோம். நம்மை நாமே தனிமைப் படுத்திக் கொள்ளும் நிலையில் நமது உள்ளுணர்வு எப்படியிருக்கும் என்பதற்கு ஒரு சான் றினைக் காண்போம். ஒரு பெரிய ஜனத்திரளுக்கு மத்தியில் நாமிருக்க வேண்டியதில்லை. நமக்கேதோ சிறப்புகள் இருப்பது போலவும் மற்றவர்களுக்கு அது இல்லை என்பது போலவும் எண்ணியோ அல்லது பிறருடன் பழகி நட்புறவு கொள்ள இயலாத காரணத்தாலோ அந்தப் பெரிய கூட்டத்தின் மத்தியில் நாம் யாருடனும் பழகாமலும் பேசாமலும் மௌனமாக இருக் கிறோம். அதாவது அந்தப் பெரிய கூட்டத்தின் மத்தியில் நாம் நம்மை மட்டும் தனியாகப் பிரித்து நம்மை நாமே தனிமைக்கு உட்படுத்திக் கொள்கிறோம். அதே நிலையில் நெடுநேரம் இருக்க நேர்ந்தால் ஒருவிதமான மனவருத்தம் நமக்கு ஏற்படுவதை உணரலாம். சூழ்நிலை வெகுவிரைவில் சலித்துப் போகும் காரணமாக மற்றதொரு வெறுமை உள்ளத்தில் படரும் மன அமைதிகெடும். முடிந்த மட்டும் அந்த இடத்தைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்ற துடிப்பு நமக்கு ஏற்படும். உண்மையில் அப்படி நாம் நினைக்க வேண்டிய அவசியமே இல்லை. நாம் வெளியேறிவிடவேண்டிய நிர்ப்பந்தம் ஏதுமில்லை. நினைத்தபடி நாம் அந்தக் கூட்டத்தை விட்டு அகல வாய்ப்பும் வசதியும் கிடைக்கவில்லை என்றால் கிட்டத்தட்ட பித்துப் பிடிக்கும் நிலைக்கு நாம் வந்து விடுவோம். அண்டை அயலாரிடமும் ஒட்டுறவுடன் பழகி அவர்களுடன் நட்புக்கொண்டு உறவாடும் இயல்பு நமக்கிருந்தால் அந்தச் சூழலே நமக்கு மகிழ்ச்சியூட்டு வதாக அமைந்துவிடும். மகிழ்ச்சியுடனும் மனநிறைவுடனும் உடனிருப்போருடன் உரையாடிக் கொண்டி ருப்பதிலேயே நேரம் செல்வது தெரியாது.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தில் இடையிலேயே தனிமை உணர்வு நம்மை ஆட்டிப்படைத்து மனக்கிளர்ச்சியை தோற்றுவித்து விடுகிறதென்றால் இந்தப் பரந்த உலகத்தில் நாம் தனிமைச் சூழ்நிலையைச் சிருஷ்டித்து அதனுள்ளிருந்து வாழ முற்பட்டால் அது நல்லதல்ல. சமுதாயத்தோடு நம்மையும் இணைத்துக்கொண்டு சமு தாயத்தின் ஓர் அங்கமாக ஆகிவிட்டால் அப்போது நமது சிந்தனை - செயல் ஆகியவற்றிற்குத் தனி அர்த்தமும் மதிப்பும் ஏற்பட்டு விடுகின்றது. சமுதாயத்தின் தொடர்பிலிருந்து நம்மை விடுவித்துக்கொண்டு தனிமை வாழ்வில் இன்பம் காண்பது என்று முடிவெடுத்தோமானால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பிறகு எதிர்மறையான மன உணர்வு தோன்றி நமது மன அமைதிகெட்டு அதன் பயனாக நாம் மகிழ்ச்சியற்ற வாழ்க்கை வாழ வேண்டி வந்துவிடும். அகந்தையை விடுத்தாலொழிய இறைவனை உள்ளபடி உணர முடியாது இறைவன் நற் கருணையைப் பெறமுடியாது என்று கூறுவது மேற்சொன்ன கருத்துக்களை உள்ளடக்கித் தான். தனக்கும் உலகத்திலுள்ள அனைத்து உயிர்களுக்குமிடையே வேற்றுமை இல்லை. எல்லாம் ஒன்றுதான் என்ற எண்ணம் ஏற்பட வேண்டுமானால் உலகத்தில் உள்ள எல்லாமே


இறைவனின் பேருருவங்களே என்ற ஞானம் ஏற்பட்டால் "நான்" என்ற அகந்தை அகன்றுவிடும் என்றார்கள் பெரியோர்கள். பொதுவாக மனிதனுக்கு அகந்தை கூடாது என்று உலகம் முழுவதும் உபதேசிக்கப்படுகிறது. ஆனால் இந்த அகந்தையை எவ்வாறு அகற்றிக் கொள்வது என்று வழிகாட்டுவோர் தாமும் முன்மாதிரியாக வழிகாட்டியுள்ளனர். அகந்தை என்றால் என்ன என்று விளங்கிக் கொண்டால் அதனை அகற்ற வழி காணமுடியும். ஆன்மீக பெரியார்கள் அகந்தையின் அடிப்படையினைக் கண்டறிந்துள்ளார்கள். இறை நம்பிக்கை என்ற ஆன்மீக உணர்வு ஒன்றுதான் அகந்தை அழிவதற்கான மார்க்கம் என்று கூறியுள்ளனர். இறை நம்பிக்கை, ஒழுக்கத்தை, பண்பை, மனப் பலவீனத்தையும் நீக்க உதவுகின்றன. இதையுணர்ந்து செயல்படுவோமாக.

---

# செல்வச் சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை (6)





நந்த மர்ம னம்றி னைந்த வன்று அந்தி சந்தி வந்து
திண்ணை யில்அ மர்ந்தி ருந்து - உரையாடி
நன்கு ளந்தி றந்து நின்று சொல்லு சங்க டம்ம றைந்து
நன்கி லங்க ருள்வ ழங்கு - வடிவேலா!
வந்தி ருந்து உள்ள முள்ள தந்து யர்பு கன்று வுந்தன்
சிந்தை நன்கி ரங்கி டென்று - அழவேதான்
வெந்த நெஞ்சு கொண்ட வந்த அன்பர் தம்மி டர்அ கன்று
இன்பி னில்அ முந்தி ரென்று - அருள்வோனே
உந்த னின்பு கழ்வி ளம்பு செந்த மிழ்க்க டம்பு கொண்டு
வந்து உன்க ழல்அ ணிந்து - தொழுநாடி
உன்னு மென்உ யிர்க வர்ந்து செல்ல வந்த கன்நெ ருங்க
உன்ம யில்அ மர்ந்து வந்து - காவாயோ?
பந்த வள்ளி தெய்வி யின்றி யிங்கெழுந்த மர்ந்தி ருந்து
சங்கை யுள்அ ருள்வ ழங்கு - வேலான
கந்த னுன்ப தம்ப ணிந்து கெஞ்சு தொண்டர் நெஞ்சி லின்பை
சந்த தம்வ ழங்கி டுஞ்சந் - நிதியானே!



- இராசையா குகதாசன்,
நாயன்மார்க்கட்டு.

உ

# 2010 ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| செ. சூரியகுமார் | இன்பர்சிட்டி | 4,000.00 |
| வி. யாழினி | சங்கானை | 1,000.00 |
| S. பத்மலிங்கம் குடும்பம் | ஆவரங்கால் கிழக்கு | 5,000.00 |
| த. செல்வராணி | இலக்கணாவத்தை உடுப்பிட்டி | 10,000.00 |
| க. காசிநாதர் | நீர்வேலி வடக்கு | 500.00 |
| கலைச்செல்வி சற்குணராசா | நோர்வே (ஆறு மாதம்) | 6,000.00 |
| கந்தசாமி செந்தூரன் | நவாலி | 500.00 |
| துரையப்பா ஜெயபதி | வாழைச்சேனை, மட்டக்களப்பு | 2,000.00 |
| S. முருகானந்தன் | அவுஸ்திரேலியா | 1,000.00 |
| திருமதி த. பார்த்தசாரதி | உடுப்பிட்டி | 1,000.00 |
| முத்துப்பிள்ளையார் ஸ்ரோர்ஸ் | அச்சுவேலி | 1மூ. அரிசி |
| K. விக்னேஸ்வரன் | லண்டன் | 10,000.00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி (தாதிய உத்தியோகத்தர்) யாழ். | | 2,000.00 |
| ஐ. விநாயகமூர்த்தி | கனடா | 10,000.00 |
| இராமலிங்கம் யோகநாதன் | ஆவரங்கால் | 3,000.00 |
| சின்னராசா சுபசீலன் | ஊரிக்காடு | 5,000.00 |
| செல்வி ப. கந்தையா | யாழ்ப்பாணம் | 2,000.00 |
| கைலாயபிள்ளை குமாரகுலசிங்கம் | கோண்டாவில் வடக்கு | 1மூ. அரிசி |
| க. தர்மலிங்கம் | விழிசிட்டி ஏழாலை | 1,500.00 |
| ஸ்ரீ புருஷோத்தமன் | புத்தூர் | 3,000.00 |
| பதுமநிதி | அச்சுவேலி | 1,000.00 |
| முருகசெழியன் கலைவாணி | லண்டன் | 5,000.00 |
| இராசரெத்தினம் ராசேஸ்வரி | கொழும்பு | 5,000.00 |
| பா. முருகதாஸ் | பழவத்தை, வல்வெட்டி | 10,000.00 |
| சிவசுப்பிரமணியம் கந்தையா | கொழும்பு | 10,000.00 |
| சி. சிவலோகலிங்கம் | நிலாவெளி திருகோணமலை | 10,000.00 |
| திருமதி தே. சந்திரப்பிரகாசம் | ஆத்தியடி பருத்தித்துறை | 4,300.00 |
| திருமதி த. மகாலிங்கம் | அச்சுவேலி | 5,000.00 |
| ஸ்ரீ கணேசா வித்தியாலயம் | சித்தங்கேணி | 1,600.00 |
| சின்னத்துரை குடும்பம் | ஞானவைரவர் வடலியடைப்பு | 4,000.00 |

| | | |
|---|---|---|
| இ. தவமணி வசந்தகிரி | கரணவாய் | 2,000.00 |
| லோகநாதன் வேலழகி | சுழிபுரம் | 500.00 |
| லோகநாதன் கஜன் | சுழிபுரம் | 500.00 |
| து. சிவாஜி | குடத்தனை | 1,500.00 |
| S. சோமாஸ்கந்தமூர்த்தி | கொழும்பு | 500.00 |
| R. ரவீந்திரன் | அவுஸ்திரேலியா | 38,000.00 |
| வைரமுத்து தங்கப்பழம் | சுவிஸ் | 25,000.00 |
| S.M. நிமால்குமார் தேசிய செயலாளர், இ.செ. சங்கம் கொழும்பு | | 10,000.00 |
| பிரசன்னா தஸநாயக்கா (இ.செ.சங்) | | 500.00 |
| சுப்பிரமணியம் அரவிந்தன் (இ.செ.சங்) | | 1,000.00 |
| லசந்த நாரயணா (இ.செ.சங்) | | 500.00 |
| அ. துரைச்சாமி ஐயர் | மாவிட்டபுரம் | 10,000.00 |
| வே. ஸ்ரீதயாளன் | நெசவு ஒழுங்கை, உடுப்பிட்டி | 2,000.00 |
| அனுசியா மாதவன் | துன்னாலை | 10,000.00 |
| வே. வில்லவராசா | சுதுமலை | 1,000.00 |
| கலாதரன் நிருஷன் | லண்டன் | 5,000.00 |
| திருமேனி ஜீவகாந்தன் | வட்டுக்கோட்டை | 5,000.00 |
| சொ. அரியலிங்கம் | மந்திகை | 3,000.00 |
| திருமதி சரஸ்வதி தங்கராசா | | 500.00 |
| பா. சண்முகராஜன் | கிருஷ்ணா வெதுப்பகம், மந்திகை | 1,000.00 |
| வெ. சுதாகரன் | கே.கே.எஸ். வீதி, யாழ். 1மூ. அரிசி, | 10,000.00 |
| த.சிவகுமாரன் | இணுவில் மேற்கு | 1மூ அரிசி |
| ச. செல்லத்துரை | ஆவரங்கால் | 7,000.00 |
| திருமதி தேவமித்திரன் கலைமதி | (கனடா) மந்துவில் | 5,000.00 |
| பூபாலசிங்கம் குடும்பம் வசந்தி | யாழ்ப்பாணம் | 1மூ. அரிசி மரக்கறி |
| க. ஆறுமுகம் | யாழ்ப்பாணம் | 5,000.00 |
| சோமலிங்கம் ஸ்ரீதரன் | சித்தங்கேணி | 1மூ. அரிசி |
| திருமதி தேவகி அருமைச்சந்திரன் | ஆத்தியடி பருத்தித்துறை | 5,000.00 |
| சச்சிதானந்தம் | சிறுப்பிட்டி | 4,000.00 |
| விஜயசங்கர் | குடத்தனை 1மூ அரிசி, | 2,000.00 |
| உதயலிங்கம் யோகாம்பிகை | மூளாய் | 4,000.00 |
| சுரேஷ்குமார் | மூளாய் | 1,000.00 |
| யோகராணி இராஜகோபால் | கொழும்பு - 6 | 3,000.00 |
| ஜெயரட்ணராசா ஜெயகாந்தன் | துன்னாலை | 2,400.00 |

உ

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத் தொடர் - 33)

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்-

உலக பந்த பாசங்களில் ஆன்மா அமிழ்ந்துவதற்கு மூல காரணமாக இருப்பவை மலங்களே ஆகும். மலம் தன் வலி ஒடுங்கிய நிலையில் ஆன்மா சிவத்தைச் சார்ந்து தன்னையும் மறந்து வியாபகமாய் நிற்கும் தன்மை நின்மலாவத்தை நிலை ஆகும். சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையுடையது ஆன்மா. ஆன்மா சத்தாகிய சிவத்தையும் சாரும்: அசத்தாகிய மலங்களையும் சாரும் இதனால் சதசத்து என்று அழைக்கப்படுகிறது.

*சத்தசத்தைச் சாராது அசத்தறியாது அங்கணிவை*
*உய்த்தல் சதசத்தாம் உயிர்*

எனத் திருவருட்பயன் இதனை விளக்குகிறது. நின்மலாவத்தை நிலையில் அறியாமையாகிய கேவல நிலையிலிருந்த ஆன்மா ஏகதேச ஞானத்தைத் தரும் கருவிகளைச் சார்ந்து சிவமாம் தன்மையைப் பெற்று வியாபகமாய் நிற்கும். எண்ணம், சொல், செயல், ஏதும் எண்ணாத தூய நிலை நின்மலாவத்தை எனப்படும். நின்மலாவத்தையில் பொருந்தியவர் பிரணவ தேகம் பெற்று மரணமிலாப் பெருவாழ்வு பெறுவர். தன்னையும் தலைவனையும் அறியும் தவப்பேறு இல்லாதவர் மீண்டும் மீண்டும் பிறவியினைப் பெற்று இப்பிரபஞ்ச வாழ்க்கையில் அழுந்துவர். தன்னையும் தலைவனையும் அறிபவர்களே சிவப்பேறு எய்துவர்.

ஐம்பொறிகளாகிய யானைகளை அடக்கி அறிவாகிய ஞானத்திரியைத் தூண்டிப் பிரகாசிக்கச் செய்வதே ஆன்ம விடுதலைக்கான சிறந்த வழி ஆகும். ஞானம் தோன்றியதும் உள்ளத்தின் உள்ளே சிவ ஒளி பிரகாசிக்கும். சிவ ஒளி பிரகாசித்ததும் ஊனாலாகிய உடம்பு சோதி வடிவாக மாற்றம் பெறும். சிவலோகம் எய்துவதற்கு இதுவே மிக எளிய வழியாகும்.

*ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்*
*ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்கு*
*ஊனை இருளை நோக்கும் ஒருவற்கு*
*வானகம் ஏற வழி எளிதாமே*

முற்பிறவிகளில் நன்றாய் முயன்று தவம் செய்யாதவர்களே தொடர்ந்து பிறவி எடுத்துப் பிரபஞ்சச் சேற்றில் அழுந்துகிறார்கள் என்பதைப்

*பின்னை நின்றின்னே பிறவி பெறுவது*
*முன்னை நன்றாக முயல் தவம் செய்கிலர்*

எனத் திருமூலர் திருமந்திரத்தின் பாயிரச் செய்யுளில் குறிப்பிட்டுள்ளார்.

முற்பிறவிகளில் செய்த நல்லறங்கள் மேலான தவச் செயல்கள் என்பவற்றின் பயனைப் பின் தொடரும் பிறவிகளில் பெற்றுள்ள நற்பயன்களால் ஞானத்தினால் அறிந்து கொள்ளலாம். பல பிறவிகளில் செய்த தவத்தின் பயனால் தான் இப்பிறவியில் தன்னை

அறியும் உயர் ஞானத்தைப் பெற முடியும். தன்னுள்ளே இருக்கும் பரம்பொருளை அறிவதே உண்மையான மெய் அறிவு ஆகும். மற்றையவை எல்லாம் பயனற்ற அறிவாகவே உள்ளது. தவயோகி திருமூலநாயனார் இதனைப் பேயறிவு என்கிறார்.

*முன்னை அறிவினில் செய்த முதுதவம்*
*பின்னை அறிவினைப் பெற்றால் அறியலாம்*
*தன்னை அறிவது அறிவாம் அஃது அன்றிப்*
*பின்னை அறிவது பேயறிவாகுமே*

ஆன்மாக்கள் தன்னை உணர்ந்து அறியும் அறிவைப் பெற்றுவிட்டால் பிறந்து பிறந்து இறக்கும். துன்பத்தை அடைய வேண்டுவதில்லை. இல்லாவிட்டால் "பிறப்பதற்கே தொழிலாகி இறக்கின்றாரே" என்ற அப்பர் வாக்கிற்கு அமையப் பிறவி நோய் தொடர்ந்து கொண்டே இருக்கும். தன்னைத் தான் அறியும் அறிவை ஆன்மாபெற்றுவிட்டால் அச்சீவன் தன்னைச் சிவனுக்கே அர்ப்பணித்துக் கொள்ளும். இவ்வாறு ஆத்ம நிவேதனம் செய்பவர்களின் உள்ளத்தின் உள்ளே சிவன் எழுந்தருளுவான். புலன் இச்சைகள் அடங்க மனம் சிவசிந்தனையில் பொருந்தி எல்லாம் எமை ஆளும் ஈசன் செயல் என்றிருக்கும். கருவி கரணங்களின்றித் தானே எல்லாவற்றையும் அறியவல்ல ஒளி வடிவினை ஞான சாதனையால் ஆன்மா பெற்றுக் கொள்ளும். தன்னை அறிந்து எல்லாம் சிவன் செயல் என்று இருப்பவர்களை வினைகள் எதுவுமே தாக்காது. இந்நிலையினைப் பெற்றவர்கள் உலகோர் வணங்கும் படியான சிவசொருபமாகத் திகழ்வார்கள்.

*தன்னையறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னையறியாமல் தானே கெடுகின்றான்*
*தன்னையறியும் அறிவை அறிந்தபின்*
*தன்னையே அர்ச்சிக்கத் தான் இருந்தானே.*

மாயா விளக்காகிய இந்த உடம்பு அழியக் கூடியது. உடம்புக்குள் இருக்கும் உயிர் உள்ளவரை உடம்பாகிய விளக்கு நின்று எரியும். உயிர் உடலை விட்டுப் போனதும் உடம்பு அழிந்துவிடும். விளக்கும் அணைந்துவிடும். புனிதமான நல்ல விளக்காகிய தூய விளக்கு இறைவனுடைய திருவிளக்காக என்றும் பிரகாசிக்கும். ஆன்மா மலங்களால் கட்டுப்பட்டு இருக்கும் நிலையில் (பெத்த நிலையில்) ஆத்ம சொருபம் தேகத்தோடு பொருந்தியிருக்கும் வெளியிலே தெரியாதவாறு மறைந்திருக்கும். ஞான நிலையில் நிற்போர்க்கு ஆத்ம சொருபம் ஒளிபெற்று விளங்கி நிற்கும் இந்த ஒளியானது தேகத்திலே இருந்து சூட்டினை நல்கிக் கொண்டிருக்கும். அறியாமை இருளினை அகற்றும் அந்த அருட் சோதியினைத் தான் தேடுகின்றேன் எனத் தவயோகி தனது தமிழ் மந்திரத்திலே குறிப்பிடுகின்றார்.

*மாய விளக்கது நின்று மறைந்திடும்*
*தூய விளக்கது நின்று சுடர்விடும்*
*காய விளக்கது நின்று கனன்றிடும்*
*சேய விளக்கினைத் தேடுகின்றேனே*

வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளிச் செய்யப்பெற்ற உண்மையை அறிவிக்கும் நூல்களாகும். வேதங்களைச் சுருதி என்றும் ஆகமங்களைப் பரசுருதி என்றும் அழைப்பர். வேதத்தைப் பொது நூல் என்றும் ஆகமத்தைச் சிறப்பு நூல் என்றும் கூறுவர். இறைவனால் உணர்த்தப் பெற்ற இந்த இரண்டு நூல்களின் முடிவும் வேறானவை எனச் சிலர் கூறுவர். ஆனால் தத்துவ தரிசனம் கண்ட பெரியோர்கள் இரண்டிற்குமிடையே வேறு பாட்டைக் காண்பதில்லை. இரண்டு நூல்கள் கூறும் முடிவும் ஒன்றே எனக் கூறுவர்.

*வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்*
*ஓதும் பொதுவும் சிறப்புமென்றுள்ளன*
*நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்*
*பேதமதென்பர் பெரியோர்க் கபேதமே*

மானுட உடம்பின் அமைப்பிலேயே நமது சிவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உடம்பில் உள்ள ஆறு ஆதாரங்களுக்கு அமைய ஆலயங்களில் ஆறுமண்டபங்கள் காணப் படுகின்றன. சிவன் கோயில்களின் உள்ளே சிவலிங்கமும், அதற்கு முன்பாக நந்தியும் நந்தியின் பின்னால் பலிபீடமும் இருக்கும். மூலஸ்தானத்தில் உள்ளசிவலிங்கம் ஐந்தொழில்களில் அருளலைக் குறிக்கும் சதாசிவ மூர்த்தம் ஆகும். மூலஸ்தானத்திற்கு எதிராக உள்ள, வலிமை மிக்க எருது (நந்தி) பக்குவப்பட்ட ஆன்மாவைக் குறிக்கும். இடபத்திற்கு பின்னால் உள்ள பலிபீடம் பாசத்தினைக் குறிக்கிறது. பாசங்களைப் பலிபீடத்தில் பலியிட்டுவிட்டுப் பக்குவப்பட்ட ஆன்மா மூலமூர்த்தியாகிய சிவனையே நோக்குவதால் திருவருளைப் பெறுகிறது. இவ் உண்மையினைச் சிவாலயத்தின் அமைப்புத் தெளிவாக விளக்குகிறது.

*ஆயபதிதான் அருட் சிவலிங்கமமாம்*
*ஆயபசுவும் அடலேறு என நிற்கும்*
*ஆயபலி பீடம் ஆகும் நற்பாசமாம்*
*ஆய அரன் நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே*

சிவ பக்தர்கள் அனைத்தையும் சிவமயமாகக் காண்பார்கள். அண்ட சராசரமெல்லாம் சிவசக்தியின் வியாபகத்தைக் கண்டு இன்புறுவார்கள். பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந் திருக்கும் பரிபூரண ஆனந்த வடிவினனாகிய சிவனை மர வடிவாகவும், மலை வடிவாகவும், நீர் வடிவாகவும், சிலை வடிவாகவும், காலை, மாலை என்னும் பொழுதுகளின் வடிவாகவும் சைவச் சான்றோர்கள் கண்டு மகிழ்ந்தார்கள் என்பதைப் பின்வரும் குறவஞ்சிப் பாடல் விளக்குகிறது.

*கிளைகளாய்க் கிளைத்த பல கொப்பெலாஞ்*
*சதுர்வேதம் கிளைகள் ஈன்ற*
*களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்*
*சிவலிங்கம் கனிகள் ஈன்ற*
*சுளையெல்லாம் சிவலிங்கம் வித்தெல்லாம்*
*சிவலிங்கம் சொருபமாக*

*விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த*
*சிவக்கொழுந்தை வேண்டுவோமே*

சிவனுடைய மூர்த்தங்களில் பஞ்சகிருத்திய வடிவமாக நடராஜர் வடிவம் காணப்படுகிறது. சமயம், தத்துவம், கலை ஆகிய மூன்றும் இணைந்து ஆனந்தத் தாண்டவம் ஆடும் வடிவமாக நடராஜர் வடிவம் மிளிர்கிறது. நடராஜ வடிவத்தின் உடுக்கு ஏந்திய கை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், தீ ஏந்திய கை அழித்தலையும், முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தலையும் தூக்கிய திருவடியாகிய குஞ்சிதபாதம் அருளலையும் குறிக்கிறது. மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன்றாகிய உண்மை விளக்கம் நடராஜர் வடிவத்தின் தன்மையினைப் பின்வரும் பாடலின் ஊடாக விளக்குகிறது.

*தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்*
*ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி*
*நான்ற மலர்ப் பதத்தே நாடு*

படைத்தலும், காத்தலும் இளைப்பாற்றும் பொருட்டுச் செய்யும் அழித்தலும், மறைத்தலும், வாழும் காலத்திலும், இறந்த பின்பு முத்தியின் பொருட்டுச் செய்யும் அருளலும் ஆகிய அனைத்துச் செயற்பாடுகளையும் சிவனே நடராஜ மூர்த்தியாகிச் செயற்படுத்துகின்றார்.

*படைப்பும் அளிப்பும் பயில் இளைப்பாற்றும்*
*துடைப்பும் மறைப்பும் முன்தோன்ற அருளும்*
*சடத்தை விடுத்த அருளும் சகலத்து*
*அடைத்த அனாதியை ஐந்து எனலாமே*

இறைவனை இடைவிடாது தியானிப்பவர்களுக்கு இறையருள் நிச்சயமாகக் கிடைக்கும் என்பதை "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்ற வாக்கு உணர்த்துகிறது. தியானிப்பவன் தியானிக்கப்படும் பொருளாக மாறிவிடுவான். (தியானத் யாத்துரு தேயருபா என்றே லலிதா சகஸ்ர நாமமும் குறிப்பிடுகிறது. கரங்குவித்து வணங்குபவர்களின் அகத்தில் மகிழ்ச்சியைத் தருபவன். கரங்களைச் சிரம் மேல் கூப்பித் தலைபணிந்து வணங்குபவர்களுக்கு உயர்ச்சியைத் தருபவன் இறைவன் என்பதைக்

*"கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க'*
*சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க"* என மணிவாசகரின் மணிவார்த்தையாகிய திருவாசகத்தின் சிவபுராண வரிகள் குறிப்பிடுகிறது. தன்னை இடையறாது வணங்கும் அடியவர்களுக்கு அண்மையில் வந்து அருள் புரிபவனாகிய இறைவன் தன்னை வணங்காதவர்களுக்கு தூரத்தே விலகி நிற்பான் என்பதைப்

*"புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க"* எனச் சிவபுராணம் செப்புகிறது. தன்னை வணங்காதவர்களுக்கு நலத்தைச் செய்யாதவன், வணங்கும் அடியவர்களுக்கு நன்மையை வாரி வழங்குபவன், மலங்களால் பீடிக்கப்படாதவன் சங்கரன் ஆகிய சிவன் என்பதை

*நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நலன்*
*சலமிலன் பேர் சங்கரன்*

எனத் திருவருட் பயன் கூறுகிறது.

இறைவனுடைய திருவடிகளை இடைவிடாது நினைப்பவர்களின் நெஞ்சை இடமாகக் கொண்டு அவனும் அவர்களை விட்டு நீங்காது அவர்களின் உள்ளத்தின் உள்ளே தங்கியிருப்பான். அவனை மனத்தால் நினையாதவரை வெறுத்து (கருத்து) ஒதுக்குவான். பக்குவ நிலையை அடைந்தவர்களை அப்பரம் பொருள் பாதுகாத்து தாங்கி நிற்பான்.

*தரித்து நின்றான் அடிதன் இடநெஞ்சில்*
*தரித்து நின்றான் அமராபதி நாதன்*
*தரித்து நின்றான் கருதாதவர் சிந்தை*
*பரித்து நின்றான் அப் பரிபாகத்தானே*

காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றும் உயிர்களுக்குத் துன்பத்தை தருவனவாக உள்ளன. இம் மூன்று குற்றங்களும் உயிர்கள் தங்களது உண்மைச் சொருபத்தை அறியவிடாது தடுக்கின்றன. காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றங்களில் இருந்தும் விடுபட்டவர் பிறப்பு இறப்புக்களை விட்டு நீங்கியவர் ஆவார். உயிர் நோயாகிய பிறவி நோய் ஏற்படுவதற்கு இம்முக்குற்றங்களும் காரணமாக அமைகின்றன. முக்குற்றங்களால் வரும் துன்பங்கள் உயிர்களுக்கு அழிவினையே நல்கும்.

*மூன்றுள குற்ற முழுது நலிவன*
*மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன*
*மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்*
*மூன்றினுட் பட்டு முடிகின்றவாறே*


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021-2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.
www. sannithiyan. org

# உயர்வான வாழ்வு

- இ. சாந்தகுமார் அவர்கள் -

*"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும்"*

உலகத்தில் வாழவேண்டிய அறநெறியில் நின்று வாழ்கின்றவன் வானுலகில் தெய்வ நிலையில் வைத்து மதிக்கப்படுவான் என்பது வள்ளுவர் வாக்கு.

எப்படியும் வாழலாம் என்பது முறையும் அல்ல ஒழுங்கும் அல்ல. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதே இந்துக்களின் உயர்வான வாழ்க்கைக்கு அத்திவாரமாகும் வாழ்க் கையில் பல்வேறுபட்ட துன்ப துயரங்களை வெல்ல வேண்டுமாயின் உலக ஆசைகளை, பற்றுக்களைத் துறக்க வேண்டும் என்று எமக்கு கற்றுத் தந்ததோடு சித்தர்கள், ஞானிகள், நாயன்மார்கள். வாழ்ந்தும் காட்டியிருக்கின்றார்கள்.

வாழ்வின் நிறைவை அடைய வேண்டுமாயின் பகைவனையும் மன்னித்து அன்பு செலுத்த வேண்டும் என்பதை இராமாயணம் "இன்று போய் போர்க்கு நாளைவா" என்று நிராயுதபாணியாக நின்ற இராவணனைப் பார்த்து இராமன் கூறுவதன் மூலம் எடுத்துக் காட்டுகின்றது.

அன்றைய வாழ்வு முறைக்கும் இன்றைய வாழ்வு முறைக்கும் சில வேறுபாடுகள் வந்துகொண்டிருக்கின்றன. அன்றைய மக்கள் சைவசமயக் கொள்கை வழி நின்றுதான் எந்தவொரு கருமத்தையும் நடாத்துவார்கள். சாதாரணமாக ஒரு எழுத்து வேலை ஆரம்பிக்கும் போது கூட பிள்ளையார் சுழி, சிவமயம் எழுதித்தான் தொடங்குவர். எந்தவொரு சடங்கு சம்பிரதாயங்களுக்கும் கும்பம் வைத்து பிள்ளையாரை சாணத்தில் இருத்தி தீபம் ஏற்றி எடுத்துக் கொண்ட முயற்சி எந்தவித குறையும் இன்றி சிறப்பாக நிறைவேற வேண்டும் என வேண்டுதல் செய்து ஆரம்பிக்கின்றார்கள். இது நம் முன்னோர் இறைவன் மீது கொண்ட பற்றுதலையும் இறை சிந்தனையோடு தமது வாழ்க்கையை பின்னிப் பிணைத்திருப்பதையும் காணக் கூடியதாக இருந்தது. இந்த மனப்பக்குவ நிலை இன்று சிறிது சிறிதாக அருகிக் கொண்டுவருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த நிலை மாற வேண்டும். மாற்றுவதற்கு நாம் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

அன்றைய சித்தர்களும் ஞானிகளும் நாயன்மார்களும் தங்கள் வாழ்க்கையின் மூலம் வாழ்க்கைக்கே இலக்கணம் கற்பித்துத் தந்தவர்கள். இவர்கள் வானுறையும் தெய்வங்கள் மட்டுமல்ல மக்கள் மனங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறார்கள்.

*"கடவுள் ஒருவர் இருக்கின்றார்*

*அவர் எங்கும் உள்ளவர்*

*அவர் எங்கும் நிறைந்தவர்*

*அவர் எல்லாம் அறிபவர்*

*அவர் இரக்கம் உடையவர்*

*அவர் நம்மைக் காப்பாற்றுகிறார்*

*அவரை ஒருநாளும் மறவாதே*

*அவரை எந்நாளும் வணங்கு?* என நாவலர் பெருமான் இறைவனின் அன்பை தெளிவுபடுத்துகின்றார்.

இவ்வுலகில் எண்ணில்லாத உயிரினங்கள் வாழ்கின்றன. ஓரறிவுடைய புல், பூண்டு முதல் ஆறறிவுடைய மனிதன் ஈறாக. விலங்குகள் ஐந்தறிவுடையவை. ஆறாவது பகுத்தறிவை கடவுள் மனிதனுக்கு மட்டும் தான் கொடுத்திருக்கின்றான். மனிதனால் மட்டுமே எதையும் ஆராய்ந்து அறிந்து செயற்பட முடியும். "மனிதன்" என்னும் ஆளுமை அன்புணர்வில் பரிமாணம் பெறுவதே அறவியலின் அத்திவாரமெனலாம். அப்போது தான் 'மனிதன்' என்ற சொல்லின் பொருள் நிறைவு பெறுகின்றது.

*மனிதனைப் போலொரு மேன்மையுமில்லை*

*மனிதனைப் போலொரு மெய்மையுமில்லை*

*மனிதன் இயற்கையின் எதிரொலிச் சின்னம்*

*மனம் இல்லையேல் அவன் விலங்காண்டி காண்"* என உலகாயதச் சித்தர் ஒருவர் மனித தத்துவத்தின் மேன்மையை உணர்த்தினார்.

எனவே பகுத்தறிவுடைய நாம் நமக்கும் பிறர்க்கும் பயன்படக் கூடிய வகையில் வாழவேண்டும். பசிவந்தபோது உணவு தேடி உண்டும், உறக்கம் வரும்போது உறங்கியும் வாழ்க்கையை வீணாக்காமல் நாம் ஏன் பிறந்தோம்? ஏன் வாழ்கின்றோம்? இந்த வாழ்க்கையின் பயன் என்ன? இறந்த பின் உயிர் எங்கு செல்கிறது? என்பதனையெல்லாம் நமது பகுத்தறிவால் ஆராய்ந்து உண்மையை அறிந்துணர வேண்டும்.

நாம் அனைவரும் இவ்வையக வாழ்வை மகிழ்ச்சியுடையதாக மாற்ற வேண்டும். அவ்வாறு மாற்ற வேண்டுமாயின் அறவழியில் நின்று தர்ம காரியங்களை மனநிறைவோடும், இறை நம்பிக்கையோடும் ஆற்றவேண்டும். இம் மண்ணக வாழ்வில் மகிழ்ச்சியாக வாழாதவன் விண்ணக வாழ்வில் மட்டும் எவ்வாறு ஆனந்தமாக இருக்க முடியும்? நிகழ்கால வையக வாழ்வையே வாழ்வாங்கு வாழ்வோமாயின் அப்போது தான் நாம் வானுறையும் தெய்வத்துள் வைத்துப் போற்றப்படுவோம் என்பதில் சந்தேகமில்லை.

*"முயற்சியை உயர்த்திக் கொள்*

*அடிவானம் கூட உன் கையில்"*

*'வெற்றி பெறுவது என்பது முன்பதிவு செய்யப்படுவதில்லை*

*முயற்சி உடையவன் அதை தன்வசமாக்கிக் கொள்கின்றான்"*

உ

வாரியார் பக்கம் :

# திருநீறு

- வாரியார் சுவாமிகள் -



**தூளி:**

தூள் - திருநீறு

வினைகளை நீக்குவதால் இப்பெயர் பெற்றது. குழந்தைகளின் நோய் தீர தாய் மருந்துண்டு பத்தியம் இருப்பதுபோல் தன்னை வணங்கும் உயிர்களின் வினை தீரும் பொருட்டு அன்னை அம்பிகை திருநீற்றைத் தரிக்கின்றனள்.

முத்தியைத் தர வல்லதும், முனிவர்கள் அணிவதும், உண்மைப் பொருளாக விளங்குவதும், உத்தமர்களால் புகழப் பெற்றதும், அன்பை விளைவிப்பதும், பரவுவதற்கு இனிமையானதும், எண்பெருஞ் சித்திகளைத் தருவதும் திருநீறு என்று உணர்க.

*முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு*
*சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு*
*பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு*
*சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே*

எத்தனையோ பிறவிகளிற் செய்த நல்வினைப் பயனாகவும் புண்ணியவசத்தினாலும் உயிர்கள் இப்பூலகில் தோன்றுகின்றன. அப்படிப் பிறந்து பற்பல பிறப்புகளில் செய்த அறத்தின் பயனாக திருநீற்றைப் பூசும் மேலான பிறப்பு எய்துகின்றது. அவ்வாறு எய்த இவ்வரிய தருணத்தில் திருநீற்றைப் பொன்னேபோல் போற்றிப் பூசிச் சிவனருளைப் பெற முயலுதல் வேண்டும். திருநீற்றைப் பூசும் சைவசமயத்திற் பிறந்தும் இப்புண்ணிய திருநீற்றைப் பூசாது கெடும் மாந்தரின் மதிதான் என்னே! அவர்கள் அடையும் கதிதான் யாதோ?

*பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்*
*துணிநிலா அணியி னான்தன் தொழும்பரோ டழுந்தி யம்மால்*
*திணிநிலம் பிளந்தும் காணாச் சேவடி பரவி வெண்ணீ(று)*
*அணிகிலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சு மாறே.*

என்பார் மாணிக்கவாசகர்.

*"அருள்செய் நீறிடார் அமுதுனக் கிடினும்*
*அம்ம லத்தினை அருந்துதல் ஒழிக"*

என்பார் இராமலிங்க அடிகள்

க.பொ.த. உயர்தர மாணவரின் மேலதிக வாசிப்புக்குரியது

# சுந்தரர் பாடிய சீபர்ப்பதம்

## அன்றும் இன்றும்

**- விரிவுரையாளர் ச.லலீசன், அவர்கள் -**

பல்லவர் காலப் பக்திப் பாடல்களைப் பாடியோருள் சுந்தரருக்குத் தனிச் சிறப்புண்டு. இயற்கை அழகை இரசித்துப் பாடும் இவரது ஆற்றல் அற்புதமானது. திருக்காளாத்தி மலையைத் தொழுதபின் சுந்தரர் அங்கு தங்கியிருக்கும் நாள்களில் சீபர்ப்பதத் தலத்தைப் பணிந்து வணங்கியது போல மகிழ்ந்து பாடியதே 'சீபர்ப்பதம்' என்ற பதிகமாகும். இதனை

*வடமாதிரத்துப் பருப்பதமும்*
*திருக்கேதார மலையும் முதல்*
*இடமா அரனார் தாம் உவந்த*
*எல்லாம் இங்கே இருந்து இறைஞ்சி*
*நடம் ஆடிய சேவடியாரை*
*நண்ணினார் போல் உள்நிறைந்து*
*திடம் ஆம் கருத்தில் திருப்பதிகம்*
*பாடிக் காதல் சிறந்திருந்தார்* (பெ.பு.: 3357)

என்ற பெரிய புராணப் பாடல் எடுத்தியம்புகின்றது.

திருநாவுக்கரசர் திருப்பருப்பதத்தை நேரில் சென்று வணங்கிய செய்தியைப் பெரிய புராணம் காட்டுகின்றது

*மானவிஞ்சையர் வானநாடர்கள்*
*வான்இயக்கர்கள் சித்தர்கள்*
*கான கின்னரர் பன்னகாதிபர்*
*காமசாரிகளே முதல்*
*ஞானமோனிகள் நாளும் நம்பரை*
*வந்து இறைஞ்சி நலம்பெறும்*
*தானம் ஆன திருச்சிலம்பை*
*வணங்கி வண்தமிழ் சாற்றினார்* (பெ.பு.: 1619)

சீபர்ப்பதம் என்ற தலம் தமிழ் வழக்குப்படி திருப்பருப்பதம் என அழைக்கப்படுகின்றது. இதனை திருச் சிலம்பை எனவும் அழைத்தனர். இந்தியாவில் தற்போது ஸ்ரீசைலம் என இத்தலத்தை அழைக்கின்றனர் (திரு - ஸ்ரீ , சைலம், பருப்பதம் என்பன மலையைக் குறிக்கும் சொற்களாகும்)

இயற்கை அழகு நிரம்பப் பெற்ற இத்தலத்தின் இறைவனைத் தரிசிக்க வருபவர்களின் பட்டியலை மேற்காட்டிய பெரிய புராணப் பாடல் எமக்குக் காட்டுகின்றது.

**சீபர்ப்பதம் - இன்று**

இந்தியாவில் ஆந்திர மாநிலத்தில் வடமேற்கில் உள்ள எழில் நிறைந்த தலம்தான் ஸ்ரீசைலம். சக்தி பீடங்களுள் 'மாதவி பீடம்' என்றும் சிவலிங்கங்களுள் 'ஜோதிர் லிங்கம்' அமைந்திருக்கும் தலமாகவும் இது விளங்குகின்றது. தமிழகத்தில் பன்னிரு தலங்களில் ஜோதிர் லிங்கம் இருப்பதாகக் கொள்ளப்படுகின்றது. இறைவன் திருநாமம் மல்லிகார்ஜுன சுவாமி. இறைவி பிரமராம்பிகா.

அருணன் என்னும் அசுரன் ஐந்து கால்கள் வரையுள்ள பிராணிகளால் தனக்கு ஆபத்து நேர்ந்துவிடக் கூடாது என இறைவனிடம் வரம் வாங்கியிருந்தான். இவனது கொடுமைகள் கண்டு பொறுக்க முடியாத இறைவி பிரமரம் என்ற வண்டாக உருவெடுத்து (வண்டு - ஆறுகால்கள் உடையது) அருணனைக் கொன்றாள். இதனால் இறைவி பிரமராம்பிகா என்ற பெயரைப் பெற்றாள். அசுரனைக் கொன்ற உக்கிர கோலத்துடனேயே இறைவி இத்தலத்தில் காட்சி கொடுக்கிறாள்.

ஜோதிர் லிங்கமும் சக்தி பீடமும் ஒன்றாகச் சங்கமித்த தலமாதலால் இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அடியவர்கள் இத்தலத்தை நாடி வழிபாடாற்றுகின்றனர். சிவராத்திரி விரதம் இத்தலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகவும் இந்நாளில் ஈசனுக்கும் பிரமராம்பிகாவுக்கும் திருமணம் நடாத்தப்படுவதாகவும் அறிய முடிகின்றது. இத்திருமணத்திற்கு ஸ்ரீ சைலம் மலைப் பகுதியில் வாழ் ஆதிக் குடிகள் சீதனம் கொண்டு வருவார்களாம். இன்றும் இந்நடைமுறை தொடர்ந்த வண்ணம் உள்ளது

**சீபர்ப்பதம் - அன்று**

பல்லவர் காலத்தில் (கி.பி. 7 ஆம் நூற்றாண்டில்) சீபர்ப்பதம் (ஸ்ரீசைலம்) தலத்தின் இயற்கை எழிலைச் சுந்தரர் தன் பதிகத்தின் ஊடாகப் பதிவு செய்கிறார். பத்துப் பாடல்களுள் ஒரு பாடலில் மட்டுமே அதாவது 8 ஆவது பாடலில் மட்டுமே இறைவனை நேரடியாக நினைக்கிறார். "*திரியும் புரம் நீறாக்கிய செல்வன்*" என அவரது நினைப்பு மேலிடுகின்றது. பத்தாவது பாடலில் பாடற் பயன் சொல்கின்றார். ஏனைய எட்டுப் பாடல்களும் இம்மலையில் இருக்கும் இறைவனை வணங்கச் சென்றால் அருமையான இயற்கைக் காட்சிகளைக் காணலாம் என்ற ஆசையையூட்டுவதாக அமைந்திருக்கின்றன.

**சீபர்ப்பதம் பதிகத்தின் ஊடாக வெளிப்படும் இயற்கைக் காட்சிகளும் மலையில் இடம்பெறும் செயற்பாடுகளும்**

மானும் மரையினமும் மயிலினமும் எங்கும் உலாவுகின்றன. தமக்குரிய உணவுகளைத் தேடியுண்டு பெரிய சுனைகளில் நீரைப் பருகி வாழ்கின்றன. மலையில் பெரிய மரங்கள் நெருக்கமாகச் செறிந்து காணப்படுகின்றன. அம்மரங்களூடாக இவ்விலங்குகள் புகுந்து செல்கின்றன. தேமாமரச் சோலை நிழலில் அவை உறங்குகின்றன.

மலைச் சாரலுக்கு அப்பாலிருந்து வரும் யானைகளைச் சீபர்ப்பத மலை வாழ் வேடர்கள் பிடித்துத் தங்கள் மலைக்குக் கொண்டு வந்து கட்டி வைத்து வலிந்து உணவூட்டுகின்றனர். இவ்வேளையில் இக்காட்சியைக் கண்ட பெண் யானைகள் தமது ஆண் யானைகளும் இவ்வாறு பிடிக்கப்படுமோ எனக் கலங்கி அவற்றை அழைத்தவாறு ஓடுகின்றன. என்ன நடந்தது என்பதை அறியாத அம்மலையில் உள்ள ஆண் யானைகள் தம் பெண் யானைகள் பிடிபட்டுவிட்டனவோ எனக் கலங்கிப் பிளிறுகின்றன. திகைத்துத் தம் பிடியைத் தேடுகின்றன.

இளமைச் சொற்களையுடைய இளம் பெண்கள் அங்குள்ள தினைப் புனத்தைக் காவல்

செய்கின்றனர். இளங்கிளிகள் வந்து தினைத் தாளைக் கோதிக் கதிர்களைக் கோலுகின்றன. அப்போது "என்னை மதிக்காது இக்கிளி வந்து தினைத்தாளைக் கோதி உண்கிறதே" எனக் கோபித்த குறமகள் சினந்து கவணை எடுத்துக் கல்லை வைத்து அடிக்கிறாள். அவ்வழகிய கிளி தன் எண்ணம் மாறிப் பறந்து செல்கின்றது.

தினைப் புனத்தைக் காக்கும் பெண்கள் "ஆய் ஓ.." எனச் சத்தமிட்டவாறு செயற்படுகின்றனர். அதற்கும் கிளிகள் பறப்பதாக இல்லை. கவணெடுத்து வீசுகின்றனர். சிவந்த வாயையுடைய கிளிகள் அஞ்சியோடி ஒளிக்கின்றன.

ஆண் யானைகள் கூட்டமாகத் தம் பெண் யானைகளைத் தேடுகின்றன. பெண் யானைகளும் தமது ஆண் யானைகளின் குரலோசையைக் கேட்பதற்காக செவியைத் தாழ்த்தி நிற்கின்றன. இக்காட்சியைக் கண்ட வேடர்கள் இரக்கம் கொண்டு இலையாற் கல்லை செய்து தேனை அப் பெண் யானைகளுக்கு இனிது ஊட்டி விடுகின்றனர்.

மாற்றுக் களிறடைந்தாய் என மதம் வேழம் தன் துதிக்கை எடுத்துச் சினக்கின்றது. "நீர் இவ்வாறு பழி தூற்றினால் நான் உயிர் தரிக்க மாட்டேன்" எனப் பெண் யானை தற்கொலைக்குத் துணிகின்றது. தன் தவறின்மையைத் தெளியச் செய்து ஆண் யானையைத் திருப்திப்படுத்துகின்றது.

கிளிகள் மீண்டும் மீண்டும் தினைப்புனத்தை நோக்கி வருகின்றன. "அப்போதும் வந்தணீர்கள். நான் இரங்கி அதட்டாதிருந்தேன். எப்போதும் உமக்கு இதுவே தொழிலாகி விட்டது" என்று குறமகள் கிளியை நோக்கி எறிகின்றாள்.

மலைச் சாரலில் பன்றிகள் நிலத்தைக் கிளறுகின்றன. நெருப்பை ஒத்த தோற்றமுடைய மாணிக்கக் கற்கள் அங்கு வெளிப்படுகின்றன. நெருப்பெனெப் பயந்த மான் மரை போன்ற விலங்குகள் அவ்விடத்தை விட்டு ஓடுகின்றன. பின்பு மலையிலுள்ள சோலைகளில் காணப்படும் தேனைக் குடித்துக் களிப்படைகின்றன.

இத்தகைய இயற்கை வர்ணனைகளை எடுத்துக் கூறிய சுந்தரர் இப்பாடல்களைப் பாடுபவர்கள் "ஒல்லை செல உயர் வானகம் ஆண்டங்கிருப்பாரே' என்றும் குறிப்பிடுகின்றார்.

### சீபர்ப்பதம் பதிகம் பல்லவர் கால இலக்கியப் பண்புகளுடன் பொருந்தும் விதம்

சுந்தரர் பாடிய சீபர்ப்பதம் என்ற பதிகம் பல்லவர் கால பக்தி இலக்கியப் பண்புகளுடன் பொருந்தியிருக்கின்றமையையும் நோக்கலாம்

- பக்தி அனுபவங்களைக் கூற இறைவன் வீற்றிருக்கும் தலமாகிய சீபர்ப்பதத்தைக் கூறுதல்
- இயற்கை வருணனை, மலைவளம் கூறுவதனூடாக இயற்கையில் இறைவனைக் காணுதல்
- வன ஜீவராசிகளதும் வனவாசிகளதும் வாழ்வியலைத் தமிழர் பண்பாட்டுச் சூழலினூடாக வெளிக் கொணரல் (உதாரணமாக விருந்தோம்பல்)
- புராணக் கதைகளைப் பயன்படுத்தல் (உதாரணம் : திரிபுர தகனம் பற்றிய எட்டாவது பாடல்)
- தாம் கண்ட தலச் சிறப்புக்களையும் வாழ்வியலையும் வாசகர் கண்டு இன்புறுமாறு பாடுதல்
- ஒரு விடயத்தைப் பத்துப் பாடல்களில் கூறுதல்
- பதிகத்தைப் படிப்போர் அடையும் பயனைக் கூறுதல்
- இறுதிப் பாடலை முத்திரைக் கவியாக அமைத்தல்

என்றவாறு அமைந்திருத்தல் பல்லவர் காலப் பக்தி இலக்கியப் பண்புகளுடன் இப்பதிகம் ஒத்திருப்பதைக் காட்டுகின்றது.

உ

# கந்தன் பிறந்தான்



- கு. சிவபாலராஜா அவர்கள் -

அசுரர்களின் கொடூரப் பிடிக்குள் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்தனர் தேவர்கள். இத் துன்பத்தை யாரிடம் சென்று உரைப்பது, எவ்வாறு இதற்குத் தீர்வு காண்பது என தினம் தினம் எண்ணிக் கதி கலங்கினார்கள் அத் தேவர்கள். தேவர் தலைமகனாம் இந்திரன் முதலானோர் இது பற்றி ஆலோசிக்கலானார்கள் இத் துயரத்தை முழு முதற் கடவுளாம் சிவபெருமானிடம் சென்று முறையிடுவதாக தேவர் தலைவன் உடன்பட யாவரும் முடிவுக்கு வந்தனர். அப்போது சிவபெருமான் மோன நிலையில் அமர்ந்திருக்கிறார். இதனால் தேவர்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலை உண்டானது. மோனத்திலிருக்கும் இறைவனிடம் நாம் நேரில் எவ்வாறு செல்வது, எவ்வாறு முறையிடுவது என ஆலோசிக்கலானார்கள். இதற்கு யாரை நியமிப்பது என்று தேவர்கள் ஆலோசனை நடத்தினர். இறுதியில் மன்மதனை சிவனிடம் அனுப்பி அவர்தம் மோனத்தைக் கலைப்போம் என்றனர் தேவர்கள். மோன நிலையிலிருக்கும் சிவனது மோனத்தைக் கலைத்த பின்னரே தமது இக்காரியம் பலிக்கும் என்பதை உணர்ந்தனர் தேவர்கள். மன்மதன் முதலில் சென்று சிவனாரின் மோனத்தை கலைக்க வேண்டும். இதற்கு அவன் மன்மத பாணங்களை அதாவது மலர்க்கணைகளை சிவன் மீது தொடுத்தால் அவர் மௌனம் கலைக் கப்படும். அதன் பின் தமது முறைப்பாட்டினை சிவனாருக்கு நாம் தெரிவிக்கலாம் என முடி வெடுத்தனர்.

தேவர்கள் மன்மதனை அழைத்தனர். தமது முடிவினை அவனுக்குத் தெரிவித்தனர். அதைக் கேட்ட மன்மதன் சற்றுத் தயக்கமடைந்தான். பரமபதியின் மோனத்தை சிறியேனாகிய நான் எவ்வாறு கலைப்பது? எனக்கு அச்சமாக இருக்கிறது. அவர் அதனால் சீற்றமடைந்து என்னைச் சபித்து விடுவரோ? என மன்மதன் அஞ்சினான். இதைக் கேட்ட திருமால், விஷ்ணு முதலாய தேவர்கள் மன்மதனுக்கு ஆறுதல் கூறி ஒருவாறு இவ்விடயத்தை மேற்கொள்ள மன்மதனைச் சம்மதிக்க வைத்தனர். மன்மதனும் சிவனிடம் செல்வதற்கு நாளும் குறித்தாயிற்று, மன்மதனும் தனது மலர்ப் பாணங்களை ஆயத்தப்படுத்தி, வில்லில் பூட்டி வேண்டிய காரியங்களை செய்தான். இதைக் கண்டு தேவர்கள் மிகுந்த ஆனந்தத்துடன் ஆரவாரப்பட்டனர்.

மன்மதனோ தயக்கத்துடன் மலர்க்கணைகளை கையிலேந்தியபடி சிவனாரின் வாயிலையடைந்தான். சிவனாரோ இன்னமும் தனது மோனத்தைக் கலைக்கவில்லை.

தேவர்களோ யாவரும் பெரும் பரபரப்புடன் மன்மதனை வைத்த கண் அகலாது பார்த்த வண்ணம் சற்றுத் தொலைவில் நின்றனர். அதாவது சிவனாரின் எதிரில் நிற்கப் பயந்த தேவர்கள் அவர் தவம் செய்யும் மாளிகையின் பின் கதவுப் பக்கமாக மறைவாக நின்று யாது நிகழுமோ என அச்சப்பட்டனர். இப்போது மன்மதன், அவர்கள் பார்வையிலிருந்து மறைந்து திரும்பி சிவனாரின் பார்வைபடத்தக்கதான தூரத்தில் நின்று கொண்டிருக்கிறான். சற்று நேரத்திற்குப் பின் அந்தப் பக்கமாக புகை எழுந்தது, தேவர்கள் மன்மதனுக்கு என்ன நேர்ந்தது என அறிய அவாப்பட்டனர். மன்மதன் மலர்ப் பாணங்களை சிவன்மேல் தொடுத்ததும், மோன நிலையிலிருந்த சிவபெருமான் சீற்றமடைந்து தனது நெற்றிக் கண்ணைத் திறந்து மன்மதன் மேல் தன் பார்வையை செலுத்தினார். உடனே மன்மதன் கணப்பொழுதில் எரிந்து சாம்பரானான். அதனாலே புகை மூட்டம் எழுந்து தேவர்களை கதி கலங்க வைத்தது. மன்மதன் எரிந்த செய்தி அவனை அனுப்பிவைத்த தேவர்களுக்கும், முழுத் தேவர் உலகத்திற்கும் பரவியது, இனி நாம் யாது செய்வதென்று தேவர்கள் ஏங்கினர் அவன் எரிந்தபடியால்த்தான் முன் வாயிற் பக்கமிருந்து புகை மூட்டம் வந்தமைக்கான காரணத்தைத் தேவர்கள் இப்போது உணர்ந்தனர். சிவனார் மன்மதனை எரித்தபின்பும் மீண்டும் தனது மோன நிலையில் ஆழ்ந்து போனார்.

தேவர்கள் ஓடிச் சென்று இக்காட்சிகளை நேரில் பார்த்து பெரிதும் பரபரப்படைந்தனர். சற்று நேரத்தில் இச் செய்தி மன்மதனின் மனைவியாகிய இரதிதேவியின் காதுகளுக்கு எட்டியது, இரதிதேவி அலறியடித்துக் கொண்டு சம்பவம் நடைபெற்ற இடத்தை அடைந்தாள். அங்கே திருமால், விஷ்ணு, இந்திரன் முதலானோர் பரபரப்போடும் யாது நிகழுமோ என்னும் ஏக்கத்தோடும் நின்றிருந்தனர். இரதியானவள் பெரும்துயரடைந்தவளாய் அழுத கண்களும் சிந்திய மூக்குமாய் தன் கணவனை சிவனிடம் அனுப்பிய தேவர்களை நோக்கி கோபாவேசத்தோடு ஓலமிடத் தொடங்கினாள்.

"நான்கு திசையும் முகங்களையுடைய உனது தந்தையாராகிய பிரம்மா மகனாகிய நீ யாருக்காக இவ்வேலையை ஒப்பேற்றச் சென்றீரோ தெரியவில்லை. உன் தந்தை சொல் கேட்டு விட்டீரோ? அல்லது தேவர்கள் எல்லோருடைய நன்மை கருதியோ? இந்திரனார் பணித்து விட்டாரே என்னும் காரணத்திற்காகவோ? எதற்காக மலர்க் கணை தொடுக்கவென வில் வளைத்தீரோ? யாதொன்றும் விளங்கவில்லையே, இறைவா, இதென்ன சோதனை நிகழ்ந்தது. யாரிடம் சென்றுரைப்பேன். சிவபிரானைச் சாதாரண மனிதர் என்று நீ கருதிவிட்டீரோ? இப்போது அவரது நெற்றிக் கண் பார்வையால் நீ சாம்பராகி விட்டீரே. இனி யான் யாரோடு வாழ்வேன். யார் துணை எனக்கு இச்சம்பவத்தை நேரில் பார்த்தும் பேசாது நின்ற தேவர்கள் உய்யமாட்டார்கள். அன்றியும் ஏனையாராவது இதைக் கண்டு யாதொரு நடவடிக்கையும் எடுக்காது நின்றார்களாயின் அவர்களும் உய்தி பெற மாட்டார்கள் என நெருப்பில் இட்ட சருகு போல் இரதி கருகியமை யாவருக்கும் பெரும் சோகத்தையூட்டியது.

சிவனாரின் மோனம் கலையும் வரை தாம் யாதொரு காரியமும் செய்தால் அது வினையில் வந்து முடியுமெனக் கருதிய தேவர்கள் யாவரும் வாளாவிருந்தனர். இரதிதேவியின்

பழைய விருந்தாளியாக எவன் ஒருவன் ஒருவரது இல்லத்திற்குச் செல்கிறானோ அவன் மூடன்

புலம்பலைத் தமது ஞானக்கண்களால் தரிசித்த சிவன், தனது மோனத்தைக் கலைத்தார். இது கண்ட இரதியும் தேவர்களும் மகிழ்ச்சியால் ஆரவாரித்தனர். இரதிக்கு ஆறுதல் வழங்கினார் சிவனார். இந்திரன் முதலிய தேவர்களை அழைத்து அவர்தம் பிரச்சினை யாதென வினவினார். பின்னர் சூரபத்மனால் தேவர்களுக்கு ஏற்படும் துன்பங்களைத் தீர்ப்பதற்காக ஓர் குமாரனைத் தந்து அருள்வதாகவும் சிவனார் வாக்களித்தார். அவ்வாறே உதயகுமாரனாம் முருகப் பெருமானை உற்பத்தி செய்து அருளினார் சிவனார். முருகன் வாலிபப் பருவமடைந்து சூரனோடு போர் செய்து அவனைப் பிளந்து, சேவலும் மயிலுமாக்கி அவற்றை தனது வாகனமாக்கினார். தேவர்கள் முருகப் பெருமானைத் துதித்தனர். இது வரை காலமும் சூரனாற் பட்ட வேதனைகளிலிருந்து தேவர்கள் காப்பாற்றப்பட்டனர். சில காலத்தின் பின் முன்பு எரியூட்டப்பட்ட மன்மதனையும் இரதியின் கண்களுக்கு மட்டுமே தோன்றும் படி மீண்டும் உயிர் பெற்று எழச் செய்தார் இறையானார்.

**முருகா சரணம்! அவனடி சரணம்!!**


---

# விசேட நிகழ்வு

தவத்திரு முருகேசு சுவாமி அவர்களின்
நினைவாக வருடா வருடம்
மேற்கொள்ளப்பட்டு வரும்
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த
கும்பாபிஷேக தினம் 19-03.2010
(பங்குனி 05) வெள்ளிக்கிழமை சுவாமி
அவர்களின் அன்பர்களால் வழமை
போல நடாத்தப்படவுள்ளது.

---

தவத்திரு வே. முருகேசு சுவாமி அவர்களின் 13ஆம் ஆண்டு
குருபூசை 24.03.2010 (பங்குனி10) புதன்கிழமை அன்று
ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும்
விசேட அபிஷேக பூசை வழிபாடுகளோடு ஆரம்பமாகி
சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்
விசேட நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து
63 வர் குருபூசையும் இடம்பெறும் என்பதை
அடியவர்கள் அன்பர்கள் அனைவருக்கும்
அறியத்தருகிறோம்.



உ

# பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்

- திருமதி சி. ஜனகா அவர்கள் -

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவன் கூற்றிற்கிணங்க புகழ் பூத்த பல மகான்களின் சரிதங்களை இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ளாதவர்களாகவே காணப்படுகின்றனர். எத்தனையோ பெரிய மகான்கள் இலக்கியங்களில் மட்டும் வாசம் செய்பவர்களாகக் காணப்படுகின்றனர். இன்றைய மக்களிடத்தில் வாசித்தலும் அதற்கான தேடலும் அருகிக் காணப்படுகின்றமையே இதற்குக் காரணமாகும். இன்று பலரால் அறியப்படாத மகானாகவும் அவசியமாக அறிந்து கொள்ளப்பட வேண்டியவராகவும் "குமர குருதாச சுவாமிகள்" காணப்படுகின்றார்.

இவர் தமிழ்நாட்டிலே மேன்மைபெற்று விளங்கும் சிவபூமியாகிய இராமேஸ்வரத்தில் உள்ள பாம்பன் என்னும் ஊரில் சாத்தப்பிள்ளைக்கும் செங்கமலத்தம்மாளுக்கும் "அப்பாவு" எனும் இயற்பெயருடன் அவதரித்தார். பாம்பன் எனும் ஊரிற் பிறந்தமையால் பிற்காலத்தில் "பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்" அல்லது "பாம்பன் சுவாமிகள்" என அழைக்கப்பட்டார்.

இவர் சிறுபராயத்தில் இருந்தே முருகன் மீது சிறந்த பக்தி கொண்டவர். சிறு வயதில் விதைக்கப்படுகின்ற நல்ல சிந்தனைகள், செயல்கள் நம் எதிர்காலத்தினை வளம்படுத்திவிடும் என்ற எண்ணம் எம்மிடையே காணப்படுகின்றது. எமது மொழியில் உள்ள "வளரும் பிள்ளையை மண்விளையாட்டில் தெரியும்" என்ற பழமொழி இப்பண்பையே உணர்த்தி நிற்கிறது. சிறுபராயத்திலே சுவாமிகள் ஒவ்வொருநாளும் 36 தடவை கந்தசஷ்டி கவசத்தினைப் பாடும் வழக்கமுடையவர். சிறு வயது முதல் சிறந்த பக்தியுடைய இவர் முருகனிடம் உன்னை பல பாக்களால் பாடி மகிழ அருள் செய்ய வேண்டும் என்று வேண்டினார். அதாவது

"எனது ஆண்டானாகிய குமார பகவானே!
பாடியே அறியாதயான் நின்னையே பலபாக்களாலும்
பாடக்கடவேன்
அருணகிரிநாதர் பெயர் வைத்தே பிரபந்தம் முடிக்கக்
கடவேன்"

இவ்வாறு இறைவனாகிய எம்பெருமான் முருகனிடம் வேண்டியபின் நாள்தோறும் ஒருபாடல்பாடி, எழுதிய பின்பே உணவை உண்பதனை விரதமாகக் கொண்டிருந்தார்.

பாம்பன் சுவாமிகளின் பக்தியைக் கண்டுமெச்சிய அவ்வூரைச் சேர்ந்த சேதுமாதவ ஐயர் சுவாமிகளுக்கு ஆறெழுத்து மந்திரத்தைக் கூறி குரு உபதேசம் செய்தருளினார்.

இதனைத் தொடர்ந்து முருகப்பெருமான் ஆன்மீகப் பெரியார் வடிவில் வந்து சுவாமிகளுக்குப் பாற்சோறு ஊட்டிவிட்டார். இந்நிகழ்வின்பின் சுவாமிகள் தமிழ், வடமொழி ஆகிய இரு மொழி களிலும் விற்பன்னராய்த் திகழ்ந்தார்.

இந்நிகழ்வு மட்டுமன்றி முருகப்பெருமான் சுவாமிகளின் வாழ்வில் பலமுறை பலவகையான வேடம்தாங்கிவந்து அருள் செய்தமையினைக் காணக்கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக இங்கு சில சம்பவங்களை நோக்கலாம்.

ஒருநாள் மிகுந்த வெப்பம் நிறைந்த சுடுமணலில் சுவாமிகள் நடந்து சென்று கொண்டிருந்தவேளை சுவாமிகளின் காலில் முள் தைத்துவிட்டது. அதனால் சுவாமிகள் மிகுந்த வேதனையுடன் காணப்பட்டார். அன்றிரவு முருகன் சுவாமிகள் இருப்பிடத்திற்கு அருகில் வசித்துவரும் தச்சனின் கனவில் தோன்றி சுவாமிகளின் வடிவத்தையும் காட்டி பாதணி செய்து கொடுக்கும்படி கட்டளையிட்டு மறைந்தார். அந்தத் தச்சரும் முருகனின் கட்டளையை நிறைவேற்றி மகிழ்ந்தார்.

சுவாமிகள் தன்னுடைய 41ஆவது வயதில் இராமேஸ்வரத்திற்கு அருகில் உள்ள "பிரப்பன்வலசை" எனும் மயானத்தில் சதுரக்குழி ஒன்று வெட்டி தவம் செய்து கொண்டி ருந்தார். தவத்தின்போது "குமரகுரு குமரகுரு" என உச்சரித்த வண்ணம் முருகனை வேண் டிக் கொண்டிருந்தார் 7ஆம் நாள் தவம் செய்து கொண்டிருந்த வேளை முருகப் பெருமானுடன் அகத்தியரும், அருணகிரிநாதரும் உடன்நிற்க முருகன் சுவாமிகளுக்குக் காட்சி கொடுத்து, உபதேசம் செய்தருளினார். சுவாமிகளுக்கு முருகப் பெருமான் செய்த உபதேசம் "தகராலய ரகசியம்" எனும் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது.

இதுமட்டுமன்றி சுவாமிகள் முருகதலங்களை வணங்கிவிட்டு வந்து கொண்டிருந்த வேளை முருகப் பெருமான் இளைஞன் வடிவில் வந்து காஞ்சி குமாரகோட்டத்தினையும் காண்பித்து வழிபட அருள் செய்தார். இதன்பின் சுவாமிகள் முருகனின் திருத்தலங்களின் பெயர்களை அகரவரிசைப்படுத்தி முருகனின் பெருமைகளையும் ஆலயங்களின் சிறப்புக்களை யும் இணைத்து சண்முக கவசம் எனும் நூலைப்பாடினார்.

இவ்வாறாக முருகனின் தலங்களைத் தரிசித்து வரும் காலத்தில் 1923ஆம் ஆண்டு சென்னையில் குதிரை வண்டி ஒன்று சுவாமிகளுடன் மோதியதில் இவருடைய கால் முறிந்து விட்டது. இதனால் மருத்துவமனையில் நோயுற்றிருந்த சுவாமிகளிடம் முருகப்பெருமான் சிறுவன் வடிவில் வந்து நோயைக் குணமாக்கினார்.

இவ்வாறாக பல சந்தர்ப்பங்களில் முருகப்பெருமான் சுவாமிகளுக்கு நேரடியாகக் காட்சி கொடுத்து அருள்செய்ததில் இருந்து சுவாமிகளின் பக்திச் சிறப்பினையும், முருகன் அன்புடையவர்களிடத்தில் ஆதரவாக இருப்பான் என்பதனையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

சுவாமிகள் இம் மண்ணுலகில் வாழ்ந்த காலத்தில் 6666பாடல்களை முருகப் பெருமான் மீது பாடியுள்ளார். இவ்வாறாக முருகனிடம் சிறந்த பக்தியுடைய பாம்பன் சுவாமிகள் 30.05.1929 அன்று சமாதியடைந்தார். இவருடைய சமாதியானது புதிய நகர அமைப்பில் கட்டப்பட்டுள்ளதோடு, அவர் வாழ்ந்த நகர் இன்றும் "பாம்பன் சுவாமி நகர்" என்று அழைக்கப்படுகின்றது.

பாம்பன் சுவாமிகள் போன்ற இறைநம்பிக்கை உடைய நம்முன்னோர்கள் வாழ்ந்து காட்டிய வழியில் நாமும் வாழ்ந்து நாமும், நம்மைச் சூழ உள்ளவர்களும் மகிழ்வாக வாழ்வோமாக.



# திருவிளையாடல்

## மாறியாடின படலம்

**- ஆறுமுகநாவலர் -**

**படலம் - 24**

விக்கிரம பாண்டியன் தன் புத்திரனாகிய இராசசேகர பாண்டியனுக்கு முடிசூட்டிவிட்டுத் தான் சிவலோகத்தையடைந்தான். மகன் இராசசேகர பாண்டியன் அறுபத்திநான்கு கலைகளுள், பரதக்கலை ஒன்றைத் தவிர்த்து, ஏனைய அறுபத்திமூன்று கலைகளையும் கற்றுத்தேறி இனிதே அரசாட்சி செய்து வந்தான். இறைவன் ஆனந்த வடிவமாக வெள்ளியம்பலத்தே நின்றாடும் திருநடனத்தில் வைத்த அன்பு மிகுதியினாலே அந்த ஒரு கலையை மட்டுமே அவன் பயில விரும்பவில்லை.

அந்நாளிலே சோழநாட்டிலே, கரிகாற் சோழனென்பவன் அறுபத்திநான்கு கலைகளும் பயின்று திருவானைக்காவில் எழுந்தருளியிருக்கின்ற சிவபெருமானிடத்து அன்பு பூண்டவனாய் அரசு செய்வானாயினான். அச்சோழனது அரசவையிலுள்ள ஒரு புலவன் வந்து, இராசசேகர பாண்டியனைக் கண்டு, "மகாராசாவே! எம்முடைய கரிகாற்சோழனுக்கு அறுபத்து நான்கு கலைகளும் வரும். உனக்கு அவைகளுள் ஒன்று வராது. அது பரதம்" என்றான். இந்த வார்த்தை மன்னனை மிக்க வேதனைப்படுத்தியது. "இதுவும் எம் பெருமான் திருவருளே" என்று எண்ணி, வல்ல புலவர்களை வரவழைத்து பரத நூலைக்கற்று, அவ்வழியே பரதமும் முறைப்படி பயின்றான்.

பாண்டியன் நடனக் கலையைப் பயின்ற பொழுது தனது உடம்பிலே ஏற்பட்ட நோவினை உணர்ந்து, "இந்த வருத்தம் வெள்ளியம்பலத்தாடும் சிவனுக்கும் உள்ளதே. பிரம்மா விட்டுணுக்களாலும் காணமுடியாத திருவடிகளுள் ஒன்றே நோவும் வண்ணம் நெடுங்காலம் நிற்கின்றதே! இதனால் ஏற்படும் வருத்தத்தைப் பார்த்துக்கொண்டிருப்பதா?" என்று சிந்தித்து வருந்தினான். சிவராத்திரி நாளில் திருக்கோயிலை அடைந்து, சிவனுக்கு நான்கு சாமமும் பூசை செய்வித்து வணங்கி விண்ணப்பித்தான். "ஆண்டவனே! நின்ற திருவடியை எடுத்து வீசி, எடுத்த திருவடியைக் கீழேயூன்றி இன்றைக்கு அடியேன் காணும்படி மாறியாடித் தமியேனின் வருத்தத்தைத் தீர்த்தருளும்" என்று வேண்டியதுடன் அங்ஙனம் இல்லையாயின் சிவபெருமான் எதிரே தன் உடைவாளை நாட்டி அதன் மேல் குப்புற விழுந்து உயிரைப் போக்குவேன் என்றும் துணிந்தான்.

அவனது வேண்டுதலுக்கு இரங்கிய கருணைக் கடலான சிவபெருமான் தமது இடப்பாதத்தை ஊன்றி, வலப்பாதத்தை எடுத்து வீசி மாறியாடிக் காண்பித்தார். பாண்டியன் மனக்கவலை தீர்ந்து பரமானந்தக் கடலில் மூழ்கினான். தன் மனம் வாக்குக் காயம் அனைத்தும் இறைவனுடையதே எனத் தெளிந்து அன்பே வடிவாகி நின்றான்.

## பழியஞ்சின படலம்

படலம் - 25

சிலகாலஞ் சென்றபின்பு இராசசேகர பாண்டியன் தன் புத்திரன் குலோத்துங்க பாண்டியனுக்குத் தன்னரசைக் கொடுத்துவிட்டுத் தான் வெள்ளியம்பலத்தே திருநடனம் செய்யும் எம்பெருமான் திருவடி நிழலிற் கலந்து பேரின்பமுற்றான்.

குலோத்துங்கபாண்டியன் சோமசுந்தரக் கடவுளை தினமும் அன்போடு வழிபடும் நியமம் பூண்டான். அவனுக்குப் பல மனைவியரும், மனைவியர்க்குப் பல குழந்தைகளும் பிறந்தார்கள். அவர்களுள்ளே "அனந்தகுணன்" என்பவன் மூத்தவன். அந்நாளிலே திருப்புத்தூரினின்றும் ஒரு பிராமணன் தன் மனைவியுடனும் குழந்தையுடனும் தன் மாமனார் வீட்டுக்குச் செல்ல எண்ணி மதுரை நோக்கி வந்தான். தண்ணீர்த் தாகத்தினால் வருந்திய மனைவியை ஓர் ஆல மர நிழலில் இருத்திவிட்டு தண்ணீர எடுக்கச் சென்றான். ஆலமரத்தின் மேலே முன்னாளில் எய்யப்பட்டுக் குத்திக் கொண்டிருந்த ஓர் அம்பானது காற்றின் விசையினால் விழுந்து பிராமணன் மனைவியின் வயிற்றில் தைத்து அவள் இறந்து போனாள். அதேநேரம் கையில் வில் அம்பு கொண்டிருந்த ஒரு வேடன் களைப்பாற ஆலமரத்தின் மறுபுறம் ஒதுங்கி நின்றான். தண்ணீர கொண்டு திரும்பி வந்து பார்த்த பிராமணன் குருதி வெள்ளத்தில் மனைவி இறந்து கிடக்கக் கண்டான். பெருந்துயருற்ற நிலையில் "இவளைக் கொன்றது யார்?" எனத் தேடியபோது ஆலமரத்தின் மறுபுறத்தில் நின்ற வேடனைக் கண்டுவிட்டான். "நீதான் என் மனைவியைக் கொன்றுவிட்டாய்" என்று பாண்டியன் மேல் ஆணையிட்டு அவனையும் அழைத்துக்கொண்டு, மனைவியைத் தூக்கித் தோள்மீது போட்டு குழந்தையையும் தூக்கிக் கொண்டு சீக்கிரமாக நடந்து மதுரையை அடைந்தான். அரண்மனை வாசலில் பிரேதத்தைக் கீழே போட்டு, "மன்னவனே! இந்த அநியாயம் உன் ஆட்சியில் நடந்திருக்கிறது பார்" என்று சத்தமிட்டான். வாயிற் காவலர்கள் பாண்டியனிடம் போய் நடந்ததைக் கூறினர். வெளியே வந்த மன்னன் அனைத்தையும் தீர விசாரித்தான். "வேடனோ தான் அவளைக் கொல்லவில்லை என்றும் யான் ஒன்றும் அறியேன்" என்றும் கூறினான். அரச சேவகர்களும் பல வழிகளிலும் முயற்சிசெய்தும்கூட வேடன் அதையே திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தான். அரச ஊழியர் அவனைச் சிறையிட்டனர். அரசன் பிராமணனிடம், மனைவியின் மயான கடமைகளைச் செய்துவருமாறும், தான் சரியாக ஆராய்ந்து தீர்ப்பளிப்போம்" என்று கூறி அனுப்பிவைத்தான்.

மயான கடமைகளை முடித்து வந்த பிராமணனை கோயில் வாசலில் இருத்திவிட்டு, தான் உள்ளே போய் சோமசுந்தரக் கடவுளை வணங்கி, "எம்பெருமானே! பிராமணன் மனைவி இறந்தது யாரால் என்பதைக் கண்டறிய முடியவில்லை. உமது திருவருளினாலே இதன் உண்மையை உணர்த்தியருள வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அப்பொழுது ஆகாயத்தினின்றும், "பாண்டியனே! இந்த நகரின் புறத்தே உள்ள செட்டித் தெருவில் ஒரு வீட்டிலே இன்றிரவு திருமணம் நடக்கும். பிராமணனையும் அழைத்துக்கொண்டு அங்கே வா. இதனுண்மையை அங்கு உனக்கு அறிவிப்பேன்" என்று ஓர் அசரீரி வாக்குத் தோன்றியது. இதனைக் கேட்ட பாண்டியன் மாறுவேடம் பூண்டு, பிராமணனுடன் அக்கல்யாண வீட்டுக்குப் போய் ஒரு பக்கத்திலிருந்தான். இயமனால் அனுப்பப்பட்ட இரண்டு தூதுவர்களும்

அங்கிருந்தனர். அவர்களுள்ளே நடந்த சம்பாசனை இது:

"இன்றைக்கே மணமகன் உயிரைக் கொண்டு வரும்படி இயமன் கூறுகிறாரே! ஒரு வியாதியும் இவன் உடம்பில் இல்லையே! ஏதாவது ஒரு காரணமின்றி இவன் உயிரைக் கொள்வதெப்படி" என்றான் ஒருவன்.

"ஆலமரத்திலே எப்போதோ ஏறியிருந்த அம்பினை வீழச் செய்து, இன்று பகலிலே பிராமணன் மனைவியின் உயிரைக் கவர்ந்தோமே! அதேபோல பசுவொன்றை முட்டச் செய்து மணமகன் உயிரைக் கவர்வோம்" என்றான் மற்றவன்.

பாண்டியன் பிராமணனைப் பார்த்து "இந்த வார்த்தையைக் கேட்டாயா" என்றான். அதற்குப் பிராமணன், "மணமகன் இப்படி இறந்தால் என் மனைவியும் அப்படியே இறந்தாள்" என ஏற்றுக்கொள்வதாகக் கூறினான். திருமண இடத்தில் வாத்தியங்கள் பலமாக முழங்கிய அந்த ஓசையினாலே ஒரு பசு வெருண்டு கட்டை அறுத்துக் கொண்டு அங்குமிங்கும் ஓடி இறுதியில் மணமகனை முட்ட அவன் இறந்தான். மணவீடு பிணவீடாகியது.

இதுகண்ட பிராமணன் "என்ன காரியம் செய்தேன்" என மனம் மிக நொந்து தன்னை மன்னிக்கும்படி மன்னனை வேண்டினான். மன்னன் பிராமணனுக்கு ஆறுதல் கூறி வேண்டும் பொருள் கொடுத்து அவனை அனுப்பி வைத்தான். வேடனைச் சிறையிலிருந்து விடுவித்து அவனுக்கும் வேண்டுவன கொடுத்து, "நாம் அறியாமையினாலே செய்த தவறினைப் பொறுத்துக் கொள்ளக்கேட்டு" வழியனுப்பி வைத்தான். பின்னர் சோமசுந்தரக் கடவுள் திருக்கோயிலை அடைந்து வணங்கி, "எம்பெருமானே! பாவியேன் பொருட்டு "பழியஞ்சு நாதராயிருந்தீர்" எனச் சொல்லித் துதித்து வணங்கி உலகிற்கு உயிராயிருந்து அரசியற்றினான்.

(தொடரும்...

---

## சித்திரை மற்றும் வைகாசி மாத

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய

## விசேட உற்சவ தினங்கள்

| | | |
|---|---|---|
| 14. 04. 2010 சித்திரை 01 புதன் | – | தமிழ் இந்துப் புத்தாண்டு (விகிர்தி) மாலை விசேட உற்சவம் |
| 17. 04. 2010 சித்திரை 4 சனி | – | கார்த்திகை விசேட உற்சவம் |
| 21. 04. 2010 சித்திரை 15 புதன் | – | சித்திரா பூரணை விரதம் |
| 14. 05. 2010 சித்திரை 31 வெள்ளி | – | கார்த்திகை தின விசேட உற்சவம் |
| 26. 05. 2010 வைகாசி 12 புதன் | – | வைகாசி விசாகம், விசேட உற்சவம் |

## தென்மராட்சிக்குப் பெருமை சேர்த்த

# கந்தரநுபூதிப் பெருவிழா

- செல்வன் தி.மயூரகிரி அவர்கள் -

மீசாலை சித்திரவேலாயுதர் திருக்கோவில். அழகுக் கந்தன் கொலுவீற்றிருக்கும் அற்புத ஆலயம். கந்தரநுபூதி, கந்தபுராணம் முதலிய முருகன் பாமாலைகளால் மணம் வீசும் பெருங்கோவில். 1995 ஆம் ஆண்டு தொடக்கம் நித்தமும் பக்க வாத்தியங்களுடன் கந்தரநுபூதிப் பஜனை செய்யும் முருகதாசர்கள் இவ்வாலயச் சூழலில் நிறைந்து வாழ்கின்றனர்.

கடந்த ஆண்டில் கந்தரநுபூதி விழா எடுத்து மகிழ்வு கண்ட இவர்கள் இவ்வாண்டிலும் 20.02.2010 இல் பெருவிழா எடுத்துப் பொலிவு கண்டனர். சித்திரவேலாயுதர் இந்து மன்றத்தின் சார்பில் செ.மகேஸ்வரன் தலைமையில் இவ்விழா இனிதே கைகூடியது.

கோவிலில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து கந்தரநுபூதிப் பஜனை ஒலிக்க அடியவர் தோள்களில் அருணகிரியார் வீதியுலா வந்தார். மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூதத் தட்டும் சல்லாரி இசை முழங்க "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்ற விண்ணப்பத்துடன் ஆலயத்தின் அருகில் இருந்த திருப்புகழ் மண்டபத்திற்கு அருணகிரியார் எழுந்தருளினார்.

சரியாகக் காலை 9 மணிக்கு அரங்க நிகழ்வுகள் ஆரம்பமாகின. மங்கல விளக் கேற்றல், இந்து இளைஞர் மன்றத் தலைவர் செல்வி ச.இந்துஜாவின் வரவேற்புரை, சித் தாந்த பண்டிதர் சிவஸ்ரீ கு.ஜெகதீஸ்வரக் குருக்களின் ஆசியுரை முதலியவற்றைத் தொடர்ந்து தலைமையுரை இடம்பெற்றது.

கந்தரநுபூதியை நித்தமும் பாராயணம் செய்வதனால் ஆலய அடியவர்கள் பெற்ற உயர்வுகளைக் குறிப்பிட்ட தலைவர் சபையில் வந்திருக்கின்றவர்களையும் நித்திய கந்தர் அநுபூதிப் பாராயணம் மேற்கொள்ளுமாறு ஆற்றுப்படுத்தினார்.

நிகழ்வில் சிறப்பம்சமாக யாழ். பல்கலைக்கழக முன்னாள் போதனாசிரியர் 'திருமுறைச் செல்வர்' ச.விநாயகமூர்த்தி தலைமையில் தெய்வீக உரையரங்கு இடம்பெற்றது. "நானோ இதற்கு நாயகமே" என்ற பீடிகையுடன் தொடங்கிய திருமுறைச் செல்வர் "விஞ்ஞான நோக்கில் சமய உண்மைகளை ஆராயக் கூடாது. விஞ்ஞானம் என்பது வேறு. மெய்ஞ்ஞானம் என்பது வேறு. விஞ்ஞான உண்மைகள் காலத்திற்குக் காலம் மாறுபடக் கூடியன. ஆனால் சமய உண்மைகள் என்றும் நித்தியமானவை" என்றார்.

"கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன எந்தை அருணகிரியாரை இங்கு எழுந்

தருளச் செய்து இவ்விழா எடுக்கப்படுகின்றது. மொழியால் இறைவனை அர்ச்சித்த அருளாளர்கள் பலர் உளர். எங்கள் மொழியும் சமயமும் ஒன்றுடனொன்று கலந்தவையாக வுள்ளன.

*சிறைவான் புனற்றில்லைச் சிற்றம்*

*பலத்துமென் சிந்தையுள்ளும்*

*உறைவான் உயர்மதிற் கூடலின்*

*ஆய்ந்த ஒண்தீந் தமிழின்*

*துறைவாய் நுழைந்தனையோ?"*

என்ற மணிவாசகர் வாக்கு ஈண்டு சிந்திக்கற்பாலது."

"அருணகிரியார் செஞ்சொற்புனைமாலையாக, ஐம்பத்தொரு பாடல்களைக் கொண்டு கந்தரநுபூதியைத் தொடுத்தார். இது மந்திர மாலையாக அமைந்திருக்கின்றது" எனக் கூறி அநுபூதியின் பெருமைகளை வாரி வழங்கினார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. ச.லலீசன் 'நெஞ்சக் கனகல்' என்ற தலைப்பிலும் துறைசை ஆதீனச் சைவசமயப் பிரசாரகர், யூனியன் கல்லூரி ஆசிரியர் திரு. ஏ.அனுசாந்தன் "பேசா அநுபூதி' என்ற தலைப்பிலும் சரவணை நாகேஸ்வரி வித்தி யாலய ஆசிரியர் திரு.கு.பாலசண்முகன் 'பாடும் பணி' என்ற தலைப்பிலும் கேட்டார்ப்பிணிக் கும் வகையில் கருத்துரைகளை வழங்கினர். சைவ உலகின் நம்பிக்கை நட்சத்திரங்களாக விளங்கும் இவ் இளம் பேச்சாளர்களது உரைகள் சபையோரால் விதந்து பாராட்டப்பட்டன.


சங்கத் தமிழ் நூலாக விளங்கும் திருமுருகாற்றுப்படை, நிகழ்வில் பங்கேற்றிருந்த யாவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. இந்நூலின் அறிமுகவுரையை டிறிபேக் கல்லூரி ஆசிரியர் திரு.ச.மார்க்கண்டு வழங்கினார்.

கந்தரநுபூதி தொடர்பாக யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் வெற்றி பெற்றோருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. கு.பிறேமகாந்தன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ.கைலாயபிள்ளை, கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு.கு.சிவானந்தம் ஆகியோர் பரிசில்களை வழங்கினர். நிகழ்வுக்கு அனுசரணை வழங்கிய ஓய்வு பெற்ற வங்கியாளர் திரு செ.மனோகரன் தம்பதியினரும் கௌரவிக்கப்பட்டனர்.

நீண்ட நாட்களின் பின் மனம்நிறைந்த விழாவொன்றைப் பார்த்த அனுபவம் ஏற்பட்ட தாகப் பலரும் தெரிவித்தனர். திருப்புகழ் மண்டபம் முழுவதும் பௌராணிகர்கள் மற்றும் அநுபூதி அன்பர்களால் நிகழ்வு நிறைவு நேரம் வரை நிறைந்திருந்தமையே இதற்குச் சான்றாகும். நிகழ்வு ஏற்பாட்டாளருக்கும் பங்கு கொண்டோருக்கும் ஒரு சபாஷ் போடலாம்.

# படங்கள் தரும் பதிவுகள்

## வாராந்த நிகழ்வின் வரிசையில் கௌரவிக்கப்பட்டோர் (31.01.2010)




கு. தியாகராஜ சர்மா (நீர்வை மணி ஐயர்) அவர்கட்கு ஆச்சிரமத்தின் சுவாமி அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கும் நிகழ்வு




சிவத்திரு வ, குமாரசாமி ஐயர் அவர்கட்கு யாழ். மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் சி. பத்மநாதன் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் காட்சி

பஞ்சாந் நிலைகளுக்கும் பதில் சொல்வது பண ஆசை



செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அவர்கட்கு செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு



வல்வை. சிவகுரு வித்தியாசலை அதிபர் ஆ. சிவநாதன் அவர்கட்கு திரு. ஆறு திருமுருகன் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வு




நல்லை ஆதீன ஓதுவாராக விளங்கிக் கொண்டிருக்கும் பண்ணிசைப் புலவர் சி. தில்லைமணி அவர்கட்கு இளைப்பாறிய ஆசிரியர் ஐ. சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகம்) அவர்கள்நினைவுக் கேடயம் வழங்கும் காட்சி



கவிமணி க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கட்கு வட்டுக்கோட்டை சச்சியா இரும்பக உரிமையாளர் சி. சச்சிதானந்தம் அவர்கள் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வு



மறவனாரைச் சேர்ந்த பிரபல தவில் வித்துவான் T.M. வாசகர் அவர்கட்கு உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்க இளைப்பாறிய ஊழியர் நீ. சுப்பிரமணியம் நினைவுக் கேடயம் வழங்கும் நிகழ்வில் பேரவை உறுப்பினர் கு. அருணகிரிநாதன் அவர்களும் காணப்படும் காட்சி.



இளைப்பாறிய அதிபர் திருமதி தவமலர் சுரேந்திரநாதன் அவர்களைப் பாராட்டி புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியை திருமதி கௌரி சுரேசன் அவர்கள் கௌரவிக்கும் நிகழ்வு.

# மனிதப்பிறவியின் மாண்பு

- செல்வி அ. கந்தையா அவர்கள் -

இந்த மனிதப்பிறவி எமக்கு வாய்த்தது நாம் செய்த புண்ணிய பயனே ஆகும்.

*"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி*
*பல்விருகமாகி பறவையாய் பாம்பாகி*
*கல்லாய் மனிதராய்.....................* எத்தனை பிறவிக்குப் பின் இந்த மனிதப்பிறவி வாய்க்கப்பெற்றுள்ளது. புண்ணிய - பாவம், சுக - துக்கம், நன்மை - தீமை, இம்மை - மறுமை இவைகளைப் பகுத்தறியும் அறிவு மனிதர்களிடத்து இருப்பதால், இ∴தில்லா அ∴றிணைப் பொருட்களைவிட மனிதப்பிறவி மாண்புடையதாகக் கருதப்படுகின்றது. இந்த மனிதச் சரீரத்துக்கு 'மெய்' என்றும் ஒரு பெயர் உண்டு. உண்மையிலேயே பொய் யாகிய இந்த உடலுக்கு மெய் என்று பெயர் சொல்லக் காரணம் இம் மனிதப்பிறவியிலேயே மெய்யான விடயங்களைச் செய்துகொள்ள வேண்டும் என்று அறிவுறுத்த எனலாம். பிறப்புண்டேல் இறப்புண்டாம். எனவே இவ்வுடல் பொய்யாகுமுன் 'வையத்துள் வாழ்வாங்கு வாழ' எல்லோரும் முயல வேண்டும்.

"இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறுதற்பொருட்டே" என்று ஆறுமுகநாவலர் கூறியிருப்பதும்

'என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை
நன்றாக தமிழ் செய்யுமாறே' என்ற திருமூலர் வரிகளும் மனிதப்பிறவியின் பயன் என்ன என்பதைக்காட்டுகின்றன. இந்தச் சரீரத்துக்கு ஒரு முக்கிய முதன்மையான நோக்கு இறைவழிபாடு. அதனை மையமாக வைத்து மனிதனின் முழுமையையும் நாம் பார்க்கமுடியும்.

ஞானியர்கள், சமயகுரவர்கள் போன்ற அனுபூதிமான்கள் சாதாரணமக்களாகிய எம்பொருட்டு அருளிச்சென்ற தோத்திரங்கள் எமக்கு வழிகாட்டிகளாகின்றன. இந்த உடலை எடுத்ததன் பயன் என்ன? என்ற கேள்விக்குப் பதிலாக அமைவது அப்பர் சுவாமிகளின் திருவங்கமாலை எனும் பதிகம். உடல் உறுப்புக்களின் செயற்பாட்டை தலையில் தொடங்கி பாதம் வரை வரிசையாக நிரற்படுத்தி உள்ளார். தலையே நீ வணங்காய், கண்காள் காண்மின்களே, செவிகாள் கேண்மின்களே, மூக்கே நீ முரலாய், வாயே வாழ்த்து கண்டாய், நெஞ்சே நீ நினையாய், கைகாள் கூப்பித் தொழில், கால்களாற் பயனென் என்று உறுப்புக்கள் எல்லாவற்றிற்கும் வேலை கொடுக்கப்பட்டுள்ளது. இவற்றைச் சரியாகப் பின்பற்றினால் இறவாயாக்கையைப் பெற்றுக்கொள்ளலாம்.

'அரிது அரிது மானிடராதல் அரிது' என்ற ஔவையாரின் வாக்கிற்கிணங்க மனிதப்பிறவியை மாண்புடையதாக்கிக் கொள்ளவேண்டும்.இறைவனது திருவருளுக்கு ஆட்படுதல், பிறவி எடுத்ததன் பயன் என்பதை உடல் அழியும் முன்பே அடைந்திட வேண்டும். அழியும் தன்மைவாய்ந்த உடலுக்குள் அழியாத் தன்மைவாய்ந்த ஆன்மா வாழுங்காலத்திலேயே இறைவனை நாடி முத்திக்கு வழிதேட வேண்டும்.

இந்த மனிதசரீரம் எமக்கு எதற்காக வழங்கப்பட்டுள்ளது? என்று சிந்திக்க வேண்டும். கல்வியால் பெறும் நல்லறிவு, அந்த அறிவின் துணையோடு அறவழியில் பொருள் தேடி, தானும் தன் குடும்பமும் மட்டுமல்ல சமூகம் முழுவதுக்கும் நன்மை பயக்க வாழ்வதற்கேயாம்.

மாணவப்பருவத்தில் இருந்தே பெற்றோரும், ஆசிரியரும் பிள்ளைகளை நல்வழிப்படுத்த வேண்டும். மாணவரது கல்வி தொழில் வாய்ப்புக்கான கல்வியாக மட்டுமல்லாது அறம்சார் கல்வியாகவும் அமையவேண்டும்.

*'கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத்தக'*

கற்பது மட்டுமல்ல கற்றதற்கு ஏற்ப நட. அறிவு சரியாய் அமைந்துவிட்டால் செயல்கள் யாவும் செம்மையாய் அமையும். இம்மை,மறுமை இரண்டிலும் உறுதுணையாய் இருப்பவன் இறைவன் என்ற நல்லறிவு வரப்பெற்றால் அதுவே பிறப்பெடுத்ததன் பெரும் பயன் எனலாம்.

*"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண்சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும்*
*இனித்தமுடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே*

மனிதப்பிறவி வேண்டுவது ஏன்? என்று அப்பர் கூறியதை நினைவு கூர்வதுடன், இறைவனை நாடி முத்திக்கு வழிதேட வேண்டும். 'பற்றுக பற்றற்றான் தாளை இம்மையிலும் மறுமையிலும் என்றும் உறுதுணையாய் இருக்கும் இறைவனை வணங்கி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து மனிதப்பிறவி எடுத்ததன் பலனை நிறைவேற்றிக் கொள்வோமாக.

## நெற்றியில் வீபூதி – குங்குமம் – மஞ்சள் பூசும்போது மோதிர விரலைத் தான் பயன்படுத்த வேண்டுமா.... மற்ற விரல்களால் பூசுவது தவறா... இதற்கு ஆத்மீக காரணம் ஏதேனும் உண்டா?

நெற்றியில் வீபூதி பூசும்போது ஆள் காட்டி விரல், நடுவிரல், மோதிர விரல் ஆகிய மூன்றும் பயன்படும். மஞ்சள் பூசும் போது, கட்டை விரலைத் தவிர நான்கு விரல்களும் செயற்படுவது உண்டு. ஒரு விரலை மட்டுமே பயன்படுத்தி நெற்றியில் வீபூதி அல்லது மஞ்சளை இடவேண்டும் என்று தோன்றினால், மோதிர விரலைப் பயன்படுத்தலாம். குங்குமம் இட்டுக் கொள்வதற்கும் அப்படியே. சில நேரங்களில் அவசரம் கருதியோ அல்லது மோதிர விரலைப் பயன்படுத்த முடியாத சூழலிலோ ஆள்காட்டி விரலைப் பயன்படுத்தலாம். தவறில்லை!

பொதுவாக ஒரு விரலை மட்டுமே பயன்படுத்த வேண்டிய தருணத்தில் ஆள் காட்டிவிரல் அல்லது மோதிர விரலே முன்னுக்கு வரும்; மற்றவை வராது. நாமாக "இந்த விரலால்த்தான் இட வேண்டும்" என்று அவற்றுள் ஒன்றை பயன்படுத்தினால் உண்டு.

ஐந்து விரல்களில் எதனால் பொட்டு வைக்க வேண்டும் என்று கேள்வி வந்தால், மோதிர விரலால் வைப்பதே சிறப்பு. அதற்காக, மற்ற விரல்களைப் பயன்படுத்தக் கூடாது என்பதில்லை. ஆகவே, "ஒவ்வொரு நடைமுறையிலும் ஆன்மீக விளக்கம் இருந்தால் மட்டுமே அதை ஏற்பேன்" என்பது அசட்டுத் தனம்; விதண்டாவாதம். வீபூதி பூசுவதும், குங்குமம் இடுவதும் முக்கியம். மோதிர விரலால் அணிவது சிறப்பு.

உ

# நவீன சீர்திருத்தவாதி இராஜாராம் மோகன்ராய்

- செல்வி அம்பாலிகா தம்பாபிள்ளை அவர்கள் -

இந்திய வரலாற்றில் 18ஆம், 19ஆம் நூற்றாண்டு காலப்பகுதி மிகவும் முக்கியமானதாகும். இந்தநாட்டு மக்கள் சமூகத்திடையே பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தியகாலம் இதுவெனலாம். குறிப்பாக ஐரோப்பியர்களது வருகையினால் கிறிஸ்தவமதம் இந்துக்களிடையே ஊடுருவியது. இந்த ஊடுருவலுக்கு சமுதாயத்தில் காணப்பட்ட மூடக்கொள்கைகளும் ஒரு காரணம் ஆகும்.

எனவேதான் கிறிஸ்தவ மதத்தின் வேகமான பரம்பலை கட்டுப்படுத்தவும், இந்துக்களிடையே காணப்பட்ட மூடக்கொள்கைகளைக் களையவும் பல்வேறு காலங்களில் அறிஞர்கள், ஞானிகள் போன்றோர் இந்து சமூகத்தையும், சமயத்தையும் சீர்திருத்தும் நோக்குடன் பல்வேறு கருத்துக்களை முன்வைத்து சென்றமை வரலாறு கூறும் உண்மையாகும். அந்த வகையில் நிறுவன ரீதியாக உருவாக்கப்பட்ட அமைப்புக்களே நவீன சீர்திருத்த இயக்கங்களாகும்.

இந்திய சமூக - சமய சீர்திருத்த வரலாற்றில் நடைமுறை நலப்பணிகள் மூலமாக குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்துள்ளது பிரம்மசமாஜம். பின்னர் தோன்றிய சீர்திருத்த இயக்கங்களுக்கு ஆதாரமானது. இந்த சீர்திருத்த இயக்கத்தை தோற்றுவித்தவர் இராஜாராம் மோகன்ராயே ஆவார்.

நவீன சீர்திருத்தவாதி இராஜாராம் மோகன்ராஜின் வாழ்க்கை வரலாற்றை நோக்கின் விஞ்ஞானிகளும், எழுத்தாளர்களும் பிறந்த வங்கமண்ணில் ராதாநகரத்திலே ராமகாந்தர் - தாரிணிதேவி தம்பதிகளுக்கு மே மாதம் 22ஆம் திகதி 1772ஆம் ஆண்டு பிறந்தார். இள வயதில் ராம், பட்னாவில் பயின்றார். அங்கு முஸ்லீம்களோடு பழகவும் பார்ஸி, அரபு மொழிகள் கற்றிடவும் வாய்ப்புப் பெற்றார். மகனின் ஆழமான விக்கிரக எதிர்ப்பு உணர்ச்சி கண்டு எரிச்சலுற்ற பெற்றோர் ராமைக் கண்டிக்கவே அவர் தனது 12ஆவது வயதிலேயே கோபித்துக்கொண்டு நடந்தே திபெத் சென்றார். அங்கு புத்தமத நூல்களைக் கற்றார். லாமாவைக் கடவுள் போல் எண்ணி வணங்குவதைக் கண்ட இவர், எதிர்ப்புக் குரல் கொடுத்தார். கோபம் கொண்ட பௌத்தர்கள், சிறுவனை தீர்த்துக்கட்ட சமயம் பார்த்தனர். தப்பித்துக் கொண்டு ஊர் திரும்பினார் ராம்.

ஊர் திரும்பிய ராம், பெற்றோர்களின் விருப்பத்திற்கிணங்க காசியில் 1786 முதல் நான்காண்டுகள் பயின்றார். அங்கு வேதம், உபநிடதங்களை நன்கு பயிலும் வாய்ப்புக் கிடைத்தது. சமஸ்கிருத மூலமாக வேதங்களைப் படித்தார். ஆனாலும் ராமின் விக்கிரக எதிர்ப்பின் தீவிரம் குறைந்த பாடில்லை. பெற்றோரின் வெறுப்பையும், உறவினரின் வெறுப்பையும் சம்பாதித்தார். பெற்றோருக்கு, ராம் மீது ஏற்பட்ட வெறுப்புணர்வு குடும்பத்திலே தீராத

விரிசலை ஏற்படுத்தியது. தாயார் கடைசிவரை ராமுடன் உறவாட முடியாமற் போனது.

உருவ வழிபாடு, இந்து மதத்தின் பிரிக்கமுடியாத ஒரு பகுதி. ராம் அதைக் கண்டிக்கிறார். எனவே அவர் நாத்திகர் என மக்கள் கருதினர். ஆனால் ராமோ அதை பொருட்படுத்தவில்லை. மேலைத் தேசத்து இறை இயலாளர்களின் சமகாலத்திய வரவேற்புகளைப் பெற்றார் ராம். "The monthly Repository of Theology and General Literature" என்ற மேனாட்டு ஆய்விதழ் ராம் மோகனின் சிறிய நூலான வேதாந்த தத்துவத்தின் சுருக்கம். சிறப்பு மிக்க வேதங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் அனைத்தும் ஒன்றாகத் தொகுக்கப்பெற்றுள்ளன. அவை அனைத்தும் கருத்தாழமிக்க அறிவுச் சுடர்களாகும்" என்று கூறப்படுகின்றது.

பல்வேறு சமயங்களையும் கற்றுத் தெளிந்த இவர் அனைத்துச் சமயங்களையும் நேசிக்கும் சமயக் காழ்ப்பற்ற பண்பாளர். அனைத்துலக சமயத்தைச் சார்ந்தவராக வெளிப்படுத்திக் கொண்டார்.

ராம் மோகன் மக்களை சீர்திருத்த எண்ணி பிரம்மசமாஜம் என்ற கொள்கையை 1828ஆம் ஆண்டு தொடக்கி வைத்தார். பிரம்மசமாஜம் என்ற சொற்றொடர் "பரம்பொருள் வழிபாட்டுச் சங்கம்" எனப்பொருள்படும். இவர் ஒரே கடவுள் என்று வாதம் செய்வார். உயிருள்ள அல்லது உயிரற்ற பொருள்களை எதுவாக இருந்தாலும் இன்று இருப்பதாகவோ, இனிமேல் தோன்றக்கூடியதாகவோ இருந்தாலும் அவற்றை வழிபட்டு வழிபாட்டுக்குரிய பொருளாக ஏற்றுக்கொள்ளக்கூடாது என மறுத்தவர் ராம். சாதி வேறுபாடுகளைப் பலமாக எதிர்த்து, பெண்கள் எதிர்கொண்ட சகலவிதமான கொடுமைகளையும் ஒழித்திட அரும்பாடுபட்டார். பெண்கள் மிகச்சிறிய வயதாய் இருக்கும்போதே 3, 4 வயதிலேயே மணம் முடித்து வைக்கப்பட்டனர்.

இவ்வாறு மணமுடித்தலை இவர் எதிர்த்தார். பெண்களை விற்பனை செய்யக்கூடாது எனவும், பெண்கள் கல்விகற்கும் உரிமையைத் தடுக்கக்கூடாது எனவும் எதிர்த்துப் போராடிய மகான். கொடியதும் ஆனால் பெருமையாகக் கருதப்பட்டு வந்ததுமான பலதாரமணத்தை வெறுத்து சட்டத்தை நிலைநாட்டினார். பயங்கரமான ஸதி வழக்கத்தை ஒழித்திடப் பாடுபட்டு 1829இல் வெற்றியும் கண்டார்.

பிரம்மசமாஜத்தின் முயற்சியால் ஸதி ஒழிப்புச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த உடன்கட்டை ஏறும் வழக்கம் ஒழிக்கப்பட்டதை மதவெறியர்கள் எதிர்த்தனர். போர்க்கொடி தூக்கினார்கள். 125 பண்டிதர்களைச் சேர்த்து "தர்மசபை" என்னும் கழகத்தை நிறுவி இச் சட்டத்தை எதிர்த்து வழக்காடினார். இதற்காக ராம் இலண்டன் வரை சென்று வெற்றிவாகை சூடினார்.

இந்தியர்கள் தமது கிணற்றுத்தவளைச் சிந்தனையை விடுத்து உலகளாவிய பார்வையைப் பெற விழைவு கொண்ட ராம்மோகனார் ஆங்கிலக் கல்வி என்ற யன்னலைத் திறந்து வைத்தார். "மெக்கவே பிரவுலின்' துணையுடன் ஆங்கிலக் கல்விக்கு வழிவகுத்தார். 'டப்' என்ற பெயரில் ஆங்கில கல்விக் கூடத்தை தானே திறந்து சிறப்பாக நடாத்தி வந்தார்.

ராம் அச்சகத்தை சொந்தமாக நடத்திவந்தார். சீர்திருத்தப் பிரசுரங்களை அச்சிட்டு இலவசமாக வழங்கினார். அவர் வெளியிட்டதாவது:

01. ஸதி: விதவைகளை எரித்தல் - 1818முதல் வெளியீடு

02. ஸதியும் சாத்திரங்களும்.

03. கவர்னர் ஜெனரல் வில்லியம் பெண்டிங் அவர்களிடம் அளித்த முறையீடு

04. லண்டன் காமன்ஸ் சபைக்கு விண்ணப்பம்.

பின்னர் 1822இல் "இந்துவம்சாவழி சட்டப்படி பெண்களின் பண்டைய உரிமைகளின் மீது ஆக்கிரமிப்புகள் பற்றி சுருக்கமான குறிப்பு" என்னும் ஆங்கில நூலைக் கருத்துச் செறிவுடன் வெளியிட்டார். இந்து சட்டம்பயில்பவர்களும் பிரமிக்கும் வகையில் இருந்தது அவரது சட்ட நுண்ணறிவு. இந்தப் பிரசுரத்தில் பெண்கள் பலதார மணக்கொடுமையாலும், விதவைகள் ஆவதாலும் படும் துயரங்களை விபரித்து வறுமையிலும், வேதனையிலும் நொந்து மாய்வதைவிட 'திடீரென்று' தீக்குளித்து மாய்வது எவ்வளவோ மேல் என்று கருதினார்கள் என்பதனை ராம் உருக்கமாக எடுத்துரைத்தார்.

"பிராமணிகல் மேகசைன்" என்ற இதழில் இந்து மதத்தின் சிறப்புக்களைப் பின்வருமாறு சித்தரித்தார் ராம். "இந்தப்பூமியில் வாழும் மனிதர்களில் இந்துக்களைப் போன்று சகிப்புத்தன்மை உடையவர் யாரும் இல்லை என்பது உலகறிந்த உண்மையாகும். ஒவ்வொரு மதப்பிரிவிலும் உள்ள நல்லனவற்றையெல்லாம் மதிக்கிறது இந்து மதம்" எனக் கூறுவதில் இருந்து அவர் உத்தம இந்துவாக உறுதிப்படுத்தப்படுகிறார்.


பத்திரிகைச் சுதந்திரத்திற்காகப் போராடினார். இவர் நடாத்திய சில இதழ்கள் 'சம்பத கௌதமி, மிரட் - உல் - அக்பார், பங்கதூதன் என்பனவாகும்.

சமய, சமூக சீர்திருத்தத்துறையில் 38 நூல்களை எழுதியும், விவாதங்களை நடாத்தியும் பிரம்மசமாஜக் கொள்கைகளை உலகிற்கு எடுத்துக்காட்டிய உத்தமர். இவர் இங்கிலாந்தில் 1833ஆம் ஆண்டு இறைபதம் அடைந்தார். ஆனாலும் அவரது புகழ் மறையவில்லை. பன்மொழிப் புலமையாளரும், எந்தச் சூழலிலும் எவருக்கும் வளைந்து கொடுக்காத கொள்கையாளரும் போராட்டத்தையே வாழ்க்கையாகக் கொண்டவர் ராஜாராம் மோகன்ராய் ஆவார். இவரது பிரமசமாஜக் கொள்கைகள் இந்தியா மட்டுமல்ல இலங்கை, லண்டன் போன்ற நாடுகளுக்கும் பரவி இருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். முதலாவது சீர்திருத்தவாதி என்ற பெருமைக்குரியவர் இவரே ஆவார்.

## நன்றிகள்

**ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சகல பணிகளுக்கும் தங்களால் இயன்ற உதவிகளை வழங்கிக்கொண்டிருக்கும் லண்டன் ருட்டிங் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய அறங்காவல் சபையினருக்கும் அவுஸ்திரேலியா – சிட்னி முருகன் ஆலய அறங்காவல் சபையினருக்கும் ஆச்சிரமத்தின் சார்பில் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.**

உ




சிறுவர் பக்கம்

## வானத்தில் பறந்த மீன்

அது ஓர் அடர்த்தியான மரம். அதில் ஏராளமாய் பழங்கள் காணப்பட்டன. ஒரு கிளி உட்கார்ந்து அந்தப் பழங்களை கொத்திக் கொத்தி சுவைத்துக் கொண்டிருந்தது. அந்த மரத்தின் அருகில் ஒரு சிறிய குளம் இருந்தது. அதில் சிறியதும் பெரியதுமாய் பலவகையான மீன்கள் இருந்தன. அவை கூட்டமாய் நீந்துவதைப் பார்க்க அழகாய் இருந்தது. மீன் கூட்டத்தில் இருந்த ஒரு மீனுக்கு ஓர் ஆசை இருந்தது. வானத்தில் ஒரு முறையாவது பறந்து பார்க்க வேண்டும் என்பதே அதன் ஆசை. மரத்தில் உட்கார்ந்து பழத்தை சுவைத்துக் கொண்டிருந்த கிளி ஒருமுறை அந்த மரத்தைச் சுற்றிப் பறந்து விட்டு மீண்டும் வந்து வேறொரு கிளையில் உட்கார்ந்தது. அந்தக் கிளையிலிருந்த பழங்களை சுவைக்க ஆரம்பித்தது. அதைப் பார்த்த அந்த மீன் தானும் கிளியைப் போல பறக்க முடியுமா என்று குளத்திலிருந்து எம்பிக் குதித்து பறக்க முயற்சி செய்தது. ஆனால், பாவம்....... அது மீண்டும் குளத்திற்குள்ளேயே விழுந்தது. இதைப் பார்த்த வேறொரு மீன் அதனிடம் இதைப்பற்றி விசாரித்தது. "என்ன மீன் தம்பி, என்ன பண்றே?"

"வானத்துல பறக்கணும்னு ரொம்ப நாளா ஆசை. அதான் முடியுமான்னு முயற்சி பண்ணிப் பார்க்கிறேன்."

"நாம தண்ணீரை விட்டு வெளியே வந்து கொஞ்ச நேரம் இருந்தா நம்ம உயிர் போயிடும். ஆனா இதைப்பத்தியெல்லாம் நீ யோசிக்காம பறக்கணும்னு ஆசைப்படறே." "முயற்சி பண்ணினா நாம எதை வேணா சாதிக்கலாம். இது உனக்கு தெரியாதா?" "அது ஒருத்தரை உற்சாகப்படுத்தறதுக்காக சொல்லப்படற வார்த்தைகள். சில விஷயங்களை யாராலேயும் சாதிக்க முடியாது. அதனால முதல்ல முடியுமா முடியாதான்னு யோசிக்கணும். முடியும்னு மனசுல தோணினா அதை சாதிக்க முயற்சி பண்ணனும்."

"நான் வானத்துல பறந்து சாதிச்சிடப் போறேன்னு நீ பொறாமைப்படறே. அதான் என்கிட்டே நீ இப்படியெல்லாம் வாய்க்கு வந்தபடி பேசறே." இதைக்கேட்ட அறிவுரை சொன்ன மீன் பெருமூச்சு விட்டது. "சரி, சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன். ஏத்துக்கறதும் ஏத்துக்காததும் உன் இஷ்டம்." அறிவுரை சொன்ன மீன் அங்கிருந்து போய்விட்டது. ஆனால், வானத்தில் பறக்க ஆசைப்பட்ட மீனோ தன் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. தண்ணீரின் மேற்பகுதிக்கு வந்து குரல் கொடுத்து அந்தக் கிளியை கீழே அழைத்தது. மீனின் குரலைக் கேட்டு அந்தக் கிளி கீழே வந்தது. "என்ன மீனே, எதுக்கு என்னை கூப்பிட்டே?" "எனக்கு வானத்

சிறுவர் பக்கம்

துல ஒரு முறை பறந்து பார்க்கணும்னு ஆசையா இருக்கு. நீ உதவி செய்வியா?" "நான் எப்படி உனக்கு உதவி செய்ய முடியும்?" "உன்னோட முதுகிலே நான் உட்கார்ந்துக்கறேன். நீ ஒருமுறை பறந்துட்டு என்னைக் குளத்திலே இறக்கி விட்டுடு." "பறக்கும்போது கீழே விழுந்துட்டா என்ன பண்றது? வேணாம். நீ பறக்க ஆசைப் படாதே. என்னால முடியாது." இதைக்கேட்ட மீனுக்கு கோபம் வந்தது. "வானத் திலே பறக்கிறோம் அப்படிங்கிற திமிர் உனக்கு. அதான் இப்படி பேசறே." "அப்படி எல்லாம் இல்லே மீனே. உன் நன்மைக்குத்தான் சொல்றேன். பறக்கணும்னு ஆசைப்படாதே. தண்ணீரை விட்டு வெளியே வர்றது உனக்கு நல்லது இல்லே." மீன் கோபப்பட்டு தண்ணீருக்குள் சென்றுவிட்டது. அடுத்தநாள் புறா ஒன்று பறந்து வந்து அந்த மரத்தின் மீது அமர்ந்தது. பறந்து வந்து அமர்ந்த புறாவைப் பார்த்த அந்த மீனிற்கு மீண்டும் பறக்கும் ஆசை வந்தது. புறாவைக் கீழே கூப்பிட்டது. புறாவும் கீழே வந்தது. மீன் புறாவிடம் தன் பறக்கும் ஆசையை தெரிவித்தது. புறா வும் கிளி சொன்னதைப்போலவே சொன்னது. "மீன் குட்டியே. பறக்கணும்னு ஆசைப்படாதே. தண்ணீரை விட்டு வெளியே வர்றது உனக்கு நல்லது இல்லே." மீன் கிளியிடம் பேசியதைப் போலவே புறாவிடம் கோபமாகப் பேசிவிட்டு தண்ணீருக்குள் சென்றுவிட்டது. அதற்கு அடுத்தநாள் ஒரு கழுகு அந்த மரத்தில் வந்து உட்கார்ந்தது. கழுகைப் பார்த்த மீன் தன் ஆசையை அதனிடமும் தெரிவித்தது. "கழுகு அண்ணா, உங்களைப் பார்த்தா ரொம்ப நல்லவரா தெரியிறீங்க. எனக்கு ஓர் உதவி செய்வீங்களா?" "என்ன மீன் தம்பி, சொல்லு. நிச்சயமா உனக்கு உதவி செய்யறேன்." "எனக்கு வானத்துல ஒரு முறையாவது பறந்து பார்க்கணும்னு ஆசையா இருக்கு. கிளிகிட்டே கேட்டேன். என்னோட ஆசை தப்புன்னு சொல்லிடுச்சு. புறாக்கிட்டே கேட்டேன். அதுவும் என்னோட ஆசை தப்புன்னு சொல்லிடுச்சு. நீங்களே சொல்லுங் கண்ணா, என்னோட ஆசை தப்பா?" கழுகு யோசித்தது. "உன்னோட ஆசையிலே எந்த தப்பும் இருக்கிற மாதிரி எனக்குத் தெரியலே."

இதைக்கேட்ட மீன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தது. "நீங்க என்னைத் தூக்கிட்டு ஒரு முறை வானத்துல பறக்கறீங்களாண்ணா?" "ஓ, அதுக்கென்ன மீன் தம்பி, இதோ இப் பவே உன்னை தூக்கிக்கிட்டு பறக்கறேன்." கழுகு கீழே வந்தது. குளக்கரையில் வானத் தில் பறக்கும் ஆசையோடு எட்டிப்பார்த்த மீனை தன் சொண்டால் தூக்கிக் கொண்டு பறக்க ஆரம்பித்தது. பறக்கும் போதே கழுகு வானத்தில் பறக்க ஆசைப்பட்ட மீனை சாப் பிட்டுவிட்டது. பறக்கவேண்டும் என்று ஆசைப் பட்ட அந்த மீனின் கதை பரிதாபமாய் முடிந்து போனது.



உ

திருவாசக ஆராய்ச்சியுரை — தொடர்ச்சி



# சிவபுராணம்

- சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -

**வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க**

**பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க**

**புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க**

**கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க**

**சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க**

***பதவுரை:*** 6-10 வேகம் கெடுத்து ஆண்டவேந்தன் அடி வெல்க - ஆணவமலத்தின் வெம்மையைக் கெடுத்து அடியேனை ஆண்டருளிய இறைவனது திருவடிகள் வெற்றி பெறுக; பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய் கழல்கள் வெல்க - பிறவியாகிய மரத்தை வேரோடறுக்கும் சடைமுடியாகிய தலைக்கோலத்தையுடைய இறைவனது இடப்பட்ட வீரக்கழல்களையுடைய திருவடிகள் வெற்றி பெறுக; புறத்தார்க்கு சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க - தன்பால் அன்பரல்லாதார்க்குத் தூரத்தேயுள்ளவனான இறைவனது பூப்போன்ற திருவடிகள் வெற்றி பெறுக; கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க - கைகள் குவிய வணங்கும் அன்பர்களது மனமகிழ்தற்கேதுவாகிய இறைவனது திருவடிகள் வெற்றி பெறுக; சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க - தலைகள் தன் தாளில் ஒடுங்கப் பெறுவாரை உயர்வடையச் செய்யும்சிறப்பையுடைய இறைவனது திருவடிகள் வெற்றிபெறுக.

***ஆ - ரை:*** வேகம் - வெம்மை, ஈண்டு ஆணவ மலத்தின் வெம்மையை வேகம் என்பதற்குப் 'பிறவிவெப்பம்' என்றும், "மனவேகம்" என்றும் உரைப்பாருமுளர். வேந்தன் - இறைவன். "மாண்டார் சுடலைப் பொடி பூசி மயானத் தீண்டா நடமாடிய வேந்தன்" எனத் தேவாரத்தும் (சம்பந். 30:9) வருதல் காண்க. வெல்க என்பது வெற்றி பெறுக என ஒருவகை வாழ்த்துப் பொருளில் வந்தது. இது ஜெய என்பதன் தமிழாக்கம். இறைவன் பிறவியை அறுத்தலின் 'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்' என்றார். "பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்" (சிவபுரா 48) "பிள்ளைப் பிறப்பறுக்கும் பேராளன்" (வெண்பா 4) என வருவன காண்க. அறுக்கும் என்ற வினையினால் பிறவியாகிய மரத்தை வேரோடறுக்கும் என உரைக்கப்பட்டது.

"பிறவியை வேரோடுங் களைந் தாண்டு கொள்" நீத் 19

"என் பிறவிக் கருவேரறுத்தபின் யாவரையுங்

கண்டதில்லை" தெள் 2

பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட பிஞ்ஞகா"

பிடித் 6

"என் பிறவியை வேரறுத்துப் பெரும்பிச்சுத்

தரும்பெருமான்" அடைக் 3

என அடிகள் அருளியமை காண்க. அறுத்தல் திருவருளால் என்க. "நின் திருவருளால் என் பிறவியை வேரறுப்பவனே" (அடைக் 2) என வருதல் காண்க. பிஞ்ஞகம் - சடைமுடியாகிய தலைக்கோலம். பெய்கழல் - இட்ட வீரக்கழல். பெய்தல் - செறித்தல் எனினுமாம். "அளித்தலும் பெய்தலும் செறித்தலாகும்" எனப் பிங்கலந் தையில் வருதலும் காண்க. கழல், திருவடிக்கு ஆகுபெயர்.

இறைவன் பிரமன் தலையையும், அந்தகாசுரனையும் முப்புரங்களையும், தக் கனையும், சலந்தரனையும், கஜன் என்னும் யானையையும், காமனையும் யமனையும் அழித்து வெற்றிகொண்ட பெருவீரனாதலின் வீரக்கழலணிந்த திருவடியையுடையனா யினான். இவ் எட்டு வீரங்களையும் அட்ட வீரம் என்பர். கழல் - மலவாற்றல் தவிர்க் கும் வெற்றிப்பாடு குறித்தது எனினுமமையும்.

தன்னிடத்து அன்பு கொண்டு சார்தலின்றி உலகப் பொருள்களைச் சார்ந்து நிற்பார்க்கு உணரப்படானாகலின் "புறத்தார்க்குச் சேயோன்" என்றார். "யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச் சோதியான்" (சென்னிப் 1) என அடிகள் அருளியமை ஈண்டறியற்பாலது. பூங்கழல் என்பதற்குப் பொலிவு பெற்ற கழல் எனினுமாம். கழல் திருவடிக்கு ஆகுபெயர்.

இறைவனிடத்து அன்புடையார் கைகுவித்து வணங்குதலும், கண்ணீர் வார்தலும், மெய்ம்மயிர் சிலிர்த்தலும் உடையராதலின் சிறப்புப் பற்றிக் கரம் குவிதலை எடுத்துக் கூறினார். இறைவனை நினைக்குந்தோறும் அடியார்க்கு மனத்தின்கண் பெருமகிழ்ச்சி தோன்றுதலின் 'உண்மகிழும்' என்றார். மகிழும்கோன் - மகிழ்தற்கேதுவாகியகோன்.

சிரம்குவிதல் - இறைவன் திருவடிகளிற் சிரசு ஒடுங்குதல். தாள் + தலை என்பது தாடலை என இயைந்து நிற்பது போல அத்துவித பாவனையினால் இறை வன் திருவருளிற் கலந்து நிற்றல். குவிதல் - ஒடுங்குதல். "குவிதலுடன் விரிதலற்று" (தாயுமா சின்மயா 8) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சிரம்குவியும் அன்பரை இறைவன் உயர்வடையச் செய்தலின் 'ஓங்குவிக்கும்' என்றார். சீர் என்னுஞ்சொல், புகழ், அழகு, செல்வம் முதலிய பொருள்கள் தருதலின் சீரோன் அவையெல்லாம் நிறைந்தவன் எனினுமாம்.

(தொடரும்...

உ

# நால்வரும் அருணகிரியும்

**- செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் -**



கருவிலே ஞானச் செல்வத்துடன் உருவாகி உலகில் அவதரித்து இறைவனை நேரில் கண்டு ஆட்கொள்ளப்பட்டவர்கள் நால்வர். அவர்களுள் சம்பந்தர், உமாதேவியார் ஞானப்பால் ஊட்ட ஞானமே உருவாகி அம்மை அப்பரை நேரில் கண்டவர். கர்மவினையால் நீண்டகாலம் துன்பத்தில் உழன்று, உழவாரப்பணியும், தேவாரப்பணியும் கொண்டு திருவையாறில் கைலைக் காட்சி கண்டவர் திருநாவுக்கரசர். கர்மவினையற்றவர் சுந்தரர், இறைவனை தோழனாகக் கிடைக்கப்பெற்றவர். பூர்வ புண்ணிய விசேடத்தால் இறைவனே குருவாக வந்து ஆட்கொண்டமையால் ஞானம் பெற்றவர் மாணிக்கவாசகர்.

இந்நால்வருடன், உலக வாழ்க்கையில் ஈடுபட்டு அரன்தன் பாதம் மறந்து பரமாதர் வலைப்பட்டு கொடியநோய் வருத்த தற்கொலை செய்ய நாடியபோது முருகனால் ஆட்கொள்ளப்பட்டு, தன்னை முருகனிடம் ஒப்படைத்தவர் அருணகிரிநாதர்.

இவர்கள் இறைபக்தி, இறை அருள் மிகுதியால் மன வைராக்கியம் கொண்டவர்கள். எதற்கும் அஞ்சாதவர்கள், ஞானசம்பந்தர், நாவுக்கரசர், அருணகிரியார் மூவரும் எத்தனை துன்பம் வரினும் அஞ்சமாட்டோம் என எதிர்கொண்டவர்கள்.

பாண்டியன் வெப்புநோயால் வருந்துகின்றான். தெய்வ அருள் கொண்ட ஞானக்குழந்தை பாண்டி நாட்டிற்கு வந்திருக்கிறதாம். அற்புதமான பாடல்கள் பாடி அற்புதங்கள் செய்கிறதாம். அறிந்த பாண்டியன் மனைவியும், மந்திரியும் குழந்தையைக் கண்டு பாண்டியனின் நோயைக் குணப்படுத்தும் நோக்குடன் புறப்படுகிறார்கள். அப்பொழுது நாவுக்கரசர் சம்பந்தரை நோக்கி "நீர் சிறுபிள்ளை சமணர் பொல்லாதவர்கள் மந்திரம் வல்லவர்கள் இப்போ நேரம் நல்லாயில்லை அங்கு போகவேண்டாம்" எனத் தடுக்கிறார். ஞானசம்பந்தர் உள்ளம் கவர்ந்த கள்வனை மனதில் தியானித்து, நம்பன் அடியாரை நாளும் கோளும் தீண்டமாட்டா என நம்பிக்கையூட்டுவதுபோல் -

"வேயுறு தோழிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்து
என்னுளமே கொண்ட அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே" எனப்பாடியவர்,

"பானல் வாயொரு பாலன் ஈங்கிவன் என்று
நீ பரிவெய்திடேல்"
எனப்பாண்டிமாதேவியின் சந்தேகத்தையும் போக்குகிறார்.

அடுத்து நாவுக்கரசர், "தன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்து கிடப்பதே" என வாழ்ந்தவர். ஊழ்வினையால் சைவம் விட்டு சமணம் சார்ந்ததால் சூலைநோய் வாட்ட சகோதரி தந்த வீபூதியை அணிந்து மீண்டும் சைவத்துக்கு வந்தவர். சமணர் வெகுண்டெழுந்து பல தீங்குகள் செய்தபோது சிவனை நினைந்து பதிகங்கள் பாடியவர். ஒரு சமயம் சமணர் எங்கள் சமயத்தை அவமதித்துள்ளாய். கடுமையான தண்டனைக்கு ஆளாவாய் எனும்போது,

"நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலையில்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணியோம், அல்லோம் இன்பமே எந்நாளும் துன்பமில்லை." நான் இறைவன் அடிமை. எத்துன்பம் வரினும்,
"அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை" என சமணரின் வாயையும் செயல்களையும் அடக்குகிறார்.



சுந்தரர் இறைவனைத் தோழனாகப் பெற்றவர். நண்பன் பிழையான வழியில் சென்று துன்பக் கடலில் விழப் போகின்றான் என்ற சமயத்தில் இடுக்கண் களைபவனே உற்ற நண்பன். நம்பியாரூரர் மணப்பந்தலில் இருந்தபோது, "நம்பியாரூரா! நீ எனது அடிமை, எனக்குப் பணிவிடை செய்ய வா" எனப் பிராமணவடிவில் வந்த முதியவர் தடுக்க "ஏ கிழவா! பிராமணனுக்குப் பிராமணன் அடிமையாவது எங்காயினுமுண்டா? நீ என்ன பித்தனா?" என்று சினந்து கேட்கிறார் ஆரூரர். தனது இருப்பிடம் காட்டவருமாறு அனைவரையும் திருவெண்ணைநல்லூர் அழைத்துப் போய் ஆரூரருக்கு காட்சி கொடுத்தார் இறைவன். அங்கே, "மணப்பந்தலிலே என்னை நீ பித்தனென்று மொழிந்தபடி "பித்தா" என அடியெடுத்து உன் நற்றமிழ் வாயால் இனிமையான பாடல்களைப் பாடுவாய்" என இறைவன் திருவாய் மலர்ந்தருளினார். வாழ்வில் வந்த துன்பங்களை நண்பனுக்காக இறைவன் எடுத்துச் சுமந்தமையால் அவர் செல்லப்பிள்ளையாக வாழ்ந்து இறைவனால் அனுப்பப்பட்ட வெள்ளையானையில் ஏறி இறைவன் திருப்பாதத்தை அடைந்தார்.

மாணிக்கவாசகர் தனக்கு வந்த துன்பங்களின் போது

வீறாப்பு பேசாது, "அன்றே என்றன் ஆவியும், உடலும், உடமையெலாம் உன்னிடம் ஒப் படைத்து விட்டேன். இன்றோர் இடையூறு உண்டோ? நல்லதை அல்லது தீயதைச் செய்தாலும் யாவும் உனதே எனப் பாடுகிறார். இன்னோர் சந்தர்ப்பத்தில்,

**"தந்தது உன்தன்னை கொண்டது என்தன்னை**
**சங்கரா யார் கொலோசதுரர்?**
**அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாது நீ பெற்றது ஒன்று என்பால்"**

குருந்தமர நீழலில் ஞானாசிரியனாய் வந்தபோது எனது உயிர், உடல் உடமை எல்லாவற்றையும் ஒப்படைத்து என்நெஞ்சை உமக்கு இடமாகத்தந்து அந்தமில்லா ஆனந்தம் பெற்றுள்ளேன் ஆனால் நீ என்னிடமிருந்து என்னபெற்றாய்' நீயா நானா ஆர் கெட்டிக்காரன்? எனப் பெருமிதம் கொள்கிறார்.

இவர்களைப் போன்று உலக வாழ்வில் ஈடுபட்டு உடற்பிணியும் உளப்பிணியும் வாட்ட வாழ்வைத் துறக்க எண்ணி தற்கொலை செய்யத் துணிந்தபோது முருகனால் ஆளப் பட்டு ஞானம் பெற்றவர் அருணகிரியார் அவர் கந்தரலங்காரத்தில்

**"நாள் என் செயும் வினைதான் என் செய்யும் எனை**
**நாடி வந்த**
**கோள் என் செய்யும் கொடுங் கூற்று என் செயும்**
**குமரேசர் இரு**
**தாளும் சிலம்பும் தண்டையும் சிலம்பும்**
**சண்முகமும்**
**தோளும் கடம்பும் எனக்கு முன் வந்து தோன்றிடினே"**

நான் முருகா என்று அழைப்பேன். என் கண் முன்வருவான். அப்போது நாள்கள் கிர கங்கள், முன் பின் செய்த வினைகள் ஏன் உயிரைக் கவரும் கொடிய இயமனால் என்ன செய்ய முடியும்? **அஞ்சேன்.**

மேலும்,

**"சலங் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்**
**யமன் சண்டைக் கஞ்சார்**
**துலங்கார் நரகக்குழி அணுகார்**
**துட்டநோய் அணுகார்**
**கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்**
**கந்தனின்**
**நூலலங்காரம் நூற்றில் ஒரு கவிதான்**
**கற்றறிந்தவரே"**

என்றோ ஒரு நாள் துன்ப துயரங்கள் வரும், கொடிய பகைவர்களால், துஷ்டமிரு கங்கள் எதிர்க்கலாம்; வினைப்பயன்கள் சூழும் முதுமை வரும் பாசக் கயிறுடன் உயிரைக் கவர வருவான் யமன். எல்லாவற்றிலும் பார்க்க கொடியது மரணபயம். அவ்வமையம் நமக்கு மெய்த்துணையாக வருவது முருகன் கைவேல்தான் என அறிவுறுத்துகிறார். ஆகவே இவ் வருளாளர் கூறுவதைக் கேட்டும், அறிந்தும் முருகனை பக்தியோடு வழிபட்டுப் பயன் அடைவோம்.

**வேல் உண்டு வினை இல்லை**
**மயில் உண்டு பயம் இல்லை.**

# விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

- பொ. சோமசுந்தரம் அவர்கள் -

இறைவன் ஒப்பு உவமையில்லாத ஞானமே உருவானவன் அவன் ஆன்மாக்களை உய்விப்பதற்காக உருவத் திருமேனியையும் அருஉருவத் திருமேனியையும் அருவத் திருமேனியையும் உடையவனாக உள்ளான். இதனையே உமாபதி சிவாச்சாரியார் திருவருட் பயனின் முதல் அதிகாரத்தில் பதிமுது நிலைபற்றிக் கூறும்பொழுது

அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உளன் எனக் கூறியுள்ளார்

அறிஞர்களிற் அறிவாம் உருவுடைய இறைவன் ஏனையோர்க்கு முன்பு கூறிய மூன்று வடிவத்திலும் காணப்படுவான். இறைவன் ஆன்மாக்களின் பக்குவ நிலைக்கேற்ப தடத்த வடிவங்களை உடையவனாக இருப்பன். அவன் சொருபநிலை அறிவாமுருவன்.

அறிவாம் உருஉடைய இறைவன் ஓர் உணர்வும் பொருள் என்ற கருத்தை முதல் அதிகாரத்தில் கடைசியில் பத்தாவது குறட்பாவில் கூறியுள்ளார்.

உன்னுமுளஐ தையமிலது உணர்வாயோவது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து

இதிலிருந்து இறைவன் தொடர்ச்சியாக உள்ள பிறவிப் பிணியை தீர்க்கும் மருந்து போன்றவன் என அறிகிறோம். அறிவிற்கு அறிவாகிய இறைவன் ஆன்மாக்களிலிருந்து நீங்காமல் நின்று பிறவிப் பிணியைத் தீர்ப்பவன் ஆகையால் நாங்கள் ஐயம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் வேதாந்திகள் இறைவனைப் பற்றி ஐயம் கொள்ளத் தேவையில்லை. அம்மருந்தை உணர்வின் உட்கொள்க எனக் கூறியுள்ளார்கள். பிறவிப் பிணிக்கு முக்கிய காரணம் ஆணவம் என்னும் உணர்வுப் பொருள் அவ்வாணவத்தை நீக்குவதற்கு உணர்விற்கு உணர்வாகிய இறைவனால் தான் முடியும்.

விஞ்ஞானத்தையும் மெஞ்ஞானத்தையும் ஒப்பிடும் பொழுது சர்ச்சைக்குரிய விடயங்களையும் ஒற்றுமையான விடயங்களையும் காணலம். இவ்விரு ஒப்பீட்டிற்கும் சந்தான குரவர்கள் சிலரின் கருத்துகளையும் விஞ்ஞானிகள் பலரில் முக்கியமாக அயன்ஸ்ரைனின் கருத்தையும் ஒப்பிடப்பட்டுள்ளது.

அயன்ஸ்ரைனின் வாழ்க்கைக் குறிப்புகளையும் அவரின் படைப்புகளையும் "The Univer--se and Dr. Einstein" என்ற புத்தகத்தை லிங்கன் பாணெற் (Lincohn Banett) என்பவர் எழுதியுள்ளார். அயன்ஸ்ரைன் பௌதிகத்திலும் கணிதத்திலும் சிறந்த அறிவு பெற்றவர். அவரின் அணுவைப் பற்றிய கருத்துக்களும், $E=MC^2$ என்ற சமன்பாடும் மிகவும் பிரசித்தி பெற்றவை. இச்சமன்பாட்டின் கருத்துத்தான் அணுக்குண்டு தயாரிப்பதற்கு வித்திட்டது.

அயன்ஸ்ரைனின் ஒளியின் மின்சாரத்தாக்கம் மிகப் பிரபல்யம் வாய்ந்தது. ஒளி ஓர் உலோகத்தகட்டில் விழும் பொழுது இலத்திரன்கள் வெளி

யேறும் என்பதாகும். வெளியேறும் இலத்திரனின் எண்ணிக்கை நிறத்திற்கு நிறம் வேறுபடும். ஒளியின் அழுத்தத்தில் தங்கியிராமல் நிறத்தில் தங்கியுள்ளது. இத்தாக்கம் ஒளி பல துணிக் கைகளால் உண்டானது என்ற கருத்தை வலியுறுத்துகிறது. ஒளி அலையினால் மட்டும் உண்டானது என்ற கருத்திற்கு முரணானது. இப்பரிசோதனைதான் அவரிற்கு (Nobel Prize) நோபல் பரிசைப் பெற்றுக் கொடுத்தது. இப்பரிசோதனை தொலைக் காட்சிபோன்ற உபகரணங்கள் செய்ய உதவியது. ஒளி அலையால் ஆனது எனவும் துணிக்கைகளால் ஆனது எனவும் பரிசோதனைகளால் விளக்கலாம். அது ஜீவான்மாவும் பரவான்மாவும் ஒன்று என்ற சங்கரரின் கருத்தையும் ஜீவான்மாவும் பரவான்மாவும் வெவ்வேறு என்ற மகத்துவரின் கருத் தையும் ஒப்பு நோக்கலாம்.

இறைவன் தனக்கு மேலில்லாத ஒப்பு உவமையில்லாத ஞானமே உருவானவன். அவன் ஆன்மாக்களை உய்விப்பதற்காக உருவத்திருமேனியையும் அருவுருவத் திருமேனி யையும் அருவத் திருமேனியையும் உடையவனாவும் உள்ளான். இதனையே உமாபதி சிவாச் சாரியார் திருவருட் பயனின் முதல் அதிகாரத்தில் பதிமுது நிலைபற்றிக் கூறும்பொழுது

அருவும் உருவும் அறிஞர்க் கறிவாம்
உருவும் உடையான் உளன் எனக் கூறியுள்ளார்

சரியாவான்கள் உருவத் திருமேனியை வணங்குவர் அத்திருமேனிகளாவன சதாசிவம், மால், அயன், மகேசுரன், உருத்திரன். கிரியாவான்கள் கிரியையோடு கூடிய கிரியாபூசை செய்து வழிபடுவர். சரியான்வான்கள் கிரியாவான்களிலும் பார்க்க ஞானத்தில் குறைவு உடைய வர்கள் யோகிகள் அருவத் திருமேனிகளாகிய சிவம், சக்தி, நாதம், விந்துக்களாகிய உருவ மற்ற இறைவனை வழிபடுவர். உருவ வழிபாட்டில் இறைவனின் திருமேனியில் காணப்படும் அவயவங்களும் அருள் வடிவங்களாகவே கருதப்படுவதால் அவ் வணக்கத்திற்குரிய பலன்களும் உண்டு. அறிவாம் உருவத்தையுடைய இறைவனிற்கு தடத்த நிலையும் சொரூப நிலையும் உள்ளன. அறிவாம் உருவாகிய இறைவன் ஓர் உணர்சிப் பொருள் என்பதை திருவருட் பயனில் பதிமுது நிலையின் கடைசியில் -

உன்னும் முளதைய மிலது உணர்வாய் ஓவாது
மன்னுபவம் தீர்க்கும் மருந்து

எனக் கூறியுள்ளார். இதிலிருந்து இறைவன் பிறவிப் பிணியை தீர்பவன் எனவும் உணர்ச் சிப் பொருளாய் உள்ளவன் எனவும் அறிகிறோம். மனிதனின் அறியாமை நிலைக்குக் கார ணம் மனிதனிலுள்ள ஆணவமாகும் ஆணவம் ஓர் உணர்வு. ஆணவமாகிய உணர்வை நீக்கு வதற்கு உணர்விற்கு உணர்வாகிய இறைவனால் தான் முடியும். உலகில் தலை சிறந்த விஞ்ஞானிகளில் ஒருவரான அயன்ஸ்ரைனின் இறைவனைப் பற்றிய கருத்துகளும் உமாபதி சிவாச்சாரியாரின் கருத்துகளும் பெரும்பாலும் ஒரே கருத்தை உடையனவாக உள்ளன. சமயங்கள் பற்றி ஒரு சந்தர்ப்பத்தில் அயன்ஸ்ரைன் பின்வருமாறு கூறினார்.

The most beautiful and the most forofound emotion . That we can experience in the sensation of the mystical.

ஆழ்ந்த அறிவுடன் கூடிய இன்ப உணர்வு நிலையை ஒருவன் பெறவேண்டில் அது இறையருளுடன் கூடிய ஆன்ம ஞானம் பெற்றவனின் (mystic) நிலையாகத் தானிருக்கும்.

அவ்வகைப்பட்ட ஆச்சரியமான உணர்வு நிலையை அறியாது அதில் ஆழ்ந்து அனுபவியாது ஒருவன் இருப்பனாகில், அவன் ஓர் நடைபிணத்திற்கு ஒப்பானவன். இந்த உணர்வே உண்மை யான விஞ்ஞானத்தைக் கொடுக்கிறது. He to whom this emotion is a stranger is as good as dead it is the sower of all science.

மேலும் அவர் கூறியது எமது சிந்தனைக்கு எட்டாத மிக நுண்ணிய இன்ப உணர்வு இருக்கிறது. அவ்வுணர்வு உச்ச நிலையிலுள்ள அறிவுப் பொருளாகவும் அழகான ஒளிரும் கதிர்களையுடையதாகவும் உள்ளது. அதனை எங்கள் அறிவு மிகக் குறைந்த அளவிலேதான் அறிய முடியும். இவ்வகையான அறிவும் நுண்மையான உணர்வும்தான் எல்லாச் சமயங்களி லும் காணப்படுகிறது.

To know what is Impenetrable to us really exist manifesting itselt as the highest wisdom and the most radient beauty. This knewledge this beeling is at the centre of all relegiouness.

உமாபதி சிவாச்சாரியர் கூறியது "அறிவாம் உரு" என்பது "உணர்வாய் (Sensation) மன்னுபவம் தீர்க்கும்" என்ற கருத்தும் அயன்ஸ்ரீனின் Highest wisdom and Sensation of the mystical என்ற கருத்துகளிலும் ஒற்றுமையுண்டு.

மேலும் அயன்ஸ்ரீன் கூறுகிறார் இப்பிரபஞ்சச் சமயவுணர்வு விஞ்ஞான ஆராய்ச்சிக்கு முதுகெலும்பு போல் உள்ளது. இப்பிரபஞ்சத்தின் தொடக்க நிலை அதன் ஒழுங்கும் கட்டுப் பாடும் மிகவும் புதிராக உள்ளது. இப்படி புதிராக இருந்தும் விஞ்ஞானிகள் கடவுள் என்ற சொல்லை உபயோகிப்பதில்லை. ஆனால் நான் அளவு கடந்த உச்ச நிலையிலுள்ள உணர் வுப் பொருளைப் பார்த்து ஆச்சரியமடைகிறேன். கடவுள் மிகச் சிறிய மாற்றங்களிலும் தன்னை வெளிப்படுத்துகிறார். இயற்கையில் ஒப்பற்ற சிறந்த சிந்தனையுடைய ஓர் சக்தியுள்ளது. எனது உணர்ச்சிவசப்பட்ட திட நம்பிக்கையான ஒப்பற்ற சிந்திக்கும் ஆற்றல் பெற்றதொன்றை இப்புதிரான இப்பிரபஞ்சத்தில் வெளிப்படுவதையே எனது இறைவன் என்ற கருத்தாகும். The deeply emotional conviction of a superior reasoniny power which is revealed in the incomprehensivle universe forms my Idea of God.

மணிவாசகர் இறைவனின் சொருபத்தை விளக்குவதற்கு திருச்சதகத்தில் சுட்டறுத்தல் பகுதியில் 26ஆம் பாடலில் விளக்குகிறார். சிந்தனை நின் தனக்கு ஆக்கி நாயினேன் தன் கண்ணினை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி .............. செந்தாமரைக் காடு அனையமேனித் தனிச்சுடரே எனக் கூறுகிறார். அயன்ஸ்ரீன், இறைவனைப் பற்றிக் கூறும்பொழுது "Radient beauty" உள்ளவர் என்றே கூறுகிறார் காடு முழுவதும் செந்தாமரை மலர் இருந்தால் எப்படி இருக்குமோ அதுவே இறைவனின் மேனி என்கிறார் அநேக மலர்களைப் பார்க்கும்பொழுது தீச்சுவாலை போன்ற தோற்றப்பாடு இருக்கலாம். ஆனால் தீயில்லை செந்தாமரைக் காடுதான் உள்ளது. எனவே சுடர் குளிர்ச்சியுடையது. அங்கே சுகந்தமான காற்றுத்தான் வீசும் எனவே பார்ப்பது தீச்சுடரல்ல என்பதனால் தனிச் சுடரே என விளிக்கிறார் மணிவாசகர் இதனால்த்தான் அம்பிகை மஹாபத்மாடந் ஸம்ஸ்தா என உபநிடதத்தில் கூறப்பட்டுள்ளது. அதாவது புஸ்பம் நிறைந்த காட்டில் வசிப்பவள் எனக் கூறுகிறது. உபாசனைக்குரிய இறைவன் அனுபூதிமான்களிற்கு ஒளியாக மிளிர்கிறான். விஞ்ஞானியின் Radient beauty என்ற சொல் அர்த்தமுடையதாகிறது.

நீங்கள் எந்தச் சமயத்தில் (Religion) ஈடுபாடு அதிகம் என்று கேட்டபொழுது அவர் கூறியது "My religion consists of humble admiration of the illimitable superior sprit who rebeal himself in the slight details we are able to perceive with our frail and feeble mind" உலகிலே அளவுகடந்த கடந்த அதிக உச்ச நிலையிலுள்ள உணர்வுப் பொருளைப் பார்த்து ஆச்சரியமடைகிறேன். அதனை அறிவதற்கு எங்கள் அறிவோ மூளையோ ஈடுகொடுக்க முடியாது. பொருட்கள் அதிக சக்தியுள்ளது. அதன் உற்பத்தியை அறிய முடியாதுள்ளது என்று கூறியுள்ளார். இறைவன் என்ற பதத்திற்கு விளக்கம் கேட்ட பொழுது அவர் கூறியது The deeply emotional conviction of the presence of a superior reasoning power which revealed in the incomprehensible universe forms my idea of God. அதி உயர்ந்த தர்க்க ரீதியாக நிறைவான வழிகாட்டும் சக்தி ஒன்று உளது. எங்கள் விளக்கத்திற்கு அப்பாற்பட்ட பிரபஞ்சத்தில் உள்ள அச்சக்தியையே எனது இறைவன் என்று கூறுவேன்.

(தொடரும்...

---

# இன்ப வீடு....!

அதிசயம் அநேக முற்ற – சந்நிதி
விதிவசம் விலக்கி தீர்க்கும் – சந்நிதி
கதியிழந்த காலை தஞ்சம் – சந்நிதி
துதி செய்வார்க் கருளும் தெய்வ சந்நிதி

முத்து தமிழ் மாலை முருகனுக்குச் சூடு
முருகனடியாரை தினம் கூடு
அந்தமில் அழகனையே நாடு
அவனடியை அன்போடு தேடு
சிந்தையில் நினைத்தவனைப் பாடு
சேராது உன்னை ஒரு கேடு



கந்தன் கதை கூறும் – ஏடு
கந்த புராணத்திற்கு ஏது – ஈடு
கந்தன் ஆறு படை – வீடு
அவை யாவுமே அருள் மலை – வீடு
செந்திலோடு கடலாடும் செல்வச்
சந்நிதி அவன் இன்ப – வீடு


கா. கார்த்திகேசு
நல்லூர்.

(தொடர்ச்சி...



# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்கு முன்பு 1987இல் வடமராட்சியில் இராணுவ நடவடிக்கை முடிவடைந்து சில மாதங்களின் பின் முருகேசு சுவாமிகளின் முயற்சியினால் ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. தொடர்ந்து கும்பாபிஷேக நிகழ்வுகளும் நித்திய பூசைக்கான செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்படுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இத்தகைய சூழ்நிலையில் மயில்வாகன சுவாமிகளின் சீடனாக இருந்து செயற்பட்ட மோகனதாஸ் சுவாமிகள் மயில்வாகன சுவாமிகள் சமாதியடைந்துவிட்ட அந்த சூழ்நிலையில் ஆலயத்தில் நித்திய பூசைகள் ஆரம்பிக்கப்படுகின்ற அதேநேரத்தில் அங்கே கூடுகின்ற அடியவர்களுக்கு நித்திய அன்னதானப்பணியை மேற்கொள்ளவேண்டியதன் அவசியத்தை நன்கு உணர்ந்துகொண்டார்கள். ஆனாலும் இக்காலகட்டத்தில் இவ்வாறான

அன்னதானச் செயற்பாட்டிற்கு உதவிகள் ஒத்தாசைகளை யாரிடமும் கேட்கமுடியாத ஒரு விரக்தியான சூழ்நிலையே அப்பொழுது மக்கள் மத்தியில் நிலவியது. இவ்வாறான ஒரு இக்கட்டான சூழ்நிலை நிலவியபொழுதிலும் இது சந்நிதி முருகனின் காரியம். ஆகவே எப்படியும் நித்திய அன்னப்பணியைத் தொடங்கத்தான் வேண்டும் என சுவாமிகள் சிந்தித்து செயற்பட ஆரம்பித்தார்கள். இன்று ஆச்சிரமம் அமைந்திருக்கும் அதே வீதியில் அப்பொழுது செயற்படாதிருந்த அரசம்மா மடம் என்ற அந்த மடத்தை சில வருடங்களுக்கு பாவனைக்கு எடுத்து சந்நிதியான் ஆச்சிரமம் என்ற பெயருடன் அதனைச் செயற்படுத்த ஆரம்பித்தார்கள்.

அங்கே செயற்படாதிருந்த அந்த மடத்திற்கு செய்ய வேண்டிய திருத்தவேலைகளைச் செய்து, சமைக்கின்ற பாத்திரங்கள் உட்பட அனைத்துப் பொருட்களையும் சிறிது சிறிதாக கொள்வனவு செய்து சந்நிதியான் ஆச்சிரமம் என்ற பெயருடன் அங்கே அன்னதானப்பணியை சுவாமிகள் ஆரம்பித்தார்கள். உண்மையில் அந்தச் சந்தர்ப்பத்தில் ஆலயத்தை தரிசிக்க வருகின்ற அடியவர்களின் பசிப்பிணியைப் போக்குகின்ற ஒரே ஒரு மடமாக சந்நிதியான் ஆச்சிரமம் மட்டுமே செயற்பட்டது குறிப்பிடத்தக்கது. தற்பொழுது சந்நிதியான் ஆச்சிரமம் நிரந்தரமாக அமைந்திருக்கும் இடத்தில் இடம் மாற்றப்பட்டு அன்னதானச் செயற்பாட்டுடன் ஆன்மீகச் செயற்பாடுகளையும், சமூகப் பணிகளையும் விரிவுபடுத்தி வந்துள்ளதை அடியார்கள் நன்கு அறிவார்கள்.

இந்த நிலையில்த்தான் ஆச்சிரமத்திற்கு சொந்தமான காணியில் புதிய வைத்திய சாலைக் கட்டிடம் அமைக்கும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது. இக்கட்டிடம் வைத்தியசேவை மற்றும் முன்பள்ளி ஆகிய முக்கிய செயற்பாடுகளுக்காக அமைக்கப்பட்ட அதேநேரம் நன்கு திட்டமிடப்பட்டு பல்வேறு வசதிகளுடன் அழகாக அமைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒருவர் புதிதாக ஒரு வீட்டை அமைக்கும் பொழுது என்னென்ன பிரச்சனைகளை, கஷ்டங்களை எதிர்கொள்வாரோ அத்தகைய பிரச்சனைகளை எல்லாம் இக்கட்டிடம் அமைக்கும் பொழுதும் ஆச்சிரமத்தின் சுவாமிகள் எதிர்கொள்ளவேண்டித்தான் ஏற்பட்டது. கட்டிடம் 01.01.2010 வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது. முதல் நாள் இரவு இரண்டு மணிவரை கட்டிடத்திற்கான வர்ணப் பூச்சு வேலைகள் மேற்கொள்ளப்பட்டே வேலைகள் முடிக்கப்பட்டன. இதே போன்று இக்கட்டிட வேலைகளை நிறைவு செய்தமை தொடர்பாக இன்றும் சில கடன்களை அடைக்க வேண்டியும் உள்ளது. ஆனாலும் இவ்வாறான இயல்பான சில கஷ்டங்கள் இருந்தாலும் இவற்றைக் கடந்து மிக மோசமான நெருக்கடிகளையோ, மிகமோசமான தடைகளையோ மிக மோசமான கஷ்டங்களோ இல்லாமல் குறிப்பிட்ட கால எல்லைக்குள் அதாவது ஆறுமாத கால எல்லைக்குள் இந்த வைத்தியசாலைக் கட்டிடம் அமைக்கப்பட்டுவிட்டது என்பதுதான் யதார்த்தமானது.

இவை எல்லாம் இயல்பான விஷயங்கள் தானே எனச் சிலர் கருதலாம். உண்மையில் இது இயல்பான ஒன்று அல்ல. முற்றும் முழுதாக சந்நிதியானது திருவருளின் துணையுடன் அவனது ஆசீர்வாதத்துடன்தான் இந்தக் கட்டிடச் செயற்பாடு நிறைவேறியுள்ளது என்பதை ஆச்சிரமத்தின் சுவாமிகளும் இக்கட்டிட வேலைகளுடன் தொடர்புள்ளவர்களும் நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்கள். இதனை உறுதிப்படுத்தும் வகையிலான ஒரு சிறிய சம்பவத்தையே இங்கே நாம் அடியார்களுக்கு வழங்குகின்றோம்.

வலிகாமப் பகுதியைச் சேர்ந்த இந்த விவசாயக்குடும்பத்தினர் பல வகைப் பட்ட பயிர்களையும் பயிரிடுகின்ற உயிர்த்துடிப்பான ஒரு விசாயக்குடும்பமாகும். இவர்கள் தமது தோட்டத்தில் காய்க்கின்ற தேங்காய் மற்றும் மரக்கறி மரவள்ளிக்கிழங்கு போன்றவற்றை சந்நிதியான் ஆச்சிரமத்தினது நித்திய அன்னதானப் பணிகளுக்காக நிறைவாக வழங்குகின்ற வழக்கம் உள்ளவர்கள். யாழ்ப்பாணம் சென்று வருகின்ற சந்தர்ப்பங்களில் அந்த மரக்கறி வகைகளை ஆச்சிரமத்திற்கு கொண்டு வருவதற்காக ஆச்சிரமத்தின் சுவாமிகள் அவர்களின் வீட்டிற்கும் சிலவேளைகளில் செல்வதுண்டு. இதேபோன்று தான் 2009ஆம் ஆண்டு ஒரு நாள் அந்த விவசாயக் குடும்பத்தினர் வீட்டிற்கு சுவாமிகள் செல்லவேண்டிய ஒரு தேவை ஏற்பட்டது. அப்பொழுது அங்கே இவர்களது வீட்டில் ஒரு சிறிய விடயம் தொடர்பாக முடிவு எடுக்கமுடியாது, தமக்கிடையே கருத்துக்களை பரிமாறிக்கொண்டிருந்ததை சுவாமிகள் அவதானித்தார்கள். அதாவது அவர்களது நிலத்தில் பயிர்செய்த பணப்பயிரான புகையிலையை அப்படியே விற்பனை செய்வதா?, அல்லது அவற்றை பதப்படுத்திய பின் விற்பனை செய்வதா? இதில் எதனைச் செயற்படுத்துவது என்பது தொடர்பாகவே அவர்கள் தமக்குள் விவாதித்துக்கொண்டிருந்தனர்.

இத்தகைய குழப்பமான உரையாடலை அவதானித்த ஆச்சிரமத்தின் சுவாமிகள் கதையுடன் கதையாக இதனை நீங்கள் பதப்படுத்தி விற்பனை செய்யலாம் தானே? அவ்வாறு செய்தால் உங்கள் வருமானம் உயர்வாகக் கிடைக்கும் தானே?, என தமது மனதில் தோன்றிய அபிப்பிராயத்தை ஆலோசனையாக அவர்களிடம் வெளிப்படுத்தினார்கள். அதன் பின் அங்கேசென்ற அலுவலை நிறைவு செய்துகொண்டு அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு இயல்பாக ஆச்சிரமம் திரும்பிவிட்டார்கள்.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு சில மாதங்களின் பின் இந்தக் குடும்பத்தினர் ஆச்சிரம சுவாமிகளிடம் ஒரு இலட்சம் ரூபா பணத்தை கையளித்து இதனை நீங்கள் தற்பொழுது நிர்மாணித்துக் கொண்டிருந்த வைத்தியசாலைக் கட்டிடத்திற்குரிய கூரைச்சீற்றுக்குப் பயன்படுத்துங்கள் எனவும் குறிப்பிட்டார்கள். வழமையாக நித்திய அன்னப்பணிக்கு தாராளமாக பங்களிப்பு செய்யும் இவர்கள் வைத்தியசாலைக் கட்டிடத்திற்கும் நான் கேட்காமலே பங்களிப்பு செய்கிறார்கள் என தனது மனதிற்குள் சஞ்சலப்பட்ட சுவாமிகள் தனது ஆதங்கத்தை அவர்களிடமே வெளிப்படுத்தினார்கள். அதற்கு அவர்கள் இது சந்நிதியானது பணம்தான். அவனுக்குரியதுதான் என்று எடுத்துக் கூறினார்கள்.

ஆம்! ஆச்சிரமத்தின் சுவாமிகள் கூறியபடி அவர்கள் தமது புகையிலையை பதப்படுத்தி அதன்பின் அதனை விற்பனை செய்ததனால் தமக்கு தற்பொழுது ஆச்சிரமத்திற்கு வழங்கிய தொகையைவிட பலமடங்கு வருமானம் கிடைத்தது பற்றியும் சந்நிதியானது திருவருளையும் அவனது அற்புதத்தையும் எடுத்துக் கூறி அகமகிழ்ந்தனர்.

ஆம்! இது போன்ற பல சந்நிதியானது அடியவர்களின் உதவிகள் ஒத்தாசைகள் மூலம் உருவாக்கப்பட்டதுதான் இந்த வைத்திய சேவைக்கட்டிடமாகும். இதே போன்று இக்கட்டிடத் திறப்பு விழாவும் சந்நிதியான் ஆச்சிரமம் என்ற குடும்ப உறுப்பினர்கள் பங்கு பற்றிய விழாவாகவே அமைந்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. ஆம், இக்கட்டிடத்தால் பயன் பெறக்கூடிய ஆலயத்தில் தங்கியுள்ள சாதாரண அன்பர்கள், இக்கட்டிடத் திறப்பு விழா நடைபெறும் என்ற பத்திரிகைச் செய்தியை பார்த்து ஒன்று கூடிய சந்நிதியானது அடியவர்கள்

மற்றும் அமரர் தி. மகேஸ்வரன் அவர்களின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட கட்டிடமாகையால் அவர்களது குடும்பத்தினர் ஆகியோரும் இதில் பங்கு பற்றியிருந்தனர்.


அதுமட்டுமன்றி ஆச்சிரமத்தின் சகல பணிகளுக்கும் ஒத்தாசை வழங்கிக் கொண்டிருக்கும் வலிகாமப் பகுதியின் சண்டிலிப்பாயைச் சேர்ந்த துர்க்கா மரக்காலை உரிமையாளராகிய இ. இராசநாயகம் அவர்களும், குப்பிளானைச் சேர்ந்த திரு. செ. நவரட்ணராசா குடும்பத்தினரும் கட்டிடத்தின் இரு நுழைவாயில்களையும் சம்பிரதாயபூர்வமாக நாடா வெட்டி திறந்து வைக்க, அமரர் தி. மகேஸ்வரன் அவர்களின் மூத்த புதல்வி செல்வி ம.பவதாரணி தனது தந்தையாரின் நினைவாக அமைக்கப்பட்ட கட்டிடத்தின் பெயரை திரைநீக்கம் செய்து வைத்தது குறிப்பிடத்தக்கது.

ஆம் சந்நிதியான் ஆச்சிரமமும் அதனுடன் தொடர்புள்ளவர்களும் ஒரு குடும்பமாகவே செயற்படுகின்றனர். இந்தக் குடும்பத்தில் சந்நிதியானே குடும்பத் தலைவனாகச் செயற்படுகின்றான் சந்நிதியான் என்ற குடும்பத்தலைவன் இட்ட பணிகளை நாங்கள் எல்லோரும் செயற்படுத்துகின்றோம் என்ற உணர்வுடனேயே எல்லா விடயங்களும் இங்கே செயற்படுத்தப்படுகின்றன.

ஓம் முருகா!

## சேக்கிழார் சொன்ன தீர்க்க தரிசனம்!

போலித் துறவிகள் வேட தாரிகள்
போடும் நாடகம் சேக்கிழார் சொல்கிறார்
போலி வேடம் ஆதி சூரன்
போட்டுக் கொண்டு ஏக நாதரை
தோல்வி யுறச்செய் துவெற்றி பெறுகிறான்
தோன்றிய திருநீ றுவேடத் தாலே
வேலை செய்யும் தொழிலில் தோற்றதால்
வேடம் தானே உதவும் அவர்க்கு



பதவி மோகம் கொண்டவர் புகுந்திடப்
பக்தி மார்க்கம் தான்வழி யாகும்
சதியி னாலே மெய்ப்பொருள் தன்னை
சந்தித் துவெல்கிறான் முத்த நாதன்
பதவியைப் பறிக்கப் போலி வேடம்
பயன்படு கின்றது என்கிறார் சேக்கிழார்
தத்தன் போன்ற பாமர ராலே
தானது கண்டு அகற்ற முடியும்

வ. யோகானந்தசிவம்

# செய்திச் சிதறல்கள்

- பகவான் ஸ்ரீராம கிருஷ்ணரின் 175ஆவது ஜயந்தி தினவிழா பருத்தித் துறை ஸ்ரீ ராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் செவ்வாய்க்கிழமை 16.02.2010 அன்று பக்தி பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது

- யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்ட பத்தில் சைவபரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் 19.02.2010 வெள்ளிக் கிழமை அன்று புண்ணிய நாச்சியம்மையார் தினம் விசேட நிகழ்வுகளோடு கொண்டாடப்பட்டது.

- வடமராட்சி வதிரி கரவெட்டியில் அமைந்துள்ள ஸ்ரீ பரமானந்தா சிறுவர், முதியோர் இல்லத்தில் புனரமைக்கப்பட்ட கட்டடத் திறப்பு விழாவும் மலர் வெளியீட்டு நிகழ்வும் 21.02.2010 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

- கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலையில் வெளியிடப்படும் ஆன்மீக விழுமிய காலாண்டு இதழ் அறிமுக விழா 22.02.2010 சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையில் இடம்பெற்றது.

- தவத்திரு ஸ்ரீலஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலைப்பயிற்சி பருத்தித்துறை ஞான சம்பந்தர் கலா மன்றத்தில் 27.02.2010 - 01.03.2010 வரை இடம்பெறவுள்ளது.

- வலி. வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக கலாசார பேரவையினால் அப்பிரதேசத்தைச் சேர்ந்த கலைஞர்களின் விவரங்கள் அடங்கிய கலைப் பூமி எனும் நூல் வெளியிடப்படவுள்ளது.

- தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்ல 28ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு விழாவும் 07.03.2010 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையில் ஸ்ரீ துர்க்காதேவி அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# திருவாரூர்

– வல்லையூர் அப்பாண்ணா அவர்கள்–

**சப்த விடங்கத் தலங்கள் :**

முசுகுந்தன் இந்திரனிடமிருந்து பெற்று வந்த ஏழு தியாகேசர்களில் அஜபா தியாகரைத் திருவாரூரிலும், ஏனையவற்றை இன்னும் ஆறு ஊர்களிலும் பிரதிஷ்டை செய்தான். திருவாரூரில் தியாகேசர் வந்தமர்ந்த நாள் மாசிமாத அட்டமித் திருநாள். அன்றிலிருந்து, தியாகேசரின் பிரம்மோற்சவம் மாசி மாத அட்டமியன்று தொடங்கி, பங்குனி உத்திரத்தன்று நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறுகிறது. இந்தத் தீர்த்தப் பெருவிழாவும் கமலாலயக் குளத்திலேயே நடைபெறுகிறது.

**ராஜ நாராயண திருமண்டபம்:**

ஆரியன் கோபுரத்தைத் தாண்டி இரண்டாம் பிரகாரத்தின் உள்ளே நுழைகிறோம். முதலாம் குலோத்துங்க மன்னனால் கட்டப்பட்ட பரந்த பெரிய மண்டபம் தனியாகக் கொடிமரம், பலிபீடம், நந்தி ஆகியவையும் கொண்டு 155 அடி நீளமும் 57 அடி அகலமும் கொண்ட இந்த மண்டபம் "ராஜ நாராயண மண்டபம்" என அழைக்கப்படுகிறது. பங்குனி உத்திரத் தீர்த்தப் பெருவிழா முடிந்த பின்னரும், மார்கழித் திருவாதிரைத் திருவிழாவின்போதும் தியாகேசர் இங்குதான் எழுந்தருளுவார். மண்டபத்தின் வலதுபுறம் துர்க்கையும் இடதுபுறம் விநாயகரும் உள்ளனர்.

**அசலேஸ்வரம் :**

இரண்டாம் பிரகார கிழக்குச் சுற்றில் வரிசையாகப் பல லிங்கங்களும் அன்னதான மண்டபமும் காணப்படுகிறது. தெற்குச் சுற்றில் திரும்பினால், தஞ்சைப் பெரிய கோயிலின் சாயலை ஒத்த "அசலேஸ்வரம்" தனிக்கோயில் காணப்படுகிறது. அசலேஸ்வரம் திருநாவுக்கரசரால் "ஆரூர் அரநெறி" எனப் பாடப்பெற்ற கோயிலாகும். முன் மண்டபம் தாண்டி உள்ளே சென்றால் இடதுபுறம் நடராஜரும், வலதுபுறம் நமிநந்தியடிகள் கழற்சிங்க நாயனார் போன்றோரின் திருவுருவங்களும் காணப்படுகின்றன. சிறிய கருவறையில் "அசலேஸ்வரர்" அல்லது "அரநெறி நாதர்" அழகாக அருள் பாலிக்கிறார். அம்பிகை "புவனேஸ்வரி" அல்லது "வண்டார்குழலி" எனப்படுகிறார்.

*எந்த மாதவம் செய்தனை நெஞ்சமே*
*பந்தம் வீடவையாய பராபரன்*
*அந்தமில் புகழாரூர் அரநெறி*
*சிந்தையுள்ளும் சிரத்துளும் தங்கவே*

- அப்பர் பாடல்

# சப்த விடங்கத் தலங்கள்

"விடங்கம்" என்பது வி + டங்கம் எனப் பிரியும். "டங்கம்" என்றால் உளி. "உளியால் செதுக்கப்படாத" என்பதைக் குறிப்பது "விடங்க" என்ற சொல். உளியால் செய்யப்படாது, சுயம்புவாகத் தோன்றிய சிவலிங்கங்களை "விடங்கர்" எனக் குறிப்பிடு கின்றனர். தியாகேசர் கோயில் கொண்டருளிய திருத்தலங்கள் ஏழிலும் சுயம்புலிங்கமாக சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். இந்த லிங்கத் திருமேனிகள் அந்தந்தத் திருத்தலங் களில் தியாகேசருக்கு அருகில் ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கும். ஒவ்வோர் ஊரி லும் விடங்கருக்கு வெவ்வேறு பெயர்கள் உண்டு. திருவாரூரில் இருப்பவர் வீதி விடங்கர். தியாகேசர் சந்நிதியில் தியாகேசருக்கு வலப்பக்கமாக உள்ள ஒரு பேழையில் எழுந்தருளி யிருக்கிறார் வீதிவிடங்கர். கையடக்கமான சிறிய சிவலிங்கம். மூன்று வேளையும் அவருக்கு அபிஷேகம் உண்டு.

## *சப்த விடங்கத் தலங்களும் அங்கு இறைவன் ஆடும் நடனங்களும்*

| | | |
|---|---|---|
| **திருவாரூர்** | **- வீதிவிடங்கர்** | **- அஜபா நடனம்** |
| **நாகபட்டினம்** | **- சுந்தரவிடங்கர்** | **- தரங்க நடனம் (கடல் அலை)** |
| **திருநள்ளாறு** | **- நகவிடங்கர்** | **- உன் மத்த நடனம் (பித்துப் பிடித்தவனின் ஆட்டம்)** |
| **திருமறைக்காடு (வேதாரண்யம்)** | **- புவனிவிடங்கர்** | **- ஹம்ஸபாத நடனம் (அன்னம்)** |
| **காராயில்** | **- ஆதிவிடங்கர்** | **- குக்குட நடனம் (கோழி)** |
| **திருவாய்மூர்** | **- நீலவிடங்கர்** | **- கமல நடனம் (தாமரை)** |
| **திருக்கோளிலி** | **- (திருக்குவளை)** | **- அவனிவிடங்கர் பிருங்க நடனம் (வண்டு)** |

தினமும் அரநெறி அண்ணலுக்கு விளக்கெரிக்கும் தொண்டுபுரிந்து வந்தவர் நமிநந்தி யடிகள். ஒருநாள் விளக்கெரிக்க எண்ணெயோ நெய்யோ கிடைக்காது வருந்தமுற்றிருந்த வேளையில் இறைவன் திருவாக்குப்படி கமலாயக் குளத்து நீரைவிட்டு விளக்கேற்றிய அதிசயம் நிகழ்ந்தது இந்த "அசலேஸ்வரம்" திருக்கோயிலிலேதான்.

**கழற்சிங்கன் வரலாறு:**

"திருபள்ளித் தாமம்" எனப்படும் அசலேஸ்வரத்து முன் மண்டபம் கோயிலுக்கான பூமாலைகள் தொடுக்கப்படுகின்ற இடம். இங்கே மூலைக்கு மூலை பூக்கள் குவியல் குவியலாகக் காணப்படுகின்றன. இந்த இடத்தில் இன்னுமொரு மெய்சிலிர்க்கும் சம்பவம் நடந்தேறியது. மன்னன் கழற்சிங்கனும் அரசியாரும் அரநெறிநாதரைத் தரிசிக்க வருகிறார் கள். கீழே கிடந்த ஒரு பூவை எடுத்து முகர்ந்த அரசியாரின் மூக்கை அரிந்துவிட்டார் பூமாலை தொடுத்துக் கொண்டிருந்த "செருத்துணை" என்பார். அரசியார் அலற, அடியவரின் செயலுக்குக் காரணம் கேட்டறிந்த கழற்சிங்கன் தண்டனை போதாது எனக்கண்டு, "மலரை முகர்ந்து பார்க்க எடுத்துக் கொடுத்த கையை அல்லவா துண்டிக்க வேண்டும்" என்று சொல்லி

அரசியாரின் கையை வெட்டி விட்டான். செருத்துணையாருக்கும் கழற்சிங்கனுக்கும் அரசியாருக்கும் அரநெறிநாதர் இன்னருள் புரிந்தார். அரசியாரின் அங்கங்கள் பழையபடி ஆயிற்று.

**இரண்டாம் பிரகாரம் - தொடர்ச்சி :**

இரண்டாம் பிரகாரத்தின் தெற்குப் பக்கம் ஒரு மணிமண்டபம் காணப்படுகிறது. அதன் அருகே நின்று பார்த்தால் திருக்கோயிலின் ஏழு கோபுரங்களும் ஒருங்கு சேர தெரிகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். ராகுகால துர்க்கை சந்நிதி இங்கு பிரபல்யமானது. ராகுகால வேளையில் துர்க்கைக்கு நடைபெறும் பூசைகாண பெண்கள் கூட்டம் நிரம்பி வழியும். இரண்டாம்பிரகார வடக்குச் சுற்றுவரை, எங்கும் லிங்கங்களும் மூர்த்தங்களும் நிறைந்து காணப்படுகின்றன. திருவாரூர் கோயிலுக்கு உள்ளே வந்துவிட்டால் "கூப்பிய கரங்களை எடுக்கவே முடியாது" என ஒரு அன்பர் தெரிவித்தது ஆயிரம் முறையும் சரியானதே என்பதை நேரில் கண்டுகொண்டோம்.

**வன்மீகநாதர் சந்நிதி :**

நாம் இப்போதுதான் உட்பிரகாரத்தினுள் நுழைகிறோம். அழகிய துவாரபாலகர்கள் இரு புறமும் கொண்ட உட்கோபுரமான "அழகியான் கோபுரம்" கடந்து, சந்நிதிக்கு முன்பாக உள்ள நர்த்தன மண்டபம் பலிபீடம் நந்தி தாண்டி, இடப் பக்கவாயில் வழியாக கருவறைப் பகுதிக்குள் நுழைகிறோம். அர்த்த மண்டப வாசலில் உள்ள விநாயகரை வணங்கி உள்ளே சென்றால் வன்மீகநாதரின் திருவாயில் வருகிறது. வன்மீகநாதர் கம்பீரமாக அமர்ந்துள்ள கருவறைப் பகுதி "திருமூலட்டானம்" அல்லது "பூங்கோயில்" என்றழைக்கப்படுகிறது. வன்மீகநாதர் - புற்றிடங்கொண்டாரே திருமூலட்டானேஸ்வரராகும். கண்குளிரக் கண்டு கரம் குவித்து வணங்கி நிற்கிறோம். வன்மீகநாதரின் வலப்புறமாக அருகிலேயே "சோமகுலாம்பிகை" என்னும் திருநாமத்தோடு அருள்சக்தியாக அம்பிகை அமர்ந்துள்ளார். அர்த்த மண்டபச் சுவர் முழுவதும் நாயன்மார்க்களின் வண்ண ஓவியங்களைப் பார்த்து வியப்படைகிறோம்.

**தியாகேசப் பெருமான் சந்நிதி :**

வன்மீகநாதர் சந்நிதிக்குப் பக்கத்தில் தென்புறமாக கிழக்குப் பார்த்தபடி மற்றொரு சந்நிதி. பிரகாரச் சுற்றுப்பாதை வேறாக இருந்தபோதும், இரண்டு சந்நிதிகளுக்கும் இடையேயுள்ள குறுகிய பாதை வழியாக நாம் தியாகேசப் பெருமான் சந்நிதியினுள்ளே நுழைகிறோம். முதலில் வருவது பரந்த "தியாகராஜா மண்டபம்". அடுத்து தியாகேசரைப் பார்த்தபடி நிற்கும் நிலையில் நந்தி. சுந்தரருக்காக ஒரே இரவில் இருமுறை பரவையார் வீட்டுக்கு இறைவன் நடந்து போய் வந்தார் அல்லவா? இது நந்திக்கு சற்றேனும் பிடிக்கவில்லை. அதனால், இனி எங்கே புறப்பட்டாலும் தாங்கிப் போகத் தயாரான நிலையில் நந்தியெம்பெருமான்.

திருமாலுக்கு உலகம் முழுவதையும் கொடுத்து, செல்வம் அனைத்தையும் குபேரனுக்குக் கொடுத்து, உமையம்மைக்கு உடலில் பாதியைக் கொடுத்து, உண்மை பக்தர்களுக்கு வீட்டுப்பேறு கொடுத்து..... இவ்வாறு கொடுத்துக் கொடுத்து தியாகம் செய்தமையினால் தியாக ராஜாவானார் தியாகராஜர். தியாகேசர் சந்திக்கு நேர் எதிரே பிரகாரத்தில் சூரியன், ஆதித்யலிங்கம், பரவை நாச்சியார் சமேதராகச் சுந்தரர், கூடவே சேரமான் பெருமான் ஆகியோரும்

காலத்தின் மதிப்பு உனக்குத் தெரியும், அப்படியானால், உனக்கு வாழ்வின் மதிப்பும் தெரியும்.

உள்ளனர். இவற்றைவிட நால்வர் சந்நிதி, அறுபத்து மூவர் உற்சவ மூர்த்தங்கள் ஆகியனவும் காணப்படுகின்றன.

செல்வத் தியாகேசர் சந்நிதி பல்வேறு விளக்குகளின் அலங்கார ரூபத்துடன் பிரகாசிக்கிறது. அழகுத் தியாகேசர் ரத்தின சிம்மாசனத்தில் முழுமையான மலர் அலங்காரத்துடனும், சந்திர சூரியர் துலங்கும் கிரீடத்துடனும், அருகே இடப்பாகத்தில் அம்பிகையுடனும் வீற்றிருக்கிறார். இருவருக்கும் இடையே இளையவரான முருகன். மொத்தத்தில் தியாகேசத் திருவுருவம் சோமாஸ்கந்த மூர்த்தமேயாகும்.

தியாகேசரின் வலதுபுற மூலையில் ஒரு பீடமும், பீடத்தின் மேல் ஒரு பேழையும், பேழையினுள்ளே சிறிய கையடக்கமான மரகதலிங்கமும் உள்ளது. இவர்தான் முசுகுந்தன் இந்திரனிடமிருந்து பெற்று வந்த **வீதி விடங்கர்.** இவருக்கு மூன்று கால அபிஷேகம். உச்சிக்காலப் பூசை வேளையில் வீதி விடங்கருக்கு நடைபெறும் அற்புதமான அபிஷேகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. அர்ச்சகர் பீடத்தின் மேலுள்ள பேழையை எடுத்து வந்து சம்மணங்கொட்டி உட்காருகிறார். பேழையைத் திறந்து மரகதலிங்கத்தை வெளியே எடுத்து சிறிய பீடத்தின் மேல் வைத்து அபிஷேகத்தை ஆரம்பிக்கிறார். பால், தயிர், பஞ்சாமிர்தம் என மூல மூர்த்தங்களுக்கு நடைபெறும் பிரமாண்டமான அபிஷேகம்போல அனைத்தும் நடைபெறுகின்றன. சிறிய ஆவுடையார் பாணத்தின் கோமயத்தினூடாக வருகின்ற தீர்த்தத்தை ஏந்திக்கொள்ள மிகச் சிறிய செப்புச் செம்புகளைப் பாவிக்கிறார்கள். அபிஷேக முடிவில் பஞ்சாமிர்தமும் தீர்த்தமும் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. நமக்கும் ஒரு நாவல்பழமளவு கிடைத்தது. (தேவாமிர்தம்என்பது இது தானோ?) அபிஷேகம் - ஆராதனைகள் நிறைவெய்தியதும் வீதி விடங்கரைப் பேழையினுள் வைத்து, பேழை முழுவதும் மணம் வீசும் றோசா இதழ்களைப் பரவி நிறைத்து (விடங்களின்திருமுகம் நீங்கலாக) மூடிபழைய இடத்தில் வைக்கிறார்கள். இந்த இடத்தில் இதனைச் செய்து முடித்த அர்ச்சகர்பற்றி ஒரு வார்த்தை. அனைத்தும் நிறைவுபெறும்வரை வயது முதிர்ந்த அந்த அர்ச்சகர் காட்டிய பயம் மிகுந்த பக்குவம் இருக்கிறதே! அது எந்தத் திருக்கோயிலிலும் காணாததொன்று.

தியாகேசரை வணங்கித் தென்னவன் திருவாசலூடாக வெளியே வந்தால் தியாகேசரைச் சுற்றிய பிரகாரத்தில் அன்னபூரணி, பஞ்சமுக விநாயகர், பஞ்சமுக லிங்கங்கள், சுப்பிரமணியர், சித்திரபீடம், நேர் பின்னால் மகாலெட்சுமி சந்நிதி ஆகியவை உள்ளன. இவர்களுள்ளே புகழ் வாய்ந்த ஒரு விநாயகர் உள்ளார். அவர் பெயர் **வாதாபி கணபதி.**

**வாதாபி கணபதி :**

கர்நாடக சங்கீத வித்துவான்களெல்லாம் "வாதாபி கணபதிம் பஜே" என்ற முத்துஸ்வாமி தீட்சகரின் கீர்த்தனையைப் பாடி கச்சேரியை ஆரம்பிப்பதை பார்த்திருக்கிறோம் அல்லவா? அந்த வாதாபி கணபதி சாட்சாத் இவரேதான். கருவறைக்கு நேர் பின்புறம் உள்ள சுவர் மாடத்தில் துர்க்கை சந்நிதியும் இரண்டு சண்டேஸ்வரர்களும் உள்ளனர். மூலவர் கண்டர். அமர்ந்த கோலத்தில் தாடி ஜடா முடியுடன் முழங்காலில் முகத்தை தாங்கிக் கொண்டு மிகுந்த கவலையுடன் வீற்றிருக்கிறார் கண்டர். இதற்கும் ஒரு கதை உண்டு. திருவாரூரில் பிறப்பவர்கள் எல்லோரும் சிவகணங்களாக இருப்பதனால் இங்கே யமனுக்கு வேலையில்லை. இதனை எண்ணிப் பெருங்கவலை கொண்ட யமனை, "கவலைப்படாதே! உனக்கு யான் சண்டேஸ்வரர் பதவி தருகிறேன் என்று சமாதானம் செய்தாராம் இறைவனார்.

அதனால் இவர் எமசண்டேஸ்வரர். இவருக்கு அருகிலேயே நின்ற கோலத்தில் ஆதிசண் டேஸ்வரர் உள்ளார்.

**அம்பாள் "அல்லியங்கோதை" சந்நிதி :**

அழகியான் கோபுரம் தாண்டி வெளியே வந்து இடப்புறம் திரும்பினால் அம்பாள் சந்நிதி. "அல்லியங்கோதை" என்பது அம்பாள் திருநாமம். "நீலோத்பாலாம்பிகை" என்கிற வடமொழிப் பெயரும் வழக்கில் உண்டு. நின்ற திருக்கோலம். தோழிப் பெண் தன் தோளில் கந்தனைத் தூக்கி வைத்திருக்க, அம்பிகையின் இடக்கரம் முருகனைத் தொட்டுக் கொண்டி ருக்கும் காட்சியினைக் காண.... ஆஹா..... அற்புதம்.... அம்பிகையின் முகபாவம்... முருகனின் புன்சிரிப்பு.... தோழியின் முறுவல்... அருமை! அருமை!! இந்தக் கோலத்துக்கு "உமாஸ்கந்தம்" என்று சிறப்புப் பெயர் சொல்கிறார்கள். அங்கே தியாகேசர் சந்நிதியில் ஒரு "சோமாஸ்கந்தம்". இங்கே அம்பிகை சந்நிதியில் ஒரு "உமாஸ்கந்தம்". இரண்டிலும் ஸ்கந்தனே உடனிருப்பதை அன்பர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

அம்பிகையை வணங்கி ராஜநாராயண மண்டபம் கடந்து கிழக்குக் கோபுர வாசல் தாண்டி நேராக கிழக்கு வீதிக்கு வருகிறோம். கண்ணெதிரே உயர்ந்து நிற்கின்ற ஆழித்தேரின் அழகு நம்மைக் கவர்ந்திழுக்கிறது.

**ஆழித்தேர் :**

"திருவாரூர் தேரழகு" என்பார்கள். நாம் தியாகேசரைத் தரிசிக்கச் சென்றது பிரம்மோற் சவம் முடிந்த மறுநாளாகும். சனக்கூட்டம் எதுவுமற்ற அமைதியான வேளை அது. கிழக்குக் கோபுர வாசல் முன்பாக (வீதிக்கு மறுபக்கம்) ஐந்து தேர் முட்டிகளையும் நெருங்கியபடி ஐந்து தேர்களும் வரிசையாக நின்றிருந்தது. தியாகேசரும் பரிவார மூர்த்தங்களும் தேரில் இல்லையே தவிர, தேர்த் திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும் அப்படியே இருந்தன. நடுநாயக மாக நின்றிருந்த தியாகேசரின் தேரை நிமிர்ந்த பார்க்க கழுத்து வலிக்கிறது. அத்தனை உயரம் அது. அழகிய நான்கு குதிரைகள் தேரை இழுக்க, அவைகளை விரட்டும் சாரதியாக நான்முகன் வீற்றிருக்க, மேற்பகுதி முழுவதும் அலங்கார வர்ணச் சேலைகளினால் மூடப்பட்ட கட்டுத் தேராக (சித்திரத் தேர் அல்ல) இருந்தது. தேரின் கீழ்ப்பகுதி தியாகசேரின் பல அற்புதங்களைச் சித்தரிக்கும் சிறந்த மரச்சிற்பங்கள் கொண்டதாகக் காணப்பட்டது. வெளிப்புற மாக இருந்த நான்குசில்லுகளும் இரும்புக் கவசம் இடப்பட்டு உயரமுக்கத்தடை (HYDRALIC BRAKE) பூட்டப்பட்டிருந்தது. ஏனைய நான்கும் மரச் சில்லுகளாக உட்புறமாகக் காணப்பட் டன. தேர்ச் சில்லருகே நெருங்கி நின்றபடி வலது கையை நேராக மேலுயர்த்தினேன். வலது கையுக்கும் மேலாக ஒரு அடிவரை உயரமாக இருந்தது தேர்ச் சில்லின்விட்டம் எனின் தேரின் பிரம்மாண்டத்தை அன்பர்கள் ஊகிக்க வேண்டும். இரண்டு கைகளுள்ளும் அடங்காத அளவு கொண்ட பருத்த தேர் வடம் 4 வரிசைகளில் வீதியில் அப்படியே போட்டபடி இருந்தன.

நாம் விரும்பிய அளவுக்கும் அதிகமாகவே விபரங்கள் தெரிந்துகொள்ள அனுக் கிரகம் புரிந்த தியாகேசர் வீற்றிருக்கும் திசை நோக்கி தலைசாய்த்து கரம் குவித்து வணங்கி விடைபெற்று நமது அடுத்த திருக்கோயில் பயணத்தைத் தொடருகிறோம்.

# ஞானச்சுடர் 2010 மாசி மலர்

உ

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

**05.03.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "பிரணவமும் முருகனும்"

வழங்குபவர் :- திரு. ஆறுமுகம் கந்தையா அவர்கள்

[செல்வ விநாயக அடியார், சிறுப்பிட்டி]

✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡

**12.03.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை" (பக்கவாத்திய சகிதம்)

வழங்குபவர் :- திருமதி வாசஸ்பதி ரஜீந்திரன்

[பிரபல இசைக்கலைஞர்]

ரஜீந்திரன் சுரசாகித்தியன்

✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡

**19.03.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡✡✹✡

**26.03.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

## ஞானச்சுடர் 147 ஆவது மாத வெளியீடு

## பங்குனி 2010

வெளியீட்டுரை :- திரு. வ. கணேசமூர்த்தி அவர்கள்

[அதிபர், யா/ தொண்டைமானாறு வீ.ம.வி]

மதிப்பீட்டுரை :- திரு. காரை எம்.பி. அருளானந்தம் அவர்கள்

[ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்]

பதிவு இல. QD/46/NEWS/2010

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம் 2010

